www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 13 | பங்குனி (மார்ச்) 2006 | பக்கம்12 | விலை 15/- | சுழற்சி 89

# ஜெனிவா பேச்சுவார்த்தை

## மக்களுக்கு பெரும் ஏமாற்றம்.

கடந்த பெப்பவரி 22ம், 23ம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்ற அரசாங்கம்– புலிகள் இயக்கப் பேச்சுவார்த்தை மூன்று வருட இடைவெளிக்குப் பின் இடம் பெற்றது. இதனை வடக்கு கிழக்கு மக்கள் உட்பட சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களும் ஆவலோடும் அக்கறையோடும் எதிர்பார்த்தனர். ஆனால் உறுதியான தீர்மானங்களும் தெளிவான வரையறைகளும் எடுக்கப்படாது பொத்தாம் பொதுவானதும் பலவீனமானதுமான அம்சங்களுடனேயே பெயரளவிலான கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இதனால் ஆக்கபூர்வமான அர்த்தமுள்ள தீர்மானங்களை எதிர்பார்த்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது. அடுத்த கட்டப் பேச்சு வார்த்தைக்கு திகதி எடுத்துள்ளமை மட்டுமே உருப்படியான ஒன்றாகக் காணப்படுகின்றது. இந் நிலையில் மீண்டும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் தாக்குதல்கள் வன்முறைகள் தலைதூக்கி யுத்த சூழல் வந்து

### அரசாங்கம் பொறுப்புடன் நடக்கவில்லை.

கொள்ளுமோ என்ற அச்சமும் பீதியும் மக்கள் மத்தியில் தொடரவே செய்கிறது.

மேற்படி பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக அரசாங்கத் தரப்பு கூறுகிறது. புலிகள் செய்த யுத்த நிறுத்த மீறல்கள் பற்றியும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது பற்றியும் தாங்கள் முன்வைத்தவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பு மார் தட்டிக் கொள்கிறது. அதே வேளை துணைப் படைகளின் விவகாரத்தை இறுக்கிப் பிடித்து நின்றதன் மூலம் அரசாங்கம் இறுதியில் அவற்றிடமிருந்து ஆயுதங்களைக் களைய ஒப்புக் கொண்டமை தமக்கு கிடைத்த வெற்றி எனப் புலிகள் தரப்பிலும் கூறப்படுகிறது.

இவ்வாறு இருதரப்பினரும் மக்களிடையே எழுந்துள்ள அதிருப்தி எதிர்ப்புகளை கணக்கில் கொண்டும் சர்வதேச சமூகம் என்றழைக்கப்படும் மேற்குலக நாடுகளின் அழுத்தம் காரணமாகவுமே ஜெனிவாப் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர். ஆனால் அங்கு தத்தமது உள்ளார்ந்த நிலைப்பாடுகளின் அம்சங்களில் மிக இறுக்கமாகவே இருந்தனர். புலிகள் இயக்கத்தின் இருப்பிற்கு துணைப் படைகள் பெரும் அச்சுறுத்தல் என்பதால் அவ் விவகாரத்தை புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தையில் முன்னிறுத்தி அழுத்தி நின்றது. அதே வேளை புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகச் சர்வதேச சமூகத்திற்கு காட்டிக் கொள்ளவதற்கு அரசாங்கம் முயன்று நின்றது. அதன் காரணமாகவே புலிகள் இயக்கம் செய்த யுத்த நிறுத்த மீறல்களை ஐயாயிரத்திற்கு மேல் உயர்த்திக் காட்டி 96 வீதம் என அரசாங்கம் கணக்குச் காட்டியது.

தொடர்ச்ச 12ம் →

# குத்துக்கரணம் அடிக்கும் தலைமைகளுக்கும் கறைபடிந்த கரங்களுக்கும் மலையக மக்கள் வாக்களிப்பதா ?

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இ.தொ.கா, ம.ம.மு, ஐ.ம.த.மு ஆகிய வற்றுக்கு வாக்களிப்பதா அல்லது சதாசிவம், அருள்சாமி குழுவினருக்கு வாக்களிப்பதா? என்று மலையக மக்கள் குழப்பமடையத் தேவை இல்லை. இ.தொ.கா, ம.ம.மு தலைமைகளின் சுத்துமாத்துகள். சந்தர்ப்பவாதம் என்பன மக்கள் விரோத நடவடிக்கைகளேயாகும். அத்துடன் அதே சந்தர்ப்பவாதத்திற்கும் சுத்து மாத்திற்கும் மிக குறுகியகாலத்திலேயே அருள்சாமி, சதாசிவம் குழுவினரும் குறைந்தவர்களல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே இ.தொ.கா– ம.ம.மு – ஐ.ம.சு.மு கூட்டணியையும் அருள்சாமி, சதாசிவம் குழுவினரையும் நிராகரிப்பதே மலையக மக்கள் முன்னுள்ள ஒரே தெரிவாகும். அவற்றை நிராகரித்து மலையகத்தமிழ் மக்களுக்கு சரியான நேர்மையான தலைமையைக் கொடுப்போருக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்.

இத்தலைமைகள் பற்றிகடுமையான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் செய்துவிட்டு அதே கறைபடிந்தவர்களின் கைகளையே தொடர்ந்து பலப்படுத்தினால் மலையகமக்களுக்கு விடிவே ஏற்படப் போவதில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு பிறகு ம.ம.மு தலைவர் சந்திரசேகரனுக்கும் இ.தொ.கா தலைவர் ஆறுமுகனுக்கும் இ.தொ.காவை சேர்ந்த ஏனைய இரண்டு எம்.பிக்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதென தீர்மானித்த பிறகு, வாபஸ்பெறப்பட்டிருந்த விமானப்படை கமாண்டோ பிரிவிரின் பாதுகாப்பு ஆறுமுகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்திற்கு இ.தொ.காவும், ம.ம.மு யும் ஆதரவு கொடுப்பதாகக் கதைக்கப்படுகிறது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பல இடங்களில் இ.தொ.காவும் ம.ம.மு சேர்ந்து ஐ.ம.சு. முன்னணியின் வெற்றிலை சின்னத்தில் போட்டியிடுகின்றன. சில இடங்களில் ம.ம.மு யின் மண்வெட்டி சின்னத்திலும் இ.தொ.காவின் சேவல் சின்னத்திலும் போட்டியிடுகின்றன. இ.தொ.கா, ம.ம.மு தலைமைகள் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டே அவற்றின் இருப்பை பாதுகாத்துக் கொள்வது என்பதை விட அரசாங்கத்துடன் இணைவதற்கு வேறு காரணங்களை கூறத்தேவை இல்லை.

அந்த சந்தர்ப்பவாதத் தலைவர்கள் மலையக மக்களுக்கு விடிவு வரும் விமோசனம் கிடைக்கும் என்று கூறும் காரணங்களில் எவ்வித உண்மையும் இல்லை

தொடர்ச்சி 12ம் பக்கம் →

• புதிய அரசியல் பாதையில் • புதிய தலைமைத்துவத்தில்

மலையக மக்களே! தோட்டத் தொழிலாளர்களே!
ஆசிரியர் மாணவர்களே இளைஞர் யுவதிகளே உள்ளூராட்சித் தேர்தலில் அணிதிரள்வீர்!!


வலப்பனை பிரதேச சபை
தலைமை வேட்பாளர்




இல 22

தோழர்
ச.பன்னீர்செல்வம்

சுயேட்சைக்குழு I
(புதிய- ஜனநாயகக்கட்சி)
வாக்களியுங்கள்!



நுவரெலியா பிரதேச சபை
தலைமை வேட்பாளர்



இல 8

தோழர்
டி. கே. சுதர்சன்

## செய்திச் சாராம்சம்

இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் "ஏழைகளின் பிரதான எதிரி ஊழல் தான்" என்று திருவாய் மலர்ந்துள்ளார். ஆனால் உண்மை அவ்வாறில்லை என்பதே யதார்த்தமாகும்.

● **உலக மக்களைச் சுரண்டி வளங்களைக் கொள்ளையிட்டு யுத்தங்களை நடாத்தி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியமே ஏழைகளின் பிரதான எதிரியாகும.**

கொழும்பில் ஒரு சிங்கள மகளீர் கல்லூரி அதிபர் புலமைப் பரிசில் பெற்ற மாணவி ஒருவரைச் சேர்க்க ஐம்பதினாயிரம் ரூபா கேட்டு 25 ஆயிரம் லஞ்சமாகப் பெற்ற போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டு விளக்கமறியலில் இருந்து வருகிறார்.

● **மாட்டிக் கொண்டவர் ஒரு அதிபர் மட்டுமே. கல்விக்கு விலை பேசும் அவரைப் போன்ற எத்தனை அதிபர்கள் இருப்பார்களோ யாரறிவார்.**

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ புஷ்சிற்கு அமெரிக்காவிலும் உலகிலும் வழங்கப்பட்டு வரும் பட்டங்களாவன. "உலக கொலைகாரன்" "நவீன ஹிட்லர்" "இறைச்சி வெட்டுபவர்" "கொலையாளிகளின் தலைவன்" "திரு. அபாயம்" "எண்ணெய்க்காக இரத்தம் குடிப்பவர்" ஆகியனவாகும்.

● **இத்தனை பட்டங்களுக்குப் பின்பும் புஷ்சை பெரும் ஜனநாயகவாதி உலக சமாதான விரும்பி என்று கூறும் பிரகிருதிகளும் இருக்கவே செய்கின்றனர்.**

மத்தியவங்கியின் 2004ம் ஆண்டறிக்கையின் படி இலங்கை அமெரிக்காவிற்கு 57 கோடி அ. டொலர்கள் கடன் கொடுக்க வேண்டும். இத்துடன் மேலும் உலக நாடுகளுக்கு செலுத்த வேண்டிய மொத்தக் கடனால் இலங்கையர் ஒவ்வொருவரும் ஒரு லட்சத்து பதினையாயிரம் ரூபாவிற்கு கடனாளியாக இருந்து வருகிறார்கள்.

● **இந்த லட்சணத்தில் தான் மகிந்த சிந்தனை மூலம் புதிய இலங்கையைக் கட்டியெழுப்பப் போகிறார்களாம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஆறுமுகன் சந்திரசேகரம் மனோகணேசன் மலையக மக்களை ஏமாற்றும் விலாங்குகளே!

இரண்டு மாதங்களுக்கு முன்பு தமிழ்ப் பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் சிலிர்ப்புச் செய்திகள் வெளியிட்டன. கலர் கலராகப் படங்கள் பிரசுரித்தன. "ஆறுமுகன் கிளிநொச்சியில்" "தமிழ்ச் செல்வனுடன் பேச்சுவார்த்தை" "சந்திரசேகரன் தமிழ்ச் செல்வனைச் சந்தித்து மந்திராலோசன" "மனோகணேசன் கிளிநொச்சியில் விரிவான பேச்சுவார்த்தை" "ஆறுமுகன் சந்திரசேகரன் மனோகணேசன் ஆகியோர் கிளிநெச்சி சென்று மறைந்த தமிழர் கூட்டமைப்பு எம்.பி. பரராஜசிங்கத்திற்கு அஞ்சலி" அதனைத் தொடர்ந்து "கொழும்பில் ஐக்கியத்திற்கான உயர்மட்டப் பேச்சுவார்த்தை" இவை அனைத்தினதும் முத்தாரமாக தமிழ்த்தேசியம் மலையகத்தை உள்ளடக்கி பரந்து விரிந்து இலைகுழை பரப்பி வருவதாகக் காட்டப்பட்டது. மேற் கூறிய மூன்று தலைமைகளும் தமிழர் கூட்டமைப்பும் இணைந்து பேசி பொதுச்சின்னத்தில் தேர்தல்களில் பங்கு பற்ற உள்ளதாகவும் பரபரப்புச் செய்திகள் ஊதித்தள்ளப்பட்டன. இந்த ஐக்கியத்தை தமிழ்த் தேசியப் பாரமாகச் சுமந்து கொண்டு "சந்திரசேகரன் தமிழகத்திற்குப் பயணம்" என்றும் அங்கு கருணாநிதிக்குப் பொன்னாடை போர்த்தி போஸ் கொடுத்ததையும் நமது பத்திரிகைகள் கால் பக்கத்தில் வெளியிட்டன. ஆனால் சந்திரசேகரன் ஏன் தமிழகத்திற்கு அடிக்கடி சென்று வருகிறார் என்பதை தலவாக்கெல்லை அரசியல் வட்டாரத்தில் காதுகளை விட்டால் தெளிவாகக் கேட்க முடியும். இரட்டைத்தனங்களும் பம்மாத்துக்களும் மக்களை முட்டாள்களாக்குவதும் அப்பட்டமான ஏமாற்றும் மலையகத் தலைமைகளுக்கு கைவந்த கலைகளேயாகும்.

பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்குகள் போன்றே மலையக அரசியல் தொழி ற்சங்க தலைமைகள் நடந்து வந்துள்ளன. அண்மைக் காலத்தில் கிளி நொச்சிக்கு ஒருக்கால் தலைகளைக் காட்டிய இத்தலை மைகள் கொழும்பிற்கு வால்களைக் காட்டிக் கொண்டன. இப்போது உள்ளுராட்சித் தேர்தல் வந்ததும் கொழும்புக்குத் தலையையும் கிளிநொச்சிக்கு வாலையும் காட்டி நிற்கின்றன. முன்பு யானையின் வாலில் தொங்கிங் கொண்டு பதவிக்காகப் பணத்திற்காக யூஎன்.பியைச் சிக்கெனப் பிடித்தவர்கள் இப்போது வெற்றிலையைக் கைகளில் ஏந்திக் கொண்டு அடுத்து வரும் அமைச்சர் பதவிக்காக ஆயத்தம் செய்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளில் அறிக்கைவிடும் போது இந்த வெட்கம் ரோசம் அற்ற தலைமைகள் எல்லாம் மலையக மக்களின் விடிவிற்காகவே என்று உளறுவதையும் நிறுத்தவில்லை.

தம்பி ஆறுமுகத்திற்கும் அண்ணன் சந்திரசேகரத்திற்கும் மேலக நடிகன் மனோகணேசனுக்கும் தமிழ்த் தேசியம் வெறும் கவச குண்டலங்கள் மட்டுமே. மேலும் தமிழ்த் தேசியத்தை மணி உடுப்பாகக் கட்டிக் கொண்டு பாராளுமன்ற அரசியல் மேடையில் கூத்தாடி வரும் இவர்களும் இவர்களை ஒத்தவர்களும் அந்த மேடைக்குப் பின்னால் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது பலருக்கு தெரிவதும். இல்லை புரிவதும் இல்லை. பெரும் முதலீடுகள் வியாபார குறுக்கு வழிச் சம்பாத்தியங்கள் ஒப்பந்தங்கள் லாபங்கள் எனப் பலவகைகள் உண்டு. இங்கு மட்டுமன்றி இந்தியாவில் தமிழகத்தில் கூட முதலீடுகள் வியாபாரங்கள் உண்டு. அதனால் அடிக்கடி தமிழகப் பயணங்கள் இடம் பெறுகின்றன. ஆனால் இங்கு பத்திரிகைகளில் தமிழருக்கான மலையக மக்களுக்கான பயணங்கள் என்றே செய்திகள் அலறிக் கொட்டிக் கொள்ளும்.

அண்மையில் அண்ணன் தம்பி என்போர் வெற்றிலையில் தேர்தல் கேட்பதும் நாக்கூசாது அமைச்சர் பதவிகள் கிடைத்தால் அதனை "மக்களுக்குப் பயன்படுத்தப்போவதாக" அறிக்கை விடுவதும் தற்செயலானதல்ல. இத்தலைமைகளின் உயர் வர்க்க நிலைப்பாடும் பணம் பதவிக்கான எதிர்பார்ப்புகளும் யார் அரசாங்கத்தில் இருந்தாலும் அங்கே போவதற்கு கால், கை கூசாதவர்கள் என்பதையும் பதவிகளுக்கு கைநீட்டத் தயங்காதவர்கள் என்பதையும் முன்பு மட்டுமல்ல இப்பொழு தும் நிரூபித்துள்ளதைக் காணமுடிகி றது. இத்தகைய தலைமைகளைக் குறைகூறிப் பயன் ஏதும் இல்லை. வர்க்க சுகபோக அனுபவிப்பு நிலையில் அவர்கள் அவர்களே தான். தோட்டத் தொழிலாளர்களான மலையக மக்கள் இத்தலைமைகளைத் தமது விடிவுக்கும் விமோசனத்திற்கும் உரியவர்களாக நம்பிக் கொண்டு பின்னால் செல்வது தான் வேதனைக்குரியதாகும். அந்த வேதனையை மாற்றியமைக்க வேண்டியவர்களாக மல்யகத்தின் இளந் தலைமுறையினராகிய நாமே முன்னிற்க வேண்டும். புதிய அரசியல் பாதையில் புதிய தலைமைத்துவத்தில் பயணம் தொடர்ந்து வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையே மலையகத் தலைமைகளின் குத்துக்கரணங்கள் நமக்குப் பாடமாக உணர்த்துகின்றன.

ச. சுரேஷ்குமார்

லிந்துல- தலவாக்கெல்லை

# நாலு நடக்கும் உலகம்லே

நற்குணன்

## சுதந்திரமான தெரிவுகள்

வெகு காலத்திற்கு முன்பு, ஃபோர்ட் மோட்டார் கார் கம்பனி கறுப்பு நிறத்தில் மட்டுமே கார்களை உற்பத்தி செய்துவந்தது. வேறு நிறங்களில் கார்களைப் பெற முடியுமா என்று கம்பனி முதலாளி ஹென்றி ஃ போர்டிடம் கேட்கப்பட்டது. அவர் தந்த பதில் "நிறம் கறுப்பாக இருக்குமளவில் என்ன நிறத்திலும் கார்களைப் பெறலாம்".

இது போலவே தான் உலக நாடுகளில் சனநாயகம் பற்றிய அமெரிக்க ஆட்சியாளர்களது நிலைப்பாடும் உள்ளது. "நாங்கள் சொல்லுகிறவரை நீங்கள் தெரிவு செய்யும் மட்டில் நீங்கள் எவரையும் தெரிவு செய்யலாம்" என்பது தான் அமெரிக்காவின் நிலைப்பாடு. அமெரிக்கா சுதந்திரமான தேர்தலைக் கேட்டது. சுதந்திரமான தேர்தலில் ஹமாஸ் வெற்றி பெற்றது. அமெரிக்கா தேர்தலின் தீர்ப்பை ஏற்க மறுத்துள்ளது. இது புதிய கதையல்ல. அரை நூற்றாண்டுக்காலமாக நடந்து வருகிற விடயம்.

ஃபோர்ட் கார்கள் விற்பனையைக் கருதி நிறம் மாறிவிட்டன. அமெரிக்க ஏகாதிபத்தியம் சரிந்து விழும் வரை நிறம் மாறாது.

## சமாதானமும் உருத்திராட்சப் பூனைகளும்

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மத குருமாரும் பங்கு பற்ற வேண்டும் என்று ஒரு இந்துப் பூசகர் தொலைக்காட்சியில் சொல்லியிருந்தார். கத்தோலிக்கக் குருமார் அரசியலில் குறுக்கிட்டுக் குழப்பியது ஒரு காலம். நீண்டகாலமாகவே புத்த குருமார் அரசியலில் குறிக்கிட்டு நாட்டை ரணகளமாக்க உதவியுள்ளனர். இப்போது இந்து மத குருமாருமா?

இந்து மத குருவானருக்கு அமைதி பற்றிய அக்கறையை விட அயல்நாட்டுப் பயணம் பற்றிய அக்கறைதான் அதிகம் என்று நினைக்கிறேன்.

## அமெரிக்காவின் மனித உரிமையின் அழகு

ஈராக்கில் உள்ள அபு கரீப் ராணுவச் சிறையில் இருந்த கைதிகள் மீது அமெரிக்கப் படைகளின் மனிதாபிமனமற்ற குரூரச் செயல்கள் பற்றிய புதிய படங்கள் வெளிவந்துள்ளன. அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் டொனால்ட் றம்ஸ்ஃபர்ட் இவையெல்லாம் பழைய விஷயங்கள், நாங்கள் முன்னமே அறிந்தவை என்று எளிதாகத் தட்டிக் கழித்துள்ளார். அமெரிக்க அதிகார நிறுவனத்தின் ஒரே கவலை இம்மாதிரியான விடயங்களை உலகுக்குத் தெரியப்படுத்துவதால் அமெரிக்காவுக்கு எதிரான உணர்வுகள் கிளறி விடப்படும் என்பது தான்.

கியூபாவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள குவண்டனாமோ சிறையில் நடந்து வந்துள்ள சித்திரவதைகளை அடுத்து ஐ.நா. சபையின் விசாரணைக் குழுவின் அறிக்கை அச் சிறைக் கூடம் கூடிய விரைவில் மூட்ப்படுவது நல்லது என்று கூறியுள்ளது. அதற்கு அமெரிக்க நிருவாகத்தின் பதில் "ஐ. நா. சபை தனது நேரத்தை வீணாக்குகிறது"என்பது தான்.

அமெரிக்கப் படைகளும் சி. ஐ. ஏ யும் கிழக்கு ஐரோப்பாவில் இரகசிய சித்திரவதைக் கூடங்களை நடத்துவதாகச் சில மாதங்கள் முன்பு வெளிவந்த தகவல்கட்கும் அமெரிக்காவின் எதிர்வினை முதலில் மறுப்பும் பிறகு மழுப்பலும் முடிவில் சினப்பதுமாகவே இருந்தது.

இன்று உலகின் மிகப்பெரிய பயங்கரவாத நிறுவனம் அமெரிக்க அரச இயந்திரம் தான் என்பது மறுக்க இயலாத உண்மை. அதுவுமில்லாமல் அமெரிக்காவுக்கு மட்டுமே மனித உரிமைகளை மீறும் அதிகாரம் உண்டு என்று சொல்லுமளவுக்கு அமெரிக்காவின் அதிகாரத் திமிர் முற்றியுள்ளது.

## திக்கற்றோருக்கு யூ. என். பி யே துணை

பழையபடி, எஸ். பி. திசாநாயக்கவின் விடுதலை யூ என். பியின் பிரதான அரசியல் பிரச்சனையாகிவிட்டது. அவரை விடுதலை செய்யக் கோரி நடந்த கூட்டத்தில் ரவூஃப் ஹக்கீம் மட்டுமன்றிக் கலாநிதி விக்கிரமாகு கருனாரத்தனவுமல்லவா பேசி இருக்கிறார்.

தர்கா நகரில் பொலிஸ் ஆதரவுடன் முஸ்லீம்கள் மீது நடத்தப்பட்ட பேரினவாதத் தாக்குதலுக்கு எதிரான ஒரு ஆர்ப்பாட்டத்தை ஹக்கீம் ஒழுங்கு செய்தால் யூ என். பி. அதில் பங்கு பற்றுமா?

ரணில் சமாதானப் பேச்சுக்கட்கு ஆப்பு வைக்க ஆயத்தமாவதைக் கலாநிதி கருணாரத்தனவுக்குத் தடுக்க இயலுமா?

திக்கற்றோருக்கு தெய்வமே துணை என்று ஒரு பழமொழி உண்டு. இங்கே அரசியலில் திக்கற்றோர் சிலருக்கு யூ என். பியே துணை போலத் தெரிகிறது.

## கையாலாகாத கண்காணிப்பாளர்கள்

கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் பத்துப்போர் கடத்தப்பட்டுள்ளனர். மூவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடத்தல் நடந்த இடங்குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளபோதும் அந்த இடம் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பாதுகாப்பு நிலையங்கட்கு அருகாக அமைந்துள்ள போதும் அதற்கு யார் பொறுப்பு என்று பொலிஸாருக்கும் தெரியாது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் எதுவும் சொல்ல இயலாது. ஏனெனில் உண்மையான பல விடயங்களைக் கூட கண்காணிப்புக் குழு மறைக்கிறது மழுப்புகிறது. இப்போது கண்காணிப்புக் குழுவின் ஒரே அக்கறை தன்னைப் பாதுகாத்துக் கொள்வதாகவே தெரிகிறது. இதற்கும் மேல் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்படுவதை விட ஜே.வி.பி. யிடமோ ஹெல உறுமயவிடமோ போய் முறையிடுவதில் கூடிய பயனிருக்கும் என்றே பலர் கருதுகின்றனர்.

# யாழ்- நகர முன்னணிப் பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கு பணக்கறப்பு!

யாழ்ப்பாண நகரத்தின் முன்னணிப் பாடசாலைகளென மொத்தம் ஒன்பது பாடசாலைகளைக் கூறலாம். இவற்றில் நான்கு அரசாங்க தேசியப்பாடசாலைகள். அவையாவன யாழ் இந்துக் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ் இந்து மகளீர் கல்லூரி. அதேவேளை அரச உதவிபெறும் தனியார் முன்னணிப்பாடசாலைகளாக யாழ்- பரியோவான் கல்லூரி, யாழ்- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்- சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்- கொன்வென்ற் கல்லூரி, டொன்பொஸ்கோ பாடசாலை என்னபன.

ஆண்டு தொடக்கத்தில் இக் கல்லூரிகளின் முன்னால் பெற்றோர் கூட்டம் அலைமோதி நின்றதைக் காண முடிந்தது. இது வருடத் திருவிழாதான். இதில் முன்னணி அரசாங்க தேசியப்பாடசாலைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களைச் சேர்ப்பதில் பெற்றோருக்குப் பேராசை. கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசிலுக்கு தகுதியான மாணவர்களை யாழ் நகர முன்னணிப் பாடசாலைகளில் சேர்ந்து விட்டால் போதும் என்ற நிலையில் ஓட்டமும் போட்டியும். பெற்றோரின் இந்தப் பேராசையைப் பயன்படுத்த இப்பாட சாலைகளின் அதிபர்கள் உப அதிபர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள் பொறிவைத்துக் காத்திருப்பார்கள். ஐம்பதி னாயிரத்திலிருந்து ஆரம்பித்து குறைந்தது 15 ஆயிரம் வரை விலை பேசல் இடம் பெறும். வெளிநாடுகளின் பணவரவுடையோர் மட்டும் சுளையாக எண்ணிவிட ஒப்பு கொள்வர். சம்பளத்தில் சீவிப்போர் விழிபிதுங்க யோசித்து கடன் பட முயற்சிப்பர்.




சாதாரண அன்றாட உழைக்கும் பெற்றோர் அப்பாட சாலை வாசல் களுக்கே செல்லமாட்டார்கள். நன்கொடை என்ற பெயரில் இந்த வசூலிப்பை பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பதன் ஊடாகவே பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கும் மேலால் சில அதிபர்கள் பல ஆயிரம் ரூபாய்களை தத்தமது பைகளில் போட்டுக் கொள்கிறார்கள் என்றே பேசிக் கொள்ளப்படுகிறது. இந்த நன்கொடைக் கறப்பில் அதிபர் மற்றும் நிர்வாகத்திற்கு வக்காலத்து வாங்க பாடசாலை அபிவிருத்தி சங்கத்துடன் பழையமாணவர் சங்கத்தினரும் சேர்ந்து கொள்வது வழமையாகி விட்டது. இவ்விரு அமைப்புகளிலும் பெற்றோர் நலன் விரும்பிகள் பழைய மாணவர்கள் என்ற பெயர்களில் பணம் பண்ணத்தெரிந்த பேர்வழிகள் புகுந்து கொள்வார்கள். கணக்கை எப்படியோ காட்டிக் கொள்ளத் தெரிந்தவர்கள் தான் சில அதிபர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தும் வருகிறார்கள். அதேவேளை பாடசாலை முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயல்படும் அதிபர்கள் நிர்வாகிகள் சங்கங்களைச் சேர்ந்தோர் சிலரும் இருக்கவே செய்கிறார்கள்.

இதை விட தனியார் பாடசாலைகளில் மேலும் பணக் கறப்பு நடைபெறுகிறது. கல்வி பணத்தின் அடிப்படையில் பாகுபாட்டிற்கும் உயர்வு தாழ்வுக்கும் உள்ளாக்கப்படுகிறது. இது நகரப்பாடசாலைகளில் மட்டுமன்றி கிராமப்புறங்களின் முன்னணிப் பாடசாலைகளிலும் மேற் கூறிய நிலை தான். இவ்வாறு பணப்பறிப்புடன் மேலும் ஊர் சாதி உத்தியோகம் என்றவாறும் மாணவர் அனுமதியில் பார்க்கப்படுகின்ற நிலை நாசுக்காகத் தொடரப்படுகின்றது.

உலக வங்கியின் வழிகாட்டலில் கல்விக் கொள்கை தனியார்மயத்தை நோக்கி நகர்த்தப்படுகிறது. அதற்கு ஏற்றவாறு கல்வியும் தகைமைகளும் பணப் பேரப்பேச்சால் பாடசாலைகளில் உள்வாங்கப்படுகிறது. சாதாரண உழைக்கும் மக்களான பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்கு பணம் கொடுக்க முடியாது இடை நடுவே கைவிட வேண்டிய நிலைக்கே தள்ளப்படுகிறார்கள். சொத்து பதவி உயர் சாதி குடும்பம் போன்றவற்றுக்கே கல்வி முதலிடமாகிறது என்பதையே பாடசாலை அனுமதியிலும் காணமுடிகிறது.

யாழ்ப்பாணம்.

க. செல்வன்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தலைமைப் பதவிகளை இழக்க விரும்பாத ஆதிக்கத் தலைமைகள்

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகன்று விட்டார். அவ் வாறே சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் தலைவிப் பொறுப்பிலிருந்தும் விலகி அதனை ஜனாதிபதி மகிந்தா விடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறது. ஆனால் அம் மையார் அதற்கு இணங்குவதாக இல்லை. தனது தந்தை தாய் வழி யாக வந்த முதுசமே கட்சியும் தலை மையும் எனக் கூறி அதனைத் தமது குடும்பத்தில் வைத்துப் பாதுகாத்து அடுத்த வாரிசுகளிடம் கையளிப்ப தையே நோக்காகவும் கொண்டுள் ளார். அறுபது வயதுக்குப் பின் அர சியலில் இருக்கமாட்டேன் என்று கூறியவர் தான் இந்த சந்திரிகா அம்மையார். ஆனால் இப்போது ஜனாதிபதிப் பதவி இல்லாவிடினும் கட்சித் தலைமைப் பதவியை தக்க வைத்து அக் கட்சியினரை ஆட்டிப் படைக்கும் ஒருவராக இருப்பதையே விரும்புகிறார். அத்துடன் இந்தியா வின் நேரு குடும்பப் பரம்பரையினர் போன்று தனக்குப் பின் தமது பிள் ளைகளிடம் கட்சி ஆட்சி என்பனவ ற்றை ஒப்படைக்கும் பாதையிலும் சந் திரிகா பயணிக்கவே விரும்புகிறார். இதே நிலை தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும் காணப்படு கிறது. சேனநாயக்கா பரம்பரை அதன் பின்பு ஜெயவர்த்தனா அவ ரின் வாரிசு மருமகன் ரணில் விக்கிர மசிங்கா எனத் தொடர்கிறது. அத னாலேயே ரணில் இன்று பல நெரு க்குதல்கள் பிரச்சினைகள் மத்தியி லும் கட்சியின் தலைமைப் பதவியைத் துறக்கத் தயாரில்லாத நிலையில் இருந்து வருகிறார். அவருக்கு பிள் ளைகள் இல்லாது விடினும் தமது ஆண்டபரம்பரைக் குடும்பத்திலிருந்து ஒரு வாரிசைத் தேடவே செய்கிறார். அது வரை தனது தலைமைப் பதவி யைத் துறக்கத் தயாரில்லாத நிலையே அங்கும் காணப்படுகிறது. இவ் இரு கட்சிகளினதும் தலைமை யில் இருப்போரையும் அவர்களது பதவிகள் மீதான இறுக்கப் பிடிகளை யும் அவதானிக்கும் போது பழைய நிலவுடைமைக்கால அரச குடும்பங்க ளின் மத்தியில் காணப்பட்ட சிம்மாச னச் சண்டைகள் போன்றே காணப் படுகின்றன. இதில் ஆச்சரியப்பட அதிகம் ஏதும் இல்லை. ஏனெனில் சந்திரிகாவும் ரணிலும் அந்த ஆண்ட பரம்பரையின் வாரிசுகளேயாவர். ஆனால் அவர்களை ஜனநாயகத் தின் வழிவந்த தலைவர்கள் என நம்பி ஏமாந்து நிற்கும் ஒரு பகுதி மக்களின் அரசியல் அப்பாவித் தனம் தான் பரிதாபத்திற்குரியது. அதுவும் அடிமை விசுவாசத்தின் வழிவந்த ஒரு வகை அரசியல் சிந்தனையாக வும் நீடிக்கிறது. இத்தகைய ஆண்ட பரம்பரையினரின் தொடர்ச்சியான இருப்பை அரசியல் ரீதியில் மக்கள் போராட்டப் பலம் கொண்டு உடைத் தெறியாத வரை சந்திரிகா ரணில் போன்ற தலைமைகளின் ஆதிக்க மும் அதன் பின் அவர்களது வாரி சுகளின் ஆதிக்கமும் தொடரவே செய்யும்.

# உலக வங்கியின் முன்னால் வீழ்ந்து கும்பிடும் கட்சிகள்

உலக வங்கி பற்றி எல்லோரும் அறிவர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் நிறைந்த ஒரு நிறுவனம். நிதி அளிப்பதன் மூலம் வட்டியும் முதலுமாகப்பெறுவது மட்டுமன்றி உலக நாடுகளின் வளங்களை தாராளமயம் தனியார்மயத்தின் மூலம் கொள்ளையிட ஆலோசனை வழங்கும் நிதி நிறுவனமுமாகும். இத்தகைய கொள்ளைக்கார வங்கி மலேசியாவில் மூன்று வாரகால பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்துகின்றது. அதில் கலந்து கொள்வதற்கு நம் நாட்டுப் பாராளுமன்றக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பாக ஜே. வி. பி தமிழர் தேசியக் கூட்டமைப்பு என்பனவும் உள்ளடங்கும். இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்கு எந்தவொரு கட்சியும் மறுப்போ எதிர்ப்போ தெரிவிக்கவில்லை. இதன் மூலம் என்ன விளங்கிக் கொள்ளப்படுகிறது. அமெரிக்காவிற்கும் உலக வங்கிக்கும் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்ற வேறு பாடின்றி முழு நாட்டையும் தாரைவார்ப்பதில் சிங்கள தமிழ் முஸ்லீம் தேசியம் பேசும் கட்சிகள் தமக்குள் எவ்வித வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை என்பதையேயாகும். இமெரிக்க எசமான் முன்பாக அவை வீழ்ந்து கும்பிட்டு அருள் பெறும் கட்சிகளாகவே இருக்கின்றன என்ற உண்மை தெளிவாகிறது.



கடந்த 19-02-2006 அன்று தலாவாக்கலை கல்கந்தை தோட்டத்தில் மறைந்த தோழர் சந்திரகுமாரின் நினைவாக கட்டப்பட்ட நினைவுக் கல்லறையை புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தேசிய அமைப்பாளர் இ.தம்மையா ஆகியோர் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்

# தோழர் சந்திரகுமார் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி

மறைந்த தோழர் சந்திரகுமாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு கள் அவரின் பிறந்த தலவாக்கொ ல்லை கல்கந்தை தோட்டத்தில் கட ந்த மாதம் 19 ஆம் திகதி புரட்சிகர மாக நடந்தன.

அவரின் உடல் புதைக்கப்பட்ட இட த்தில் நினைவுக் கல்லறை நிறுவப்ப ட்டது. "வீரர்கள் போராடுவார்கள் கோழைகள் பின் வாங்குவார்கள், துரோகிகள் காட்டிக் கொடுப்பார் கள்" என்ற யூலியஸ் ஃபியூசிக்கின் வாசகங்கள் நினைவுக் கல்லறையில் பொறிக்கப்பட்டிருந்தது.

நினைவுக் கல்லறை திரைநீக்கம் செய்யப்பட்டபிறகு கல்கந்தை தோட்ட சனசமூக நிலையத்தில் நினைவு சொற்பொழிவுகளும் புரட் சிகரப் பாடல்களும் இடம் பெற்றன. தோழர் மலர்ராஜ் அந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார். புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செய லாளர் சி.கா.செந்திவேல் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா மலைய கப் பிரதேச செயலாளர் ச. பன்னீர் செல்வம் ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூ ரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சி. இராஜேந்திரன் உட்பட பலர் உரை யாற்றினார்கள். இக்கூட்டத்தில் தோழர் சந்திரகுமாரின் துணைவி யார் மகள் பெற்றோர் சகோதரர்கள் உறவினர்கள் தோட்டத்தை சேர்ந்த மக்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பெருந்தொகையானோர் பங்குபற்றினர்.

சந்திரகுமாரின் உருவப்படத்துடன் ஊர்வலமாக கல்லறைக்கு சென்றவ ர்கள் மறைந்த தோழர் எழுதிய புதிய ஆத்தி சூடியை கோஷித்த வண்ணம் சென்றனர். கல்லறையில் பாட்டாளி வர்க்க சர்வதேச கீதம் இசைக்கப்ப ட்டது!

நிறைவு நிகழ்வாக சினேகபூர்வமான கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற் றது. அதில் ரெட்ஹட்ஸ், ஸ்ரீ பாத கல்வியல் கல்லூரி, கல்கந்தை விளை யாட்டுக்கழகம் ஆகியவை கலந்து கொண்டன. கல்கந்தை கழகம் வெற்றி பெற்றது. இறுதியில் மதிய போசனமும் இடம்பெற்றது.

# கண்டதும் கேட்டதும்

–சாந்தன்–

## ✦ இ. போ. ச. தலைதூக்குமா?

கணிசமான அரசதுறைகள்- அவை இலாபமீட்டுவனவாக இருந்த போதிலும் விற்கப்பட்டன, இன்னுஞ் சிலவற்றை தனி யாருக்குக் கொடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இ.போ.ச புனருத்தாரணம் செய்யப் பட்டு வருவது வரவேற்கத்தக்கதாகும். எனினும் ஏற்கனவே கட்டி வளர்க்கப்பட்டுள்ள தனியார் போக்குவரத்துச் சேவை யுடன் போட்டியிட்டு இ.போ.ச தலைதூக்குமா அல்லது பழைய படி ஊழல் மோசடி துஷ்பிரயோகத்திற்கு இடமளிக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## ✦ தமிழர்கள் படும் தொல்லைகள்

வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு போன்றவற்றைத் தமிழில் செய்ய ஏதா வது நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டனவா? பாடசா லைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போதும், தேசிய அடை யாள அட்டை, கடவுச்சீட்டு போன்ற முக்கிய ஆவணங்களைப் பெறும் போதும் கொழும்பில் உள்ள தமிழர்கள் படும் தொல் லைகள் கொஞ்சமல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெற் றோர் பிள்ளைக்கு இட்ட பெயரும் பிறப்புச் சான்றிதழில் சிங் களத்தில் எழுதப்படும் பெயரும் வேறுபாடாக உள்ளன. இதே பிழையான பெயர்தான் பின்னர் அரச அடையாள அட்டை யிலும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்களிலும் இடம் பெறுகின்றன. மலையகம் மேல் மாகாணம் ஆகிய பிரதேசங்களிலாவது தமிழ்ப் பதிவாளர்களை நியமித்து அதன் வழியாக இக்குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்காத தலைமைகளா தமிழர்களின் ஏனைய உரிமைகளைப் பெற்றுத்தரப் போகிறார்கள்?

## ✦ இறைமை என்ன விலை?

உள்ளூர் வாசிகளின் மீன்பிடியை நாசம் பண்ணி, ஆயிரக்கணக் கான தென்னைமரங்களைத் தறித்து அம்மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சிலாபத்தில் உள்ள இரணவில எனுமிடத்தில் அமெரிக்க வானொலி நிலையத்திற்கென வழங் கப்பட்ட 1000 ஏக்கர் கணக்கான நிலத்தில் என்ன நடக்கிறது? றேடியோ பாடுகிறதா அல்லது எமக்குப் பாடை கட்டப்படு கிறதா? இதனைத் தெரிந்து கொள்ளும் உரிமை "இறைமை" உள்ளதொரு நாட்டில் வாழும் மக்களுக்கில்லையா?

## ✦ காப்புறுதியின் பெயரால் கொள்ளையா?

அரச ஊழியர்க்கான காப்புறுதித்திட்டம் என்ற பெயரில் ஒவ்வொரு ஊழியரிடமிருந்தும் கடந்த ஆண்டு தை மாதம் முதல் ரூ 75/= வீதம் கழிக்கப்பட்டு வருகிறது. அரச ஊழியரின் தொகை ஆறு இலட்சத்திற்கு அதிகம். இதன்படி மாதாந்தம் சுமார் 45 கோடி வரையில் கழிக்கப்படுகிறது. தமது நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகளை அறிந்தவர்கட்கு இத்தொகையின் கால்பங்கு கூட தேவையான அரச ஊழியர்கட்கு மாதாந்தம் வழங்கப்படுவது சாத்தியமில்லை என்பது தெளிவான விடயமாகும். இவ்வாறான நிலையில் மிகுதிப்பணம் எங்கே போகிறது என்ற வினா எழுவது இயல்பானதே. இப்பணம் தொடர்பில் ஊழல், வீண்விரயம் மற்றும் ஏனைய மோசடிகளைத் தவிர்ப்பதாயின் மாதாந்தம் கழிக்கப்படும் தொகை 20-25/= ஆகக்குறைக்க வேண்டும் அல்லது விரும்பிய ஊழியர்களி மிருந்து மட்டும் உதவுத்தொகையைக் கழிக்க வேண்டும். ஊழியரின் அனுமதியின்றி ஏன் அவர்களைக் காப்புறுதித்திட்ட த்தில் இணைக்க வேண்டுமென்பது தான் புரியவில்லை?

## ✦ வங்கிகள் யார் பக்கம் உள்ளன?

அரசியல் செல்வாக்குள்ள பெருந்தனவந்தர்களுக்கு இல ங்கை வங்கியும் மக்கள் வங்கியும் கடனாக வழங்கிய பெரு ந்தொகைப்பணம் இன்னமும் மீளப் பெறப்படாததாக இருந்து வருகிறது. வங்கிக்கடன் வழங்குவதில் உள்ள சட்டதிட்ட ங்களைப் பயன்படுத்தி சில இலட்சங்களைச் செலுத்தாத கடன்காரர்களின் சொத்துக்களை (பிணையாக வைக்கப்ப ட்டவை) ஏலத்தில் விற்க முயற்சி செய்யும் வங்கிகள் கோடிக் கணக்கான பணத்தை மீளப்பெறுவதில் அதே சட்டதிட்டங் களை ஏன் பயன்படுத்துவதில்லையென்பது புரியாத புதிராகவு ள்ளது. ஆனால் இந்த மோசடிக்காரர்களின் பெயர்களைப் பகிரங் கப்படுத்தாமலிருப்பதாகச் சில சட்டங்கள் இந்த நாட்டில் இருப்பதை அறியும் போது இந்த நாட்டில் சட்டங்கள் ஆக் கப்படும் விதமும் அவற்றை அமுல்படுத்துவதும் மோசடிக்காரரு க்கே சாதகமாகவுள்ளதாகத் தெரிகிறது. சாதாரண மக்களின் பணத்தைப் பயன்படுத்தி ஏமாற்றுக்காரர்கள் பயனடைய முடியு மெனில் இந்த நாட்டில் எந்த வகையான ஜனநாயகம் சட்டம் நிலவுகிறதென்ற ஐயம் எழுவது தவிர்க்க முடியாதது.

## ✦ தனியார்மயம் தொடங்கியுள்ளதா?

நீர் வழங்கும் சபை இலாபத்தில் இயங்குவதாகச் செய்திகள் தெரிவிக்கையில் அச்சபையானது சமீபத்தில் தண்ணீருக்கான கட்டணத்தைப் பெருமளவில் அதிகரித்து மேலதிக சுமையொன்றைப் பொதுமக்கள் மீது சுமத்தியுள்ளது. அரச நிறுவனங்களில் நிலவும் நிர்வாகச் சீர்கேடு, ஊழல் ஆகியவற்றுக்கான விலையைச் செலுத்துவது பொது மக்களா. அல்லது உலகவங்கியின் ஆலோசனையின் படி நீர் வழங்குவ தையும் தனியார் மயப்படுத்தும் திட்டம் செயற்படத் தொடங்கி விட்டதா?

## ✦ அரசியலும் நேர்மையும்

ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் 28-01-06ம் திகதிய இதழின் முன்பக்கத்தில் "ஜே.வி.பி"யைச் சேர்ந்த முக்கிய தலைவரான சோமவன்ச அமரசிங்கவும் தமிழ்ப் பா. உ.ரான ரவிராஜும் சிரித்தபடி கைகுலுக்குவதான படம் ஒன்று வெளி யாகி இருக்கிறது. பொதுவாக கைகுலுக்குவதன் அர்த்தம் ஒருவருக் கொருவர் எதிரிகளல்ல என்பதாகும். இ.சந்திரசே கரன், அஞ்ஞான் உம்மா தவிர்ந்த ஏனைய சிறுபான்மையினர் எல்லோருமே "ஜே.வி.பி" யின் எதிரிகள் என்றே நம்பப்படுகிறது. இவ்வாறிருக்க ரவிராஜ் எப்போது சிறுபான்மையினத்தவர் அல்ல என்ற நிலைக்கு மாறினார் என்பது புரியவில்லை. சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தால் மட்டுமே நேர்மையான அரசி யலை முன்னெடுக்க முடியும். அரசியலுக்கும் நேர்மைக்கும் உறவு இல்லாவிடில் இதுபோல் ஏராளம் நடக்கவே செய்யும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகப் பச்சோந்தி தலைமைகள் மக்களின் பெயரால் பிழைப்பு நடத்துபவர்களே!

1994 ஆம ஆண்டு சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த போது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த ம.ம.மு தலைவர் சந்திரசேகரம் ஆதரவு கொடுத்து பிரதியமைச்சரானார்.

அதன் பின் ஐ.தே.கட்சியின் எம்பியாக இ.தொ.கா தலைவர் செள. தொண்டமான் பொதுஜன ஐக்கிய முன்னனி அரசாங்கத்தில் இணைந்து தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரானார். பிறகு 1998 தேர்தலின் போது ஆறுமுகனும், சந்திரசேகரனும் ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட்டு வென்றனர்.

அதன் பின் ஐ.தே.கட்சியுடன் ஒட்டிக் கொண்டு ஆறுமுகனும் சந்திரசேரமும் அமைச்சர்களாக இருந்தனர். அப்போது மகாவலி பிரதியமைச்சராக இருந்து கொண்டு மலையக மண்ணைப் பறிக்கும் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு ஆதரவை வழங்கினார். அப்போதுமேல் கொத்மலைத்திட்டத்தை ஆறுமுகன் எதிர்த்தார். மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைமையில் போராட்டம் வலுவடைந்ததைப் பார்த்து மெல்ல மெல்ல அத்திட்டத்தை எதிர்ப்பதாக சந்திரசேகரன் தெரிவித்தார். ஐ.தே.கட்சி ஆட்சிக் காலகட்டத்தில் ஆதரித்த அவர் ஐ.ம.சு.மு ஆட்சியின் போது எதிர்க்கும் நிலைப்பாட்டை எடுத்தார் ஐ.தே.கட்சிப் பட்டியலில் வெற்றி பெற்றிருந்தாலும் இ.தொ.கா சந்திரிக்கா அரசாங்கத்துடன் இணைந்து கொண்டது. முத்து சிவலிங்கத்திற்கு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கப்பட்டது. செல்லச்சாமிக்கு கிடைத்தது. இ.தொ.கா வின் சிபார்சில் கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட்ட பைசல் முஸ்தபாவிற்கும் பிரதியமைச்சர் பதவி கிடைத்தது. அதேவேளை சந்திரசேகரன் எதிர்க்கட்சியில் இருந்து வந்தார்.

2005 ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இ.தொ.கா அரசாங்கத்திலிருந்து விலகி ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரித்தது. ம.ம.மு யும் அவரையே ஆதரித்தது.

ஜனாதிபதி தேர்தலின் போது ஐ.ம.சு முன்னணியை இனவாத முன்னணி என்றும் மஹிந்த ராஜபக்ஷவை இனவாதி என்றும் சந்திரசேகரம் தொண்டமானும் மிகவும் காரசாரமாக பிரசாரம் செய்தனர். ரணில் விக்கிரமசிங்காவிற்கு அவ்வளவு விசுவாசமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டனர். வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரிப்பார்கள் என்று எடுத்த தீர்மானத்தை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு வாக்களிக்க வேண்டுமென தமிழீழ விடுதலை புலிகள் இயக்க அரசியல் துறை பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்திரசேகரன் சந்தித்து கேட்டுக் கொண்டார். அந்தளவிற்கு ஐக்கிய தேசிய கட்சி மீது சந்திரசேகரத்திற்கு அளவு கடந்த பாசம். மலையகத் தமிழ் மக்களுக்கு முன்னேற்றத்தை ஐ.தே. கட்சியே பெற்றுத்தரும் என்றும் பிரசாரம் செய்தார்.

ம.ம.மு வின் மத்திய மாகாணசபை உறுப்பினர்களான அருள்சாமியும், திகாம்பரமும் அவர்களின் கட்சியின் உடன்பாடில்லாமலேயே மஹிந்தவிற்கு ஆதரவளித்தனர். அருள்சாமி மத்தியமாகாண கல்வியமைச்சரானார். சதாசிவமும் மஹிந்தவிற்கு ஆதரவளித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபச்ஷ வெற்றிபெற்ற நாள் முதல் ஆறுமுகனும் சந்திரசேகரனும் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளை பெறுவதற்கு பல விதமான முயற்சிகளை எடுத்தனர். ஆறுமுகன் இந்திய அரசாங்கத்தினதும் கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்தினதும் உதவியையும் நாடி இந்திய தூதுவரின் இல்லத்தில் ஜனாதிபதியை சந்தித்தும் பேசிக் கொண்டார்.

இவ்வாறிருக்க இ.தொ.கா வின் எம்.பியான சுரேஷ் வடிவேல் தனது சுய விருப்பில் பிரதி சுகாதார அமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார். இதுவும் இ.தொ.கா. விற்கு ஒரு அடியாகியது. மகிந்த தலைமையிலான ஐ.ம.சு.மு. அரசாங்கம் பாராளுமன்றப் பலம் கூடியுள்ள சூழ்நிலையில் இ.தொ.கா - ம.ம.மு. என்பவற்றில் அமைதியீனம் தலை தூக்கியுள்ளது. பதவி இல்லாது இருப்பதே அவர்களது கைகளை அரிக்கச் செய்கிறது. சந்திரசேகரனுக்கு பதவி இல்லாததால் ஒவ்வாமை (அலேர்ஜி) ஏற்பட்டுள்ளது. எத்தனை நாளைக்குத்தான் வெறும் எம்.பி.யாக இருந்து காலம் தள்ளுவது. சந்திரசேரன் விடுதலை புலிகள் இயக்கத்துடன் தொடர்பை வைத்துக் கொண்டு அவரது இருப்பைப் பேணிப் பாதுகாக்க முயற்சிகளை செய்துவந்தார்.

அதே போன்று ஆறுமுகன் தொண்டமான் கிளிநொச்சிக்கு சென்று எல்லாத் தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமை பற்றியும் கதைத்தார். ம.ம.மு, இ.தொ.கா ஐக்கியப்பட்டு தமிழ்தேசியக் கூட்டமைப்பு, மேலதிக மக்கள் முன்னணி என்பனவற்றுடன் பரந்த ஐக்கிய முன்னணியை கட்டப்போவதாகவும் கூறினர்.

ஆறுமுகன் அரசாங்கத்தையும் இந்தியதூதுவராலத்தையும் தன்பக்கம் இழுப்பதற்காகவே அம்முயற்சியை செய்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். சில தமிழ் ஊடகங்கள் அதீத எதிர்பார்ப்பில் அகண்ட தமிழ்த் தேசியம் உருவாகிவிட்டதாகச் செய்திகளை வெளியிட்டன.

ஒரிரு வாரங்களில் எல்லாம் பொய்த்துவிட்டன. அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து உள்ளூராட்சி சபை தேர்தலில் இ.தொ.கா மட்டுமல்ல ம.ம.மு யும் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டது.

ஆறுமுகனும் விமானப்போக்குவரத்து அமைச்சும், முத்து சிவலிங்கத்திற்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்கள் இ.தொ.காவிற்கு கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. சந்திரசேகரனுக்கு சமூக அபிவிருத்தி அமைச்சு கொடுக்கப்படவுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இதனால் முன்னரே அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு சலுகைகளை அனுபவித்துவரும் சுரேஷ் வடி வேல், அருள்சாமி, சதாசிவம் போன்றோர் அச்சமடைந்துள்ளனர். அவர்களின் பதவிகளும் சலுகைகளும் பறிக்கப்படும் என்று பீதியுடன் இருந்து வருகிறார்கள். பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலில் இவை சர்வசா தாரணங்களேயாகும்.

தங்களுக்கு அமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் மென்பதுடன் அருள்சாமி, சதாசிவம் சுரேஷ் வடிவேல் போன்றோரின் பதவிகளும் சலுகைகளும் பறிக்கப்பட வேண்டும் என்பது மேற்படி தலைமைகளின் கோரிக்கையாக இருக்கிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு பின்னால் எதுவும் நடக்கலாம்.

ஆனால் தோட்டத்தொழிலாளரகளின் சம்பளப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படப்போகிறது. அரசாங்க தனியார் துறை ஊழியர்களுக்கு பல நிலைச் சம்பள உயர்வுகள் கிடைத்து விட்டன. வேறு துறைகளை சேர்த்தோர் சம்பள உயர்வுக்காக தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்துகின்றனர். ஆனால் தோட்டத்தொழிலார்களின் சம்பள உய ர்வு பற்றி இப் பதவிவெறி கொண்ட லைவோருக்கு துளி கூட அக்கறை இல்லை. மலையக மக்களின் மண்ணும்- வாழ்விடங்களும் மேல் கொத்மலைத்திட்டத்தின் மூலம் பறிக்கப்படுகிறது.

இதுவரை, நிலம், வீடு இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு அற்றவர்களாகவே மலையக மக்கள் இருந்துவருகின்றனர். இன்னும் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து, வீதிகள் வசதிகளற்ற நிலையிலேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். இது பற்றி யாருக்கு என்ன கவலை? என்றவாறே மலையகத் தலைமைகள் இருந்து வருகின்றன.

இ.தொ.கா. ம.ம.மு அரசாங்கத்துடன் கூட்டணி அமைக்க மேலக மக்கள் முன்னணியும் சதாசிவம் தலையையிலான இலங்கை ஜனநாயக மக்கள் முன்னணியும் தொழிலாளர் தேசிய சங்கமும் (அதன் தேர்தல் சின்னம் விற்கப்பட்டு விட்டது.) அருள் சாமியின் தொழிலாளர் விடுதலை முன்னணி என்பன ஒரு தேர்தல் கூட்டணி அமைத்துள்ளன. அவர்களும் பழைய பாதையில் தான் பயணம் போகிறர்கள். இவர்களை மக்கள் எவ்வாறு நோக்குவார்கள். பொறுத்துக் கொள்வார்களோ தெரியாது.

## பாதுகாப்பின் பேரில் மலையகம்....

தலவாக்கெல்லையில் பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டன. கொட்டகலையில் காவலிலிருந்த பொலிசாரிடமிருந்து துப்பபாக்கி அபகரிப்பு. அட்டனில் வெடிமருந்துடன் இளைஞர் கைது போன்ற தலைப்பில் தினமும் செய்திகள் வெளிவருகின்றன. அதனால் பொலிசார் தேடுதல் செய்கின்றனர். மலையக மக்கள் மத்தியில் பயமும், பீதியும் அமைதியீனமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் சாதாரண மக்களும் இளைஞர்களும் நடமாட முடியாமல் இருக்கின்றனர். மேற்படி செய்திகளை சரியாக சீர்தூக்கிப் பார்த்து தொடர்ச்சியாக அவதானித்து மக்களுக்கு உண்மை நிலைமையை விளக்க வேண்டிய பொறுப்பு ஊடகவியலாளர்களுக்குரியது. இது குறித்து ஊடகவியலாளர்கள் பொறுப்பாக நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. அதிகாரத்திலுள்ளவர்களதும். அதிகாரிகளதும் அறிக்கைகளை அப்படியே செய்திகளாக வெளியிடுவது மட்டும் ஊடகப் பொறுப்பாக முடியாது.

மலையகத்திலுள்ள இளைஞர்களிடையே அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளில் ஏறக்குறைய எல்லாமே தற்போது அரசாங்கத்தில் இணைந்துள்ளன. மக்கள் பயப்பீதியில் இருந்தால் அத்தலைமைகளுக்கு எதிராக சுதந்திரமான முடிவுகளை எடுத்து அவற்றை வெளிப்படுத்த முடியாது. அதனால் அவர்களுக்கு தற்போதைய அமைதியற்ற சூழ்நிலை விருப்பமானதாக இருக்கலாம். சாதாரணமக்களுக்கு அமைதியற்ற சூழ்நிலை தொடர்வதால் பிரச்சினைகளே அதிகமாகும். மலையகத்தில் இளைஞர்களிடையே அமைதியீனம் ஏற்பட்டு பாதுகாப்பு என்று பேரில் மலையகத்தை அரசாங்கம் குழப்புமானால் அதற்கெல்லாம் மலையகத் தலைமைகள் எனப்படுபவைகளே பொறுப்பு ஏற்க வேண்டும்.

## மலையகப் பெருந்தோட்டங்களின் இன்றைய சுகாதார நிலைமைகள்

பெருந்தோட்டத்துறையினைப் பொறுத்தளவில் இங்குள்ள மக்களுக்கான சேவைகள் அனைத்துமே மூன்றாந் தரமானவைகளாகவும் அல்லது அதற்கு பிற்பட்டதாகவுமே காணப்படுகிறது. இவ்வாறானதொரு சூழலில் சுகாதார வசதிகளும் இதே போக்கில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதார சேவை என்பது மக்களுக்குரிய சேவைகளில் முதல் தர சேவையாக மதிக்கப்படுகிறது. இந்த முதலாம் தர சேவையானது தனது முழு வீச்சுடன் தோட்டப்புறங்களில் செயற்படுகிறதா? என்பது வினாவுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

சுகாதார சேவையின் பிரதான கூறான மருத்துவத்துறை நவீன உலகில் பல வியத்தகு பரிணாமங்களை கண்டுள்ளது. ஆனால் தோட்டப்புறங்களில் இதன் பரிணாமங்கள் எத்தகைய பலாபலன்களை ஏற்படுத்தியுள்ளது எனச் சிந்திப்பது தகும். மலையகத் தோட்டப்புறம் சார்ந்த மக்கள் தமக்கேற்படும் நோய்களுக்கான போதிய விளக்கமின்மை காரணமாக திடீர் மரணங்களை சந்திக்கின்றனர். இவர்களது மருத்துவ வசதி கருதி ஒவ்வொரு தோட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவ நிலையங்கள் முறையாக இயங்குவதிலும் சிக்கல்கள் நிறைந்துள்ளன. இங்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்கள் தரமானவையா, அல்லது காலவதியானவையா என்பதும் சந்தேகத்திற்கிடமானதே. ஊதாரணத்திற்கு ஹட்டன் நகரத்தில் நடந்து சம்பவம் ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். பிப்ரவரி மாதம் ஒரு குழந்தைக்கு சுகயீனம் காரணமாக மருந்தெடுக்க சென்ற வேளை காலாவதியான மருந்தினை வைத்தியர் வழங்கியுள்ளார். இதன் காரணமாக பிள்ளைக்கு வாந்திபேதி உண்டாகியுள்ளது. இந்தப் பிரச்சினை பொலிஸ் விசாரணை வரை சென்றுள்ளது. நகரத்திலேயே இந்நிலை என்றால் தோட்டப் பகுதியில் கூறவே தேவையில்லை.

கர்ப்பிணித்தாய்மாரின் வசதி கருதியும் ஏனைய நோயாளரை கருதிற் கொண்டும் தோட்டங்கள் சிலவற்றுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டன. அதுவும் பலதோட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. வழங்கப்பட்ட தோட்டங்களிலும் அவ்வாகனங்கள் அதிகாரிகளின் பிரத்தியேக தேவைகளை பூர்த்தி செய்யும் வகான வளமாக மாறிவிட்டது. இதன் காரணமாக கர்ப்பிணித் தாய்மார் கிளினிக்குகளுக்கு லொறிகளில் மந்தைகள் போல் ஏற்றி செல்லப்படும் அவலம் தொடர்கிறது. வாகனங்கள் பெற முடியாமல் நோயாளரை தூக்கிச் சென்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும் அளவிற்கு போக்குவரத்து துறையின் பின்தங்கிய நிலையில் நிறைய தோட்டங்கள் உள்ளன. அவசர மருத்துவத் தேவைக்காக நிர்வாகத்திடம் வாகன வசதி கேட்கும் பட்சத்தில் அவை அரிதிலும் அரிதாகவே வழங்கப்படும். இங்கு பணிபுரியும் மருத்துவ அதிகாரிகளின் அசட்டை மனப்பான்மையும் கண்டிக்கத்தக்கது. இவர்கள் தகுதியானவர்களாகவும் போதிய பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். தோட்டத்திற்கு கிழமைக்கு ஒரு தடவையாவது நோயாளர் நலன் கருதி அரச சேவை வைத்தியர்களை வருவிப்பது நலமாகும். தோட்டப்புற மக்களை பொறுத்த வரை இங்குள்ள வடிகாலமைப்பு முறைகளினாலும் இதர பல துப்பரவு சீர்கேடுகள் காரணமாகவும் நிறைய நோய்களுக்கு ஆளாகின்றனர்.

தோட்டத்தின் சுகாதார சேவை ஆங்கிலேயர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அற்ப சலுகை மரபிலேயே இன்னும் காணப்படுகிறது. அந்த நிலை, வரட்டுத்தனமாய் மரபைப் பேணும் வழக்கமா அல்லது பிற்போக்குத்தன அரசியலின் வெளிப்பாடோ தெரியாது. எவ்வாறாயினும் இந்நிலை மாறவேண்டும். மலையகத்தை பொறுத்தவரை சுகாதாரத் துறை, போக்குவரத்து, பொருளா தார வசதியின்மை, கல்வி வளர்ச்சியின்மை, திட்டமிடப்பட்ட வங்குரோத்து மனப்பாங்குகள் போன்றவற் றால் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் மலையகம் தன்னுள் கொண்டிருக்கிறது.

மலையகத்தின் சுகாதாரத் துறை மாற்றத்தில் மலையக மாணவர்களின் கல்வியின் நோக்கத்தில் மருத்துவத் துறையின் அவசியத்தினை விரிவுபடுத்துவதும் ஒரு செயன்முறையாக அமையும். இச்சேவையின் சிதைவடைந்த நிலை மலையக மக்களின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும் ஒரு கூறாகும். தோட்டத்து மருத்துவ நிலையங்கள் மூலமாகவே திட்டமிடப்பட் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளும் அமுல்படுத்தப்படுகிறது என்பது இவ்விடத்தில் கூறல்பொருந்தும். இம் மக்களின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும் நிலையிலேயே இங்குள்ள சேவைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது வெளி வெளியாகவே தெரிகிறது.

இவ்விடயத்தில் சுகாதார அமைச்சரும், பிரதி சுகாதார அமைச்சரும் கவனமெடுப்பார்களா? அல்லது "மலையக மக்கள் அரசியல் அநாதைகளல்ல" எனக் வெறுமனே கூவித்திரிவார்களா? இ.தொ.கா. வில் இருந்து அரசாங்கப்பக்கம் சென்ற பிரதி சுகாதார அமைச்சர் பதவி பெற்றவர் தான் திரு.சுரேஷ் வடிவேல். தன்னை ஒரு தோட்டத் தொழிலாளியின் பிள்ளை என்றும் கூறிக்கொள்கிறார். இப்படித்தான் முன்னவர்களும் சிலர் கூறிக் கொண்டனர். பிரச்சினை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார மருத்துவப் பிரச்சனைகளுக்கு குறைந்தளவுதானும் தீர்வு காண ஏதாவது திட்டங்கள் இருக்கிறதா? மக்கள் கோரிக்கைகளை முன்வைத்து போராடாத வரை அமைச்சர்களின் வெறும் வாக்குறுதிகளாகவே இருக்கும்.

சுந்தரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று13 பங்குனி 2006 பக்கம்12 விலை 15/– சுழற்சி 89

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## சாதாரண உழைக்கும் மக்களும் தீராத பொருளாதார சுமைகளும்

உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின்படி வெளிநாடுகளுடனும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் ஒத்துப்போகக் கூடியவாறு இலங்கை அரசாங்கமும் மக்களும் நடந்துகொள்ள வேண்டுமென்றே அந்நிய மூலதன சக்திகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் இலங்கை மக்களின் நலனுக்காக அவர்களின் முன்னெற்றத்திற்காக அவர்கள் எவருமே கவலைப்படுவதில்லை.

எரிபொருள், எரிவாயு போன்றவற்றின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்படுகின்றன. மின்சாரம் நீர் போன்றவற்றுக்கான கட்டணங்களும் அடிக்கடி உயர்த்தப்படுகின்றன. அரசி, மா, சீனி, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் எவ்வித பரிபாலிப்பிற்கும் உட்படுத்தப்படாது அடிக்கடி அதிகரிக்கப்படுகின்றன.

உடல் உழைப்பில் ஈடுபடும் அதிகமானோர் ரூ 3500/ இலிருந்து ரூ. 6000/ வரை மாதாந்த சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால் இரண்டு குழந்தைகளுள்ள ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் சாதாரண உணவுத் தேவைக்கு மட்டும் ஆகக் குறைந்தது. ரூபா 7500/ வது தேவைப்படுகிறது. இதைவிட மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்கள் வீட்டுவாடகைகள் வைத்திய, கல்வி போன்றவற்றுக்கு பெருந்தொகைப்பணம் தேவைப்படுகிறது.

போஷாக்கின்மையால் ஏற்படும் நோய்களுக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. 50 சதவீதத்திற்கு மேற்பட்டோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மகப்பேற்றின்போது ஏற்படும் தாய் சிசு மரணம் என்பவற்றின் எண்ணிக்கை பெரிதாகக் குறையவில்லை. 25 சதவீதமான குழந்தைகள் குறைந்த நிறையுடனேயே (2.5 கிலோ) பிறக்கின்றன.

தனியார் கல்வி சுகாதார நிறுவனங்களினால் இலவச கல்வி, இலவச சுகாதாரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே பொதுப்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியினால் அபிவிருத்தியில் நகரங்களுக்கும் கிராமங்களுக்குகிடையே வேறுபாடுகள் அதிகமாகி வருவதையும் கிராமங்கள் பின்தங்கி இருப்பதையும் நாமறிவோம். நகரங்களில் வசதிகள் இருப்பதாக நம்பி மக்கள் நகரங்களை நோக்கி படை எடுத்த வண்ணமிருக்கின்றனர். ஆனால் கொழும்பு நகரின் நிலைமையைப் பார்த்தால் 50 சதவீதமான மக்கள் கொழும்பு நகரின் 10 சதவீதமான நிலப்பரப்பில் மிகவும் நெரிசலில் வாழ்கின்றனர். அவர்களுக்கு சராசரி சுகாதார வசதிகள் இல்லை. கல்வி வசதிகளும் இல்லை. அவர்களின் வருமானத்திற்கும் கொழும்பில் உயர்வர்க்கத்தினர் பெறுகின்ற வருமானத்திற்குமிடையில் பாரிய வித்தியாசம் இருக்கின்றது.

கொழும்பு நகரில் டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவுவது அதிகமாகவே இருக்கின்றது. சாதாரண மழை பெய்த உடனேயே வீதிகளில் வெள்ளம் ஏற்படுகிறது. வெள்ளநீர் வடிவதற்கு அதிகமான நேரம் எடுக்கிறது. போக்குவரத்தும் மக்களின் நடமாட்டமும் தடைப்படுகிறது.

எமது நாட்டு முதலாளித்துவம் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிலை முன்னெடுத்தபோதும் கிராமங்களிலும் பெருந்தோட்டங்கிளலும் மட்டுமன்றி நகரங்களிலும் கூட அபிவிருத்திகளோ முன்னேற்றங்களோ ஏற்படவில்லை. முதலாளித்துவம் பொதுவாக நகரங்களை முன்னேற்றுகிறது என்று கூறப்பட்டபோதும் நகரத்திலுள்ள சில மேட்டுக்குடிகளை தவிர வேறு எவரும் நன்மை அடையவுமில்லை.

தமிழ்மக்கள் மீதான யுத்தத்தை எமது நாட்டின் சிங்கள மேலாதிக்க அடிப்படையைக் கொண்ட முதலாளிவர்க்கம் திணித்தது. அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்தழிவுகள் அமைதியீனம் என்பன நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் மோசமாகச் சீரழித்துள்ளது. அதனால் எமது நாட்டிற்கென பொருளாதார நிகழ்ச்சி நிரல் எதுவுமில்லாமல் போனது. சிறிதளவாவது வளர்ச்சி கண்டிருந்த எமது நாட்டு தேசிய பொருளாதாரம் உலகமயமாதல் நிகழ்சி நிரலாலும் யுத்தத்திலும் இந்திய மேலாதிக்கதாலும் முற்றாக சீரழிக்கப்பட்டுள்ளது. 1991 தனியார் கம்பெனிகள் பெருந்தோட்டங்களை கையேற்றபிறகு படிப்படியாக பெருந்தோட்டப்பொருளாதாரம் சீரழிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் மக்களுடைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமிருக்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரமும் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி ஏற்றவுடன் மஹிந்த சிந்தனையி னுடாக மக்களின் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பாரிபாலிக்கப்படும் என்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுமென்றும் தேசிய பொரு ளாதாரத்தை மீளக்கட்டியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை விட சாதாரண மக்கள் மீது அன்பு கொண்டவராக மஹிந்த ராஜபக்ச தன்னை தானே காட்டிக்கொண்ட போதும் உலகமயமாதல் பொறியிலிருந்து அவ ராலும் அவரது நிலைப்பாடு காரணமாக விடுபடமுடியவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி மிகவும் பிற்போக்கான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் அவரால் பொருளாதார பிரச்சினைக்கு மட்டும் எவ்வாறு சரியான தீர்வுகளை காணமுடியும். மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை பரிபாலிக்கும் திட்டமும் மக்களின் தன்னிறைவான தேசிய பொருளாதாரமும் முன்னெடுக்கப்பட்டாலேயே தற்போதைய பொருளதார சுமையிலிருந்து மக்கள் ஓரளவாவது விடுபட முடியும். அதனை இன்றைய அரசாங்கத்திடம் எதிர்பார்க்க முடியுமா?

ஆசிரியர் குழு

## ஜெனிவா பேச்சின் பின்புலமும் அரசியல் தீர்வின் எதிர்காலமும்

இலங்கையின் இன முரண்பாடு ஆயுத மோதலாக உருவெடுத்து இருப்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்து விட்டது. ஒரு புறம் பேரினவாத ஆளும் வர்க்க ராணுவ ஒடுக்கு முறை. மறுபுறம் அதனை எதிர்த்த ஆயுதம் தாங்கிய தேசிய இன விடுதலைப் போராட்டம். இதுவரை ஏறக்குறைய ஒரு லட்சம் மக்கள்–போராளிகள் உயிர்ப் பலியாகி உள்ளனர். சுமார் பத்து லட்சம் பேர் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ளனர். எட்டு லட்சம் பேர் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து புலம்பெயர்ந்த அகதிகளாக உள்ளனர். பல நூறு கோடி ரூபா பெறுமதி மிக்க அசையும் அசையாச் சொத்துக்கள் அழிந்தொழிந்து போயுள்ளன. இவை அனைத்திற்குள்ளும் தமிழ் சிங்கள முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் என்போர் உள்டங்குவர்.

இவ்வாறு இன முரண்பாடு விரிசல்களாக துருவமயப்படுத்தப்பட்டு யுத்தமாக்கப்பட்டதன் மூலம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது நாட்டின் பிரதான பிரச்சினையாக முன்னெழுந்து நின்று வந்திருக்கிறது. கடந்த கால் நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலத்தில் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படையான அம்சங்களுக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு காணப்படுவது அலட்சியப்படுத்தப்பட்டு மறுக்கப்பட்டே வந்துள்ளது. அதே வேளை ராணுவ முனைப்புடன் கூடிய யுத்தத்தினால் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையே பதவிக்கு வந்த ஒவ்வொரு பேரினவாத ஆளும் வர்க்கத்தின் நிலைப்பாடாகவும் இருந்து வந்துள்ளது.

இருப்பினும் ஒவ்வொரு அரசாங்கமும் அவற்றின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளும் பேச்சுவார்த்தை என்ற ஒரு வகை நாடகத்தை அரங்கேற்றிக் கொள்ளத்தவறவில்லை. 1985ம் ஆண்டு யூலை ஓகஸ்ட் மாதத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆரின் வழிகாட்டலில் இந்திய அரசின் வழித்துணையுடன் திம்புப் பேச்சுவார்த்தை முதலாவது என்ற இடத்திலிருந்து ஆரம்பித்தது. அன்றிலிருந்து அண்மைய ஜெனிவாப் பேச்சுவார்த்தை என்பது பத்தாவது தடவையாக இடம் பெற்றுள்ளது. இருபத்தியொரு வருடங்களில் இடம் பெற்றுள்ள பத்துப் பேச்சுவார்த்தைகளும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு உருப்படியான தீர்வைக் காண்பதில் எவ்வித முன்னேற்றத்தையும் காணவில்லை என்பது உற்று நோக்க வேண்டியதொன்றாகும். இவற்றுக்கு மேலதிகமாகவே இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையிலும் தமிழர் இயக்கங்கள் கட்சிகளுடனும் பலசுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றே இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அதுவும் தோல்வியிலேயே முடிந்தது.

இவ்வாறு தொடர்ந்து வந்த ஒவ்வொரு கால கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் அரசியல் தீர்வுக்கான இணக்கம் காண முடியாமல் போனமைக்கு இரண்டு காரணங்கள் அடிப்படையானவையாகும். ஒன்று அரசாங்கத்தரப்பில் கடைப்பிக்கப்பட்டு வந்த கடும் பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாடு. இரண்டாவது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை தொடர்ந்தும் எரியும் பிரச்சினையாக வைத்திருப்பதன் மூலம் தமது ஆதிக்க நலன்களைப் பேணிக் கொள்ள காய்களை நகர்த்தி வந்த அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் நிலைப்பாடாகும்.

கடந்த காலத்தை எடுத்து நோக்கின் இடம்பெற்ற பத்துப் பேச்சுவார்த்தை ஒவ்வொன்றிற்கு முன்பாகவும் வடக்கு கிழக்கு மக்களின் மீது கடுமையான ராணுவத் தாக்குதல்கள் இடம் பெற்று வந்துள்ளன. அவற்றுக்கு எதிரான போராட்ட சக்திகளின் எதிர்த்தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன. அவற்றில் அரசாங்கத் தரப்பு ராணுவ வெற்றி என்பது முழுமையானதாக இல்லாத ஒன்றாகவே இருந்தும் வந்தன. அதேவேளை ஒன்றுமறியாத மக்களே அழிவுகளைப் பெற்றனர். இதனால் உலக நாடுகளில் அதிருப்தியும் எதிர்ப்பும் உருவாகிய சூழலில் பேச்சுவார்த்தைக்கான மேசைகள் இடையிடை தயார்படுத்தப்படும் நிலைதொடர்ந்து வந்தது.

இவ்வாறான ஒரு பின்புலச் சூழலிலேயே கடந்த 22ம் 23ம் திகதிகளிலான ஜெனிவாப் பேச்சுவார்த்தை பத்தாவது தடவையானதாக நடைபெற்றது. இப் பேச்சுவார்தை நாடகம் நடாத்தப்படுவதற்கு பலவேறு காரணங்கள் பல தரப்பிலும் இருந்தன. வடக்கு கிழக்கில் ராணுவம் கடற்படை பொலிஸ் படை மீதான தாக்குதல்களும் மக்கள் மீதான எதிர்த் தாக்குதல்களும் தீவிரமடைந்தன. அதே வேளை கொலைகள் ஆட்கடத்தல்கள் ஏனைய வன்முறைகள் உச்சமாகிக் கொண்டன. அவற்றை தணிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு நிர்ப்பந்த சூழல் தேவைப்பட்டது. தான் ஒரு யுத்தவாதி இல்லை என்பதைக் காட்டி ஏற்கனவே முடக்கி வைக்கப்பட்டுள்ள சர்வதேச நிதி உதவியைப் பெறுவது ஜனாதிபதி மகிந்தவிற்கு ஒரு உள்ளார்ந்த தேவையாக இருந்தது. அத்துடன் ஜே.வி.பி - ஹெல உறுமய எவ்வளவிற்கு யுத்தப் பேரிகைக்கு தாளம் போட முற்பட்டாலும் தெற்கின் சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை என்ற யதார்த்தத்தை மீற முடியாமையாலும் அரசாங்கத்திற்கு ஒரு பேச்சுவார்த்தை தேவைப்பட்டது.

அவ்வாறே விடுதலைப் புலிகளும் தன்னிச்சையான முடிவுடன் யுத்தத்திற்குச் செல்வதை மேற்குலக சக்திகள் விரும்பவில்லை. எனவே நோர்வே மூலமான கால்கட்டை போட்டு ஜெனீவாப் பேச்சுக்குக் கொண்டு செல்லும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினர். அவ்வாறே நோர்வேயை கடுமையாக விமர்சனம் செய்திருந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி இந்தியாவிற்கு சென்று வெறும் கையுடன் திரும்பி வந்த பின் அதே நோர்வேயிடம் கையேந்தி நிற்கும் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டார். எனவே ஜெனிவாப் பேச்சுவார்த்தை உள்நாட்டு நிலைமைகளின் வற்புறுத்தல்களும் மேற்குலக சக்திகளின் அழுத்தங்களும் சேர்ந்து இரு தரப்புக்களையும் ஜெனிவா சென்றடைய வைத்தது.

இந்திய ஆளும் வர்க்கமும் அதன் அரசாங்கமும் தேசிய சர்வதேச ரீதியில் பல்வேறு நெருக்கடிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நிற்கிறது. அதிலும் குறிப்பாக காஷ்மீர் வடகிழக்கு மாநிலங்களின் ஆயுதப் போராட்டங்கள் குறிப்பாகத் தமிழகம் உள்ளிட்ட மாநிலத் தேர்தல்கள் என்பன முக்கிய பிரச்சினைகளாகும். இந்நிலையில் உடனடியாக இலங்கை விவகாரத்தில் அரசியல் ராணுவத் தலையீட்டை வெளிப்படையாகச் செய்யத் தயாராக இல்லை. சில வேளை சட்டசபைத் தேர்தலுக்குப் பின் மாற்றங்கள் ஏற்படலாம். இந்தியா கிட்ட இருந்தாலும் சற்று எட்ட இருந்தே இலங்கை நிலைமைகளை உற்றுநோக்கி வரும் அதே வேளை தமது மூலதன ஊடுருவலை மிகவும் கச்சிதமாக முன்னெடுத்து வருவதும் ஆழ்ந்து நோக்கவேண்டியதாகும்.

இத்தகையதோர் இடைவெளியை அமெரிக்க மேற்குலக சக்திகள் தங்களுக்குரியதாகப் பயன்படுத்தும் காய்களை நகர்த்தி வருகின்றது. அமெரிக்க தூதுவரின் உரை, உலகவங்கித் தலைவரின் ஆலோசனை, அமெரிக்க வெளிவிவகார உதவிச் செயலாளர் நிக்கலஸ் பேணஸ் போன்றவர்களின் வருகைக ஆலோசனை வழிகாட்டல்கள் தற்செயலானவை அல்ல. குறிப்பாக நோர்வே அமைச்சரும் அனுசரனையாளருமான எரிக் சொல்ஹெய்ம் இங்கு வந்த வேளை யில் அமெரிக்க உதவிச் செயலர் பேண்ஸ் இங்கிருந்து ஆலோசனை வழங்கியமை தற்செயலான ஒன்றல்ல.

நடந்து முடிந்த ஜெனிவாப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் மிகமிக மெலிதானவையும் பலவீனங்கள் கொண்டவைகளுமாகும். அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையும் கூட அர்த்தமுடையதாக அமையுமா என்பதும் சந்தேகமானதேயாகும். யாவற்றுக்கும் மேலாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை நடைமுறைப்படுத்த இத்தனை சிரமங்களும் விட்டுக் கொடுப்பின்மையும் இதய சுத்தி அற்ற நிலையும் என்றால் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது என்பது எவ்வளவு கடினமானது என்பதை முன் அனுமானித்துக் கொள்ள முடியும். எனவே அடுத்த ஜெனிவாப் பேச்சுவார்த்தையாயினும் அல்லது தொடர இருப்பதாகக் கூறப்படும் எந்த ஒரு அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையாகிலும் பேரினவாத நிலைப்பாடு கடந்து யதார்த்தத்தை புரிந்து ஏற்றுக் கொள்ளும் ஒன்றாக அமைந்தால் மட்டுமே அர்த்தமுள்ள அரசியல் தீர்வை அண்மிக்க முடியும். அவ்வாறே புலிகள் இயக்கமும் வெறுமனே தமது இருப்பையும் தொடர்ச்சியையும் கடந்து தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை பிரதிபலித்து செயலாற்ற முன்வரல் வேண்டும்.

**வெகுஜனன்**

### 21 வருடகால சமாதானப் பேச்சுவார்த்தை விபரம்

1-1985-யூலை- ஓகஸ்ட்
திம்பு

2- 1989- மே- 90 யூன்
கொழும்பு

3-1995-ஜனவரி-ஏப்பிரல்
யாழ்ப்பாணம்

4-2002 செப்டம்பர் 16-18
தாய்லாந்து

5-2002 ஒக்ரோபர்31 நவம்பர்3
தாய்லாந்து

6-2002 டிசம்பர் 2-5
நோர்வே

7- 2003 ஜனவரி 6- 9
தாய்லாந்து

8- 2003 பெப்பவரி 6- 8
ஜேர்மனி

9 - 2003 மார்ச் 18-21
யப்பான்

10- 20006 பெப்ரவரி 22-23
ஜெனிவா.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையில் அதிகரிக்கும் அமெரிக்கக் குறுக்கீடு !





இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையைப் போராக வளர்த்தெடுக்க உதவிய நாடுகளில் அமெரிக்காவும் இந்தியாவும் முக்கியமானவை. இரண்டு மேலாதிக்கச் சக்திகளதும் நோக்கங்களும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் குறுக்கிடுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திலும் அரசியலிலும் இராணுவ அலுவல்களிலும் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்துவது தான். இந்தியா–அமெரிக்க அதிகார வர்க்கங்களிடையிலான சமரசம் இன்று நெருக்கமான ஒத்துழைப்பாகியுள்ளன. இன்றைய சூழலில் தென்னாசியப் பகுதியில் இரண்டு ஆதிக்கச் சக்திகளும் நேரடியாக மோத இடமில்லை என்றாலும் ஒன்றுக்கு மற்றது குழிபறிக்கிற வேலை தொடர்ந்து நடக்கும். தென்னாசியாவிலும் இந்து சமுத்திரப் பிரதேசத்திலும் இந்தியா தனது ஆதிக்கத்தைப் பல வேறு முகவர்கள் மூலம் நடைமுறைப்படுத்துகிறது. அமெரிக்காவின் முகவர்களான தரகுமுதலாளிகள் இந்த நாட்டில் நீண்டகாலமாகவே யூஎன்.பி. மூலம் செயற்பட்டுள்ளார்கள். அதற்கும் மேலாக ஒரு பெருவல்லரசு என்ற வகையில் அமெரிக்காவின் அதிகாரம் சர்வதே வணிக, நிதி நிறுவனங்கள் மூலமும் தருணம் வாய்க்கும் போது இராணுவக் குறுக்கீட்டின் மூலமும் நடைபெறுகிறது. சுனாமியின் பின்பு அமெரிக்கா நிவாரணவேலை என்ற பேரில் தனது படைகளை இங்கு தரையிறக்கியதும் தனது உளவாளிகளைக் கரையோரப் பகுதிகளில் காரியத்தில் இறக்கியதும் பற்றி முன்னரே புதிய பூமியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இப்போது அமெரிக்கா தனது அடுத்த கட்ட நகர்வைத் தொடங்கியுள்ளது.



விடுதலைப் புலிகளை அமெரிக்காவும் அதன் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்ட பிரித்தானியாவும் தடை செய்யக் காரணம் விடுதலைப் புலிகளால் தமது நாடுகளுக்கு ஏற்படக் கூடிய அபாயமோ இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் நிர்ப்பந்தமோ அல்ல. விடுதலைப் புலிகள் மீது பலவேறு நெருக்குவாரங்களைப் பிரயோகித்து அதன் மூலம் இலங்கை மீது நமது ஆதிக்கத்தை முழுமைப்படுத்துவதே அவர்களது நோக்கமாக இருந்து வந்துள்ளது. அது போலவே நிதி ‘உதவி’ அமைதிப் பேச்சுவார்த்தைகள், சுனாமி நிவாரணம் என்பன சார்ந்த பலவேறு முன்நிபந்தனைகளும் இலங்கை அரசாங்கத்தின் மீது விதிக்கப்படக் காரணம் இங்கே அமைதியை நிலைநாட்டுவதல்ல. இலங்கை அரசாங்கம் அமைதியை விட முக்கியமான தங்களது வேறு நிபந்தனைகட்கும் பணிந்து நடப்பதை உறுதி செய்வதே அவர்களது நோக்கமாகும்.

**~மோகன்~**

இலங்கை அரசாங்கம் ஈரானுடன் எரிபொருள் கொள்வனவு உட்பட்ட வேறு வணிக உடன்படிக்கைகளை மேற்கொண்டு ஈரானுக்குச் சிறிது நெருக்கமாகும் வாய்ப்பும், அமெரிக்கா ஈரானைத் தனிமைப்படுத்த எடுக்கிற முயற்சிகளும், வருடத் தொடக்கத்தில் விடுதலைப் புலிகளைக் கண்டித்து அமெரிக்காவின் இலங்கைத்தூதர் பேசியதும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. முன்னெப்போதுமில்லாதவாறு ஜெனிவாவில் நடக்கவுள்ள பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்புக் குழுவின் தலைவருடன் அமெரிக்கத் தூதர் நடத்திய கலந்துரையாடல் இலங்கையின் அலுவல்களில் அமெரிக்கக் குறுக்கீடு தொடரும் என்பதற்கான அறிகுறியே.

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல் காரணமாக இந்திய அரசாங்கமும் தமிழகத்தில் பிரதான அரசியல் கட்சிகளும் இலங்கைத் தமிழருக்கு எதிரானது என்று தோன்றக்கூடிய நிலைப்பாடுகளைக் கவனமாகத் தவிர்த்து வருகின்றனர். சுனாமியின் பின்பு இலங்கை அரசாங்கம் வடக்கு– கிழக்கைப் புறக்கணித்தும் அரச படைகள் சாதாரண தமிழ் மக்கள் மீது நடத்தி வந்துள்ள தாக்குதல்களும் அமைதிப் பேச்சுக்கள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளதும், தமிழகத்தில் இவ்வளவுகாலாமாக விடுதலைப் புலிகட்கும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான பார்ப்பனிய நிறுவனப் பிரசாரத்தைச் சிறிது பலவீனப்படுத்தியுள்ளன. எனவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான கடும்போக்கு தமிழகச் சட்டசபைத் தேர்தலில் வீண் இழப்புக்களுக்கு வழி வகுக்கும் என்பதே பொது வான கணிப்பாக இருக்கிறது. எனவே தமிழகச் சட்டசபைத் தேர்தல் முடியும் வரை இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவான வெளிவெளியான நிலைப்பாடு என்பதையும் தவிர்க்கும் என எதிர்பார்க்கலாம். அமெரிக்கா இந்த இடைவெளியையும் தனக்கு வசதியாகவே பயன்படுத்திக் கொள்கிறது.

**அன்றைய இந்தியக் கனவும் இன்றைய அமெரிக்கக் கனவும் நாட்டுக்கு நாசத்தையே தரும்**

ஒரு விடயம் பற்றி மட்டும் நாம் தெளிவாக இருக்க வேண்டும். அமெரிக்கா விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த மீறல்கள் பற்றியோ ‘பயங்கரவாதம்’ பற்றியோ எதுவுமே பேசாத காலங்கள் இருந்துள்ளன. சுனாமிக்குப் பின்பு விடுதலைப் புலிகட்கு அனுதாபமாக நடப்பது போலவும் ஒரு மயக்கம் இருந்தது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பாலஸ்தீனத்தை மீட்கும் போராட்டத்தில் ஹமாஸின் பாதையும் பயணமும்

மேற்குலகநாடுகள் அதிர்ச்சியில் இருக்கின்றன. அவற்றால் பாலஸ்தீன தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 132 ஆசனங்களைக்கொண்ட பாலஸ்தீன சட்டவாக்க மன்றத்தில் ஹமாசுக்கு 76 ஆசனங்கள் யசீர் அரபாத் தோற்றுவித்து வளர்த்து அதிகாரத்தில் இருந்த ஃபதாவிற்கு 43. அதைவிட சுயேட்சையாக வென்ற நான்கு வேட்பாளர்கள் தங்கள் ஆதரவை ஹமாசுக்கு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். ஆகவே பாலஸ்தீன சட்டவாக்க மன்றில் மொத்தம் 80 ஆசனங்கள் ஹமாசுக்கு இருக்கின்றன. இதன் மூலம் பலஸ்தீனப் பிரச்சினையில் ஹமாஸ் இயக்கம் பிரதான இடத்திற்கு வந்துள்ளது. அத்துடன் ஹமாஸ் சர்வதேச அரசியல் அரங்கில் நுழைகின்றது. எனவே ஹமாஸின் காய் நகர்த்தல்கள் எவ்வாறு அமையப்போகின்றது. ஃபதா அமைப்போ தாங்கள் ஹமாசுடன் அரசாங்கத்தில் இணையமாட்டோம் என தெரிவித்துள்ளார்கள். என்ன தான் நடக்கப்போகிறது.

*** ஜனநாயகம் – இஸ்லாம்**

மீண்டுமொருமுறை உலகுக்கு குறிப்பாக மேற்குலகுக்கு அராபிய நாடுகளில் ஜனநாயகம் என்பது இஸ்லாம் தான் என்ற உண்மையை உணர்த்தியிருக்கின்றது. ஆனால் பல நாடுகள் இதை எப்போதும் போல் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதும் யாதார்த்தம். இஸ்லாமின் வெற்றியை அம்மக்களின் மத நம்பிக்கைகள் சார் வெளிப்பாடுகளாகத்தான் ஜனநாயகம் அமைய முடியும் என்பதை ஏற்க அவர்கள் தயாராக இல்லை. அமெரிக்கா தன் கழுகுப் பார்வையை சிரியாமீது ஈரான் மீது வைத்துக்கொண்டு இவ்விரு நாடுகளையும் ஜனாநாயக மயமாக்கி மத அடிப்படைவாதத்தை அடக்க வேண்டும் என்பதில் அர்த்தமே இல்லை என்பதை இத்தேர்தல் முடிவுகள் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளன.

*** ஜனநாயகமுள்ள மதசார்பற்ற ஒரு பாலஸ்தீனம்–**

இவ்வளவு காலமும் எல்லோரும் ஜனநாயகமும் மதச்சார்பற்றதுமான ஒரு பாலஸ்தீனநாடு உருவாக வேண்டும் என்று கோரி வந்துள்ளனர். ஆனால் இது பாலஸ்தீன நடைமுறைக்கு வெகு தொலைவானது என்று நிறுவப்பட்டுள்ளது. பெரும்பாலான பாலஸ்தீன மக்கள் ஒரு இஸ்லாமிய தேசத்திலேயே இருக்க விரும்புகிறார்கள். ஜனநாயகம் என்றால் “மக்களின் குரல்” என்பது மேற்கத்திய கோட்பாடு என்று நினைக்கும் அவர்கள் இது அவர்களின் பண்பாட்டு கோலங்களை பாதிக்கும் என்றும் கருதுகின்றார்கள். தேர்தல்களின் முடிவு பாலஸ்தீனர்களின் இஸ்லாமிய தேச எதிர்பார்ப்பேயாகும்.

*** முக்கியமிழந்த உரையாடல்– தேவைப்படும் புதியமுகம்**

உரையாடல்களில் சமாதானத்தின் பாதை என்பதையே இவ்வளவு காலமும் பாலஸ்தீன நிர்வாகம் நம்பியதுடன் அதையே செயற்படுத்தியும் இருக்கின்றது. ஆயுதப்போராட்டமே முடிவு என்ற வழியில் இறங்கிய ஹமாஸ் இன்று தேர்தலில் வென்றுள்ள திசையில் உரையாடல் என்பது இனி தெரிவுக்கு உரிய ஒன்றாக கருதப்படாமல் போகலாம். இந்நிலையில் சமாதானத்துக்கான வழி என்ன என்பது கேள்வியாக இருக்கின்ற போதும் வெறுமனே உரையாடல்கள் தீர்வல்ல என்பதை பாலஸ்தீன மக்கள் நிரூபித்துள்ளனர்.

* இஸ்ரேலிய மனங்களின் உண்மையாக சோர்வு தென்படுகின்ற வேளையிலும் வழமை போலவே போராட்ட உணர்வோடு பாலஸ்தீனியர்கள்.

**-ஏகலைவா-**

கடந்த சில மாதங்களில் இஸ்ரேலிய தெருக்களில் இப்பிரச்சினை தொடர்பான மக்களின் எண்ணங்களில் மாற்றத்துக்கான குறிகள் தெரிகின்றன. தடுப்புச் சுவருக்கு எதிரான இயக்கத்தில் அதிகளவான இஸ்ரேலியர்கள் பங்குபற்றுவதும் தங்கள் அரசு சும்மா இருந்தால் தாங்கள் பாதுகாப்பாக வாழலாம் என்ற மனநிலையும் அதிகரித்திருக்கின்றது. அவர்க்ளை அவர்கள் பாட்டில் விட்டுவிட்டு நாங்கள் எங்கள் வழி அமைதியாக இருப்போம் என்று நினைக்கும் இஸ்ரேலிய பொதுசன அபிப்பிராயம் அதிகரித்திருக்கிறது. ஆனால் அதேபோல போராடியே வெல்வது, உரிமைகளை மீட்டுக் கொள்வது என்ற கொள்கையில் தொடர்ந்து பிடிவாதமாகவும் கொளகைப்பிடிப்போடும் இருக்கிறார்கள் பாலஸ்தீனியர்கள். தேர்தலில் ஹமாஸ் பெற்ற வெற்றியும் ஃபதா அடைந்த தோல்வியும் இதற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

## திருவாய் மலர்ந்த புஷ்:

தேர்தல் முடிவுகளினால் அதிர்ச்சியடைந்திருந்த புஷ் வழமைபோல தனது அறிவுரைகளை ஹமாசுக்கு வழங்கியுள்ளார். “ஹமாஸ் தனது வன்முறைப்போக்கைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்துடன் ஒழுங்காக இணைய வேண்டும். அது தான் நல்லது. அப்போதே அவர்களுக்கான அங்கீகாரமும் அமெரிக்காவால் வழங்கப்படும்” ஆனால் இஸ்ரேல் அமெரிக்க அங்கீகாரத்தை பெறுவதற்கு புஷ் சொன்ன அதே வன்முறையை ஏற்கனவே கைவிட்டிருக்க தேவையில்லை. இஸ்ரேலிய அரச பயங்கரவாதத்துக்கும் ஹமாஸ் “பயங்கரவாதிகளுக்கும்” பெரிய வித்தியாசமில்லை. இரண்டும் ஒன்றைத்தான் செய்கின்றன. ஒரே ஒரு வித்தியாசம் இஸ்ரேலிய அரசு பெரிய ஆயுதங்களைப் அமெரிக்க ஆசியுடன் பயன்படுத்துகிறது. ஹமாஸ் சிறியவகை ஆயுதங்களுடன் பலஸ்தீன மக்கள் சார்பாகப் போரிடுகிறது. ஹமாசுக்கு அறிவுரை வழங்கும் புஷ் நிர்வாகம் தனது படைவீரர்கள் ஈராக்கில் இதுவரை பல ஆயிரம் வரையான ஈராக்கியர்களை கொலை செய்ததை அவர்களது அகராதியில் ஜனநாயகம் என்று காட்டவே முற்படுகிறார்கள்.

2005 டிசம்பரில் பாலஸ்தீன தேர்தலில் ஹமாஸின் கை ஓங்குவதை அவதானித்த அமெரிக்கா உடனடியாக அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி “வன்முறையைக் கைவிடும் வரை ஹமாஸை தேர்தலில் பங்குபற்ற அனுமதிக்கக் கூடாது. அதையும் மீறி பாலஸ்தீன தேசிய அதிகாரசபை (PNA) அனுமதித்தால் வாஷிங்டன் பாலஸ்தீனத்திற்கு செய்து வரும் சகல உதவிகளையும் (நிதிஉட்பட) நிறுத்துவதும், சொத்துகளும் முடக்கப்படும்” என அறிவித்தது. உடனே தாங்களும் அமெரிக்காவுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்க ஐரோப்பிய ஒன்றியம் “ஹமாஸ் தேர்தலில் வெற்றி பெற்றால் பாலஸ்தீன அதிகார சபைக்கான நிதி உதவிகளை நிறுத்துவது குறித்து கவனத்தில் எடுப்போம்” என்றது.

இவ்வளவு காலமும் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தாலும் பாலஸ்தீன அதிகாரசபை எப்போதும் அமெரிக்காவுக்கு தலையிடியில்லாததாகவும் ஒத்துப்போவதுமாக இருந்து வந்துள்ளது. ஆனால் இனி அது சாத்தியமில்லை என்பது அமெரிக்காவுக்கு தெரியும். அண்மைய பத்திரிகையாளர் மகாநாட்டில் ஹமாஸ் வெற்றி குறித்து கேட்கப்பட்டபோது ”அராபிய நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டவே அமெரிக்கா விரும்புகிறது அதற்கான வழிகளும் எங்களுக்குத் தெரியும்” என்று சிரித்தபடியே பதிலளித்தார் புஷ். அவர் சொல்கின்ற வழிகளைப் பற்றி தெரிய வேண்டுமானால் அராபிய நாடுகளின் வரலாற்றை ஒரு முறை மீள நினைவூட்டினால் எல்லாமே தெளிவாகும்.

– மிகுதி அடுத்த இதழில் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பரந்துபட்ட முஸ்லீம் மக்களின் மாற்று அரசியல் பாதை எது?

ஆரம்பத்தில் முஸ்லீம்கள் வடக்கு கிழக்கில் பெரும்பாலும் தமிழ்க்கட்சிகளிலும் ஏனைய பிரதேசங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.கட்சிக்கும் ஆதரவாக அணிதிரட்டப்பட்டனர். தமிழ்க்கட்சிகள் முஸ்லீம் மக்களுடைய தனித்துவத்தை அங்கீகரித்து நடக்காததன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் மத்தியில் சு. கட்சி ஐ. தே. கட்சி என்பவற்றுக்கான முஸ்லீம் பிரதிநிதிகள் வளர்க்கப்பட்டனர். இதனூடாக சில முஸ்லீம்கள் சலுகைகள் பெற்றனர். சிற்சில அபிவிருத்தி நடவடிக்கைகள் முஸ்லீம் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டன. கிழக்கு மாகாணத்திலிருந்து முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் சு.க, ஐ.தே.கட்சியினூடாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் சிலர் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் பதவி வகித்தனர். கிழக்கிற்கு வெளியிலும் முஸ்லீம்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு. சிலர் அமைச்சர்களானார்கள்.

இவ்வாறு முஸ்லீம்கள் இரண்டு பிரதான பேரினவாத முதலாளித்துவக் கட்சிகளுடன் இணைந்து இருந்த போதும் உரிய அபிவிருத்திகள் மக்களுக்கு கிட்டவில்லை. அத்துடன் தொடர்ந்தும் பாதுகாப்பற்றவர்களாகவும் இருக்கின்றனர். எனவே முஸ்லீம்களின் அரசியல் பேரப்பேச்சுக்காக முஸ்லீம்களுக்கென முஸ்லீம் கட்சியொன்று அவசியம் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது. இதற்கு இஸ்லாமிய மதத் தேசியவாத அடிப்படைகள் நாடப்பட்டன. இந்த அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது.

1980 களில் வளர்ச்சியடைந்த தமிழ்த் தேசியவாத இளைஞர் ஆயுத அமைப்புகளில் கணிசமான முஸ்லீம் இளைஞர்கள் பங்கெடுத்தனர். 1990 களில் அவ்வியக்கங்களில் முஸ்லீம் இளைஞர்கள் வேறு இனத்தவர் என்ற சந்தேகத்துடன் அணுகப்படும் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. ஏற்கனவே இருந்து வந்த தமிழ் முஸ்லீம் பழமைவாத தேசியவாத மதவாத முரண்பாடுகள் தூண்டப்பட்டன.

தமிழ் இயக்கத்திற்குள் முஸ்லீம் என்றவாறு ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் இரண்டு இனங்களுக் கிடையிலானதாக கூர்மையாக்கப்பட்டன. இவ்வாறான நிகழ்வுகளில் தமிழ் இயக்கங்களில் இருந்துவந்த முஸ்லீம் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்படுமளவிற்கு நிலைமை உருவாக்கப்பட்டன. பின்பு கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் தமிழ்மக்களிடையேயான மோதல்களாகவும் வளர்க்கப்பட்டன. அத்துடன் வடக்கிலிருந்து 24 மணி த்தியாலங்களுக்குள் முஸ்லீம்கள் கொடுமையான முறையில் வெளியேற்றப்பட்டனர்.

இந்த முரண்பாடுகளை சு.க, ஐ.தே.க பேரினவாத அரசாங்கங்கள் நன்கு பயன்படுத்தி கொண்டன. தமிழ்மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு முஸ்லீம் மக்களின் ஆதரவு கிடைக்காத விதத்தில் முஸ்லீம் மக்களை பயன்படுத்த அரசாங்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டன. பொலிஸ், இராணுவம் என்பவற்றிலும் ஊர்காவல் படையிலும் முஸ்லீம்கள் உள்வாங்கப்பட்டு அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஆயுததாரிகளாக வேலைக்கமர்த்தப்பட்டனர். மேலும் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு எதிராக செயற்படும்வகையில் பாதுகாப்புத்துறையில் முஸ்லீம்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

**முஸ்லீம் மக்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதே வேளை அவர்களிடையே இருந்து வரும் வர்க்க சமூக ஏற்றத் தாழ்வுகள் மதத்தின் பேரால் மறைக்கப்படக் கூடாது.**

இந்த முரண்பாடுகளை சு.க, ஐ.தே.க பாவித்தது போன்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசும் முஸ்லீம் தேசிய வாதம் மூலம் பாவித்தது. அதன் மூலம் முஸ்லீம் மக்கள் மத்தியில் அக்கட்சி தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. இக்கட்சியை தமிழ் இயக்கங்களுக்கு எதிராக வளர்ப்பதில் சு.க. ஐ.தே.கட்சி என்பன மட்டுமன்றி இந்தியாவும் முக்கிய பங்காற்றியது. இக்கட்சியை 1987 இல் மாகாணசபை தேர்தலில் போட்டியிடச் செய்து வடக்கு கிழக்கு மாகாணசபையில் எதிர்க்கட்சியாக வருவதற்கு இந்தியா அக்கட்சிக்கு பாரிய உதவிகளை செய்து கொண்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அரசியல்தீர்வு காண்பதற்கு தடையாக முஸ்லீம் காங்கிரசை இலங்கையின் சிங்கள பௌத்த பேரினவாதிகள் நன்கு பயன்படுத்தினர் என்பது இரகசியமல்ல. அக்கட்சி பெரிதாக வளர்ச்சியடைந்த வேளையில்தான் அதன் தலைவர் அஷ்ரப் ஹெலிஹொப்டர் விபத்தில் இறந்தார். இன்றும் அதன் விளக்கம் புரியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

அரசாங்கம் அமைப்பதில் இம் முஸ்லீம் காங்கிரஸ் இரண்டு பேரினவாத கட்சிகளுக்கும் உதவியது. இதன் உச்சத்தில் இரண்டு கட்சிகளின் தலைமைகளிடமும் பேரம்பேசி அமைச்சுப் பதவிகளையும் உயர் பதவிகளையும் பெற்றுக் கொண்டது. பின்பு ஆளும் பேரினவாதக் கட்சிகளுடனான பதவிப் பேரப்பேச்சில் முரண்படவும் செய்தது. ஆனால் முஸ்லீம் தலைவர்களிடம் காணப்பட்ட பதவி ஆசைகள் அதனால் ஏற்பட்ட முரண்பாடுகள் என்பவற்றின் காரணமாக முஸ்லீம் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. இதற்கு கிழக்கு மாகாண முஸ்லீம் வெளிமாகாண முஸ்லீம் என்ற பேதம் நன்றாகவே பயன்படுத்தப்பட்டது.

முஸ்லீம் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்றவர்கள் முஸ்லீம் மக்களின் பெயரால் 12 முஸ்லீம் கட்சிகளை தொடக்கியுள்ளனர். பாராளுமன்ற அரசியலை விமர்சிப்பவர்களாகக் காட்டிக் கொண்ட சில முஸ்லீம் இளைஞர்களும் ஏதோவகையில் பிரதான பாராளுமன்ற அரசியல் கட்சிகளுடன் ஒட்டிக்கொண்டிருப்பதையே காணமுடிகிறது.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் பெருந்தொகையான முஸ்லீம் மக்கள் வறுமை கோட்டிற்கு கீழான நிலையில் வாழ்கின்றனர். தொழிலாளர்களாக விவசாயிகளாக அரசாங்க ஊழியர்களாக பெரும்பாலான முஸ்லீம்கள் சாதாரண உழைக்கும் மக்களாகவே இருக்கின்றனர். யுத்தத்தினாலும், இனமுரண்பாட்டினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். சுனாமிப் பேரழிவு அவர்களை மேலும் மோசமாகப் பாதித்தது.

இவர்களுடைய அபிலாஷைகளை பிரதிபலிப்பதாக முஸ்லீம் தலைமைத்துவங்கள் இன்று இல்லை என்பதே இன்றைய யாதார்த்தமாக உள்ளது. மதம் என்ற பொதுத்திரையை இட்டு சகல முஸ்லீம் மக்களையும் தாம் பிரதிபலிப்பதாகவே எல்லா முஸ்லீம் தலைமைகளும் கூறுகின்றன. ஆனால் முஸ்லீம்கள் மத்தியில் காணப்படும் வர்க்க சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி யாரும் வாய்திறப்பதில்லை. மிகப்பெரும் சொத்து சுகம் படைத்த சுரண்டல் நடாத்தும் முஸ்லீம் தனவந்தர்களும் அன்றாட வாழ்வுக்காக அல்லாடும் ஏழை முஸ்லீம்களும் மதத்தின் முன்னால் சமம் என்று கூறப்படுகிறதே தவிர சமூகவாழ்வில் இல்லாதோர் பெரும்பான்மையானவர்களாகவும் உழைப்போராகவுமே உள்ளனர். அத்தகையோரின் வாழ்வு இருண்ட வாழ்வாகவே இருந்து வருகின்றமை மறைக்கப்படுகிறது. முஸ்லீம் மக்கள் அவர்களின் மதரீதியான தனித்துவங்களை தன்னடையாளங்களையும் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மையாகும். அவர்களும் அடக்கப்படுகின்ற இன்னொரு தேசிய இனத்தவர்கள் என்பதும் யதார்த்தம். பேரினவாதிகள் முஸ்லீம் மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையேயான முரண்பாடுகளை நன்கு பாவித்து வருகின்றனர். அவ்வறாறே முஸ்லீம் தலைமைகளும் அவற்றை பாவித்து வருகின்றனர் என்பதும் உண்மையாகும்.

முஸ்லீம் மக்களின் மத உரிமைகளை ஏற்று அங்கீகரிக்கின்ற அதே வேளை மதசார்பின்மையை கொண்ட முஸ்லீம் தலைவர்கள் இருந்திருக்கின்றனர். இடதுசாரிக் கட்சிகளிலும் மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட் கட்சியிலும் இருந்திருக்கின்றனர். இலங்கை முஸ்லீம்களிடையே தற்போது பெருவாரியாக இடதுசாரி விரோதம் மாக்சிய விரோதம் நன்கு பிரசாரப்படுத்தப்படுகிறது, மாக்சிசம் மதத்திற்கு எதிரானதென்பதும், மாக்ஸ் ஒரு யூதர் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டு மாக்சிசத்திற்கு எதிராகவும் இடதுசாரி அரசியலுக்கு எதிராகவும் பிரசாரம் செய்யப்படுகிறது.

விஞ்ஞானபூர்வமற்றவை என்பதற்காகவும் அரசியல் ஆதிக்கத்திற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதாலும் மதங்களை மாக்சிசம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தனிமனிதனின் மனச்சாட்சி சுதந்திரத்திலும், மதச்சுதந்திரத்திலும் மாக்சிசம் தலையிடுவதில்லை. மதங்களினூடாக மக்களிடையே பிளவுகள் ஏற்படுத்தப்படுவதையும் அரசியல் மேலாதிக்கம் செலுத்தப்படுவதையும் அடிப்படைவாதம் வளர்க்கப்படுவதையும் மாக்சிசம் ஏற்றுக் கொள்வதில்லை. அதே வேளை குறிப்பிட்ட மக்கள் குறித்த மத அடிப்படையான வாழ்க்கையை கொண்டிருக்கிறார்கள் என்பதால் அவர்களின் விடுதலை, உரிமைகள் தொடர்பாக அக்கறையற்று இருக்கவும் முடியாது. பேசாது ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது.

**(எம். ஐ. எம். அன்வர்)**

முஸ்லீம்கள் அதிகமாக வாழும் துருக்கி, எகிப்து, பாகிஸ்தான் போன்ற முஸ்லீம் நாடுகளிலும் ஏனைய முஸ்லீம் நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தீவிரமாக இயங்குகின்றன. பங்களாதேஷில் சக்திமிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன. பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான். ஈரான், ஈராக் போன்ற நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன. பிறப்பால் முஸ்லீம்களாக இருக்கின்ற காரணத்திற்காக எல்லா முஸ்லீம்களும் மாக்சிசத்தை வெறுக்கவில்லை. அத்துடன் மாக்சித்தை ஏற்றுக் கொண்ட உலகப்பெயர் பெற்ற முஸ்லீம் கல்வியாளர்கள் அறிஞர்கள் இருந்து வருகிறார்கள்.

அனைத்து அடக்கு முறைகளிலிருந்தும் விடுதலை அடைவதற்கான வழிவகைகளை மாக்சிய ஒளிகொண்டு அறிந்து அதன்படி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதே சரியான பாதையாக இருக்க முடியும் என்பதை முஸ்லீம் சமூகத்திலிருந்து வந்த பல மாக்சிச அறிஞர்கள் வற்புறுத்தி வருவதையும் காணமுடியும். முஸ்லீம் மக்களிடையே இதுவரை ஏறக்குறைய எல்லா வகையான முதலாளித்துவ பிரபுத்துவ, மத அடிப்படையிலான அரசியல் மார்க்கங்களும் முன்னெடுக்கப்பட்டுவிட்டன. எஞ்சி இருப்பது ஒரே வழியான மாக்சிய லெனினிஸ அடிப்படையிலான அரசியல் வழிமுறை மட்டுமேயாகும். எனவே இலங்கையின் பேரினவாத ஆளும் முதலாளித்துவ வர்க்க சக்திகளையும் அவர்களுடன் இணைந்து நிற்கும் ஏகாதிபத்தியத்தையும் முஸ்லீம் மக்கள் எதிர்ப்பதற்கு உள்ள மார்க்கம் குறுகிய மதத்தேசியவாதமாக இருக்க முடியாது என்பது புதிய தலைமுறை முஸ்லீம்களிடையே உணரப்படுவது அவசியம். அதற்குரிய மாற்று மாக்சிசம் லெனினிசமாகவே இருக்க முடியும்.

## இலங்கையில் ஆதிக்கம்

6ம் பக்க தொடர்ச்சி

பில் கிளின்ற்றன் இங்கு வந்து போன ஒவ்வொரு முறையும் அவர் மூலம் தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு அமெரிக்க நிலைப்பாட்டை இயலுமாக்கலாம் என்ற எண்ணம் பல தமிழ்த் தேசிய வாதிகளிடையே இருந்தது. அமெரிக்க வெளிவிவகார உதவிச் செயலாளர் கிறிஷ்ரினா ரொக்கா பேசிய தமிழ் ஆதரவுப் பேச்சை சிலர் தலையில் வைத்துப் போற்றினர். ஆனால் அமெரிக்கா எந்தவொரு சூழ்நிலையிலும் அரசபடைகள் சாதாரண மக்களைக் கொன்றது பற்றியோ அரசாங்கத்தின் ஆதரவில் ராணுவத்தின் வழிகாட்டலில் இயங்குகிற ஆயுதக் குழுக்களின் செயல்கள் பற்றியோ என்றுமே அரசாங்கத்தை கண்டித்ததில்லை. கண்டிக்கப்போவதுமில்லை. ஏனெனில் அரச பயங்கரவாதம் என்பது அமெரிக்காவைப் பணிய மறுக்கிற அரசாங்கங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகிற ஒரு விடயம் அல்லவா.

இலங்கை அரசாங்கம் அமெரிக்க உலகமய்மாதல் திட்டத்திற்கு உடன்பாடாக மட்டுமில்லாமல் இங்கே அமெரிக்காவின் ஆதிக்கத் திற்கும் உடன்பாடாக நடக்கும் வித மாக இலங்கை அரசாங்கத்தின் மீது அமெரிக்க அழுத்தம் இருக்கும். அதற்குட்பட்டே, அமெரிக்கா இலங்கை அரசாங்கங்கத்தின் போர் முயற்சிகளையும் சமாதான முயற்சிகளையும் ஆதரிக்கும். இந்த ஆட்சியைக் கவிழ்து ஒரு யூ என். பி ஆட்சியை ஏற்படுத்தித் தனது நோக்கங்களை நிறைவேற்றும் வாய்ப்பு உடனடியாக இல்லை என்பதால் அமெரிக்கா இந்த அரசாங்கத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே போரும் இல்லாத அமைதியுமில்லாத இன்றைய சூழலும் அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாடும் அமெரிக்காவுக்கு வசதியாகவே உள்ளன. அமைதிப் பேச்சுவார்த்தைகளின் உண்மையான நோக்கங்கள் அன்று போல் இன்றும் நிலையான அமைதியையும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வையும் விடக் கூடுதலாக வேறு தேவைகளாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன. அரச தரப்பிலுஞ் சரி, விடுதலைப் புலிகளின் தரப்பிலுஞ் சரி, பேச்சுவார்த்தைகளில் தங்களுக்கு இடந்தேடுகிற முஸ்லீம் தலைமைகளின் தரப்பிலும் சரி, அவற்றையெல்லாம் விட முக்கியமாகப் பேச்சுவார்த்தைகளின் போக்கையும் விளைபயனையும் தீர்மானிக்கத் துடிக்கும் அமெரிக்காவினதும் இந்தியா வினதும் பிற முதலாளிய ஆதிக்கவா திகளதும் தரப்புகளிலுஞ் சரி பொதுவான ஒரு நோக்கமோ உடன்பாடோ இல்லை. அவ்வாறு நாம் எதிர்பார்க்க ஒரு நியாயமும் இல்லை.

போர் பற்றியும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வு பற்றியும் உடன்படக் கூடியவர்கள் இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் மட்டுமே. ஏனெனில் அவர்களே போரின் சுமையைத் தாங்கி வந்துள்ளனர். தேசிய இனப் பிரச்சனையின் நியாயமான தீர்வு அவர்களது பொருளாதார மேம்பாட்டுக்குத் தேவையானது. அவர்களது வாழ்வின் அமைதிக்குத் தேவையானது. எனவே தான் பேச்சுவார்த்தைகள் வேண்டுமென்றே குழப்பப்படவும் இழுத்தடிக்கப்படவும் தீர்வு முயற்சிகளுக்கு நாட்டின் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் குழிபறிக்கப்படவும் கூடிய நிலையில், போருக்கு எதிரான ஒரு வெகுசன இயக்கமும் நிலையான நீதியான தீர்வுக்கான பரந்துபட்ட போராட்டமுமே நம்பகமான பாதைகளாகும்.

அமெரிக்காவின் சர்வதேச நடத்தை பற்றி நாம் அறிவோம். இன்று தென் அமெரிக்காவிலும் இஸ்லாமிய உலகிலும் அமெரிக்காவுக்கு எதிரான வெகுசன உணர்வுகள் எழுச்சி பெற்றுள்ளன. அமெரிக்க மேலாதிக்கத்தை முறியடிக்காமல் தமக்கு உய்வில்லை என்று அந்த மக்கள் அறிந்து செயற்படத் தொடங்கிவிட்டனர். நாமும் அந்தப் பாடங்களை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அமெரிக்காவை எப்படி நமக்கு வசதியாக வளைத்தெடுப்பது என்கிற விதமான கணிப்புக்கள் 1960களில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் காலத்தில் தொடங்கி இருந்து வந்த தொடர் சிந்தனை. அதன் விளைவுகள் பற்றித் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் எதையுமே கற்றதாகத் தெரியவில்லை. அமெரிக்கா பற்றிய கனவுகளை அமெரிக்கத் தூதர் இன்னொருமுறை கலைத்துள்ளார். இந்தியா பற்றிய கனவுகள் ஏற்கனவே ஒரு இரத்தக் கடலில் கலைந்தன. அமெரிக்கா பற்றிய கனவுகள் அதைவிட மோசமான ஒரு இரத்தக் கடலில் கலைவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இலங்கையில் அமைதி பற்றிய அதன் நோக்கங்கட்கு எதிராகவும் சகல மக்களையும் எச்சரிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு முன்னுள்ளது. ஏனெனில் அமெரிக்கக் குறுக்கீட்டுக்கும் ஆதிக்கத்திற்கும் எதிரான போராட்டம் இல்லாமல் இந்த நாட்டின் எந்தத் தேசிய இனத்திற்கும் விடிவு இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பீகாரில் சிறையை உடைத்த மக்கள் படை!

பீகாரின் ஆதிக்க வர்க்கங்களை அதிரவைத்த நிகழ்வான ஜெகானாபாத் சிறை உடைப்பு நடந்து முடிந்து விட்டது.

இச்சிறை உடைப்பு நிகழ்ச்சிக்கு முன்னரே ஹஸாரி பாக், முஸா°பர்பூர், பகல்யூர் சிறைகளில் சிறை உடைப்புகளும், மோதல்களும் நடைபெற்றிருந்த போதிலும், தலைநகர் பாட்னாவிலிருந்து 65கி.மீ. தொலைவே உள்ள ஜெகானாபாத் சிறை உடைக்கப்பட்டதும், போராளிகள் சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்)-134, சி.பி. ஐ (லிபரேசன்)- 151 உட்பட 389 சிறையாளிகள் மீட்டுச் செல்லப்பட்டிருப்பதும், சிறையிலிருந்து 186 துப்பாக்கிகளையும், 2000 தோட்டாக்களையும் கைப்பற்றியிருப்பதும் அரசு எந்திரங்களை அதிரவைத்துள்ளன.

இது போன்ற நிகழ்வுகள் இந்தியப் புரட்சிகர இயக்கங்களின் வரலாற்றில் இதுவரை நடந்திராதவை.

இந்திய விடுதலைக்குப் பின்னரும் நிலச் சீர்திருத்தச் சட்டம் முறைப்படுத்தப்படாத, ஒரு சில மாநிலங்களில் சாதிய ஒடுக்குமுறை மிகுந்திருக்கும் பீகார் ஜார்க்கண்ட போன்ற மாநிலங்களும் அடங்கும்

இம் மாநிலங்களில் ஆதிக்கச் சாதியினரே பெரும் நிலவுடைமையாளர்களாகவும், பண்ணை முதலாளிகளாகவும் இருப்பதாலும், இவர்களின் ஆதரவுடனேயே அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதாலும், அரசியல் வாதிகளும் அரசு அதிகாரிகளும் நிலச் சீர்திருத்தம் பற்றிக் கண்டும் காணாமல் இருந்து வருகின்றனர். இதனால் நிலங்கள் குறிப்பிட்ட வர்க்கத்தினரிடமே குவிந்து காணப்படுகிறது.

அரசின் இந்தப் பாராமுகத்தால் நிலங்களிலும், பண்ணைகளிலும் கொத்தடிமைகளாகத் தங்கள் வாழ்நாள் முழுவதும் கழிக்க வேண்டிய நிலைக்கு ஏழை உழைக்கும் மக்கள் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் ஆந்திரத்தில் செயல்பட்டுவந்த மக்கள் யுத்தக்குழு (PWG), பீகாரில் இயங்கிவந்த மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் சென்டர் (MCC) ஒன்றிணைந்து சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) என்ற தற்போதைய அமைப்பு உருவானது.

இப்பொதுவுடைமையாளர்கள், பெரு நிலவுடைமையாளர்களால் சிறு விவசாயிகள் தாக்கப்படும்போதும், பண்ணைகளில் கொத்தடிமைகள் கொடுமைக்குள்ளாக்கப்படும்போதும், தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்தப்படும்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் நின்று நிலவுடைமையாளர்களுக்கும், அரசி யல்வாதிகளுக்கும், சாதி வெறியர்களுக்கும், மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் காவல்துறையினருக்கும் "மக்கள் நீதிமன்றங்" களில் விசாரணை நடத்தித் தண்டனை வழங்கத் தொடங்கினர்.

மேலும், மாவோவியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பள்ளிகள், மருத்துவமனைகள், குடிநீர் வழங்கல் எனப் பலவற்றையும் தாங்களே நிருவகித்து ஒரு மாற்று அரசையே நடத்தி வருகின்றனர்.

இப்படி ஒரு மாற்று அரசை நடத்துவதென்பது பரந்துபட்ட மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் நடைபெற முடியாது என்பதையும், பரந்துபட்ட மக்களால் நடத்தப்படுகிற சமூக மாற்றத்திற்கான போராட்டம் தங்களது சுகபோக சுரண்டல் வாழ்விற்கும், வர்க்க நலன்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் விளங்கிக் கொண்ட சாதிய நிலப்பிரபுக்கள், தங்கள் ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ள சாதிவாரியாகக் குண்டர்படைகளை அமைக்கத் தொடங்கினர்.

இராசபுத்திரர்கள் கியூர் சேனாவையும் (1969), பூமிகாரர்கள் பிரம்ம ரிஷி சேனாவையும் (1984), யாதவர்கள் லோரிச் சேனாவையும், பார்ப்பனர்கள் ஆசாத் சேனாவையும் (தாழ்த்தப்பட்டவர்களைக் குறிவைத்துத் தாக்குவதற்கென்றே தொடங்கப்பட்டது) தொடங்கினர்.

"தாழ்த்தப்பட்ட பெண்களை ஒட்டுமொத்தமாகக் கற்பழித்தல்" என்ற செயல் திட்டத்தை 1990 களில் மேற்கொண்டு, 6 வயதிலிருந்து 60 வயது வரையிலான சுமார் 200 தாழ்த்தப்பட்ட பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியது சவர்னா விடுதலைப் படை, இந்தச் சவர்னா விடுதலைப் படையும், பூமிசேனா, சன் லைட் சேனா மற்றும் சில சாதி இந்துக்களின் குண்டர் படைகளும் இணைந்து உருவானதுதான் ரண்வீர் சேனா எனப்படும் நிலவுடைமையாளர்களின் குண்டர்படை.

தாழ்த்தப்பட்ட மக்கள்மீதும், விவசாயக் கூலிகள் மற்றும் ஏழை விவசாயிகள் மீதும் ஆதிக்கச் சாதி நிலவுடைமயாளர்களின் குண்டர் படை வெறியாட்டம் போடுவதும், வெறியாட்டம் போடும் குண்டர்களுக்கு மாவோவியர்கள் "மக்கள் நீதி மன்றங்" களில்

## விடுதலை முழக்கம் தமிழ் மாத ஈரிதழில் (2005 டிசம்பர் 15-31) வெளியான கட்டுரை

### நன்றி : விடியல் பதிப்பகம் கோயம்புத்தூா

மரணதண்டணை வழங்குவதும், ஆத்திரமடைந்த குண்டர்கள் மீண்டும் ஏழை மக்கள் மீது தாக்குதல் நடத்துவதும் பீகாரில் தொடர் நிகழ்வாகின.

மறுபுறம், மாவோவியப் புரட்சியாளர்களை ஒடுக்கும் நோக்கில் ஆதிக்கச் சாதி நிலவுடைமையாளர்களின் கூலிப்படையினரை அரசியல்வாதிகளும், காவல்துறையும் கொம்பு சீவிவிட்டனர்.

ஜெகானாபாத் சிறை உடைப்பும், அச்சிறை வாசலிலேயே ரண்வீர் குண்டர் படைத் தலைவனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருப்பதும், கொலை வெறியாட்டம் போட்டு வந்த குண்டர் படைகளை நிலைகுலைய வைத்துள்ளன.

பீகாரில் உழைத்து ஓய்ந்து கிடக்கும் ஏழை விவசாயிகளின் குடிசைகளுக்குள் நள்ளிரவில் புகுந்து, நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது, "20 தலித்துகள் வெட்டிக் கொலை" எனப் பெட்டிச் செய்தி போட்ட ஏடுகள், ரண்வீர் குண்டர் படைத் தலைவனும் இன்னும் சில குண்டர்களும் இறந்த செய்தியைப் பதைபதைப்புடன் வெளியிட்டன.

"தாங்கள் நடத்துவது வர்க்க போராட்டம் என்றும், தங்களின் அமைப்பு எந்தச் சாதிக்கும் எதிரானது அல்ல" எனவும் மாவோவியர்கள் தெளிவுபடுத்திய பின்னரும் பொதுவுடமைக் கட்சியைச் சாதிமயப்படுத்தும் வேலையில் பார்ப்பன ஏடுகள் இறங்கியுள்ளன. மேலும் அவை நிலவுடைமையாளர்களின் குண்டர் படை தாழ்த்தப்பட்ட மக்களை தாக்கக் கூடும் என அச்சுறுத்துகின்றன.




ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிற மக்கள், ஒடுக்குமுறைகளிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதென்பது மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கையே.

சமூக மாற்றத்திற்காக நடைபெறும் பரந்துபட்ட மக்களின் போராட்டத்தில் உள்ள நியாயங்களைப் புரிந்துகொள்ளாமல், சமூக அமைப்பின் குறைகளைக் களைய முற்படாமல், பழைய சமூக அமைப்பைக் காப்பாற்ற நினைப்பதும், ஆயுதங்களைக் கொண்டும் படைகளைக் கொண்டும் மக்கள் போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதென்பதும் எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்பதை உலகின் பல வரலாறுகள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன.

* 1989- இல் பெல்ச் கிராமத்தில் 14 தாழ்த்தப்பட்டவர்களைப் படுகொலை செய்தது பிரம்ம ரிஷி சேனா.
* 1991- இல் பெப்ரவரி மாதம் பாட்னாவில் 12 தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள் சூரியஒளி சேனாவினால் படுகொலை செய்யப்பட்டனர்.
* 2000 ஜூன் 16 இல் மியிலூர் கிராமத்தில் புகுந்த 100 ரண்வீர் சேனா குண்டர்கள் 14 பெண்களையும், 6 குழந்தைகளையும், 34 கூலி விவசாயிகளையும் ஈவிரக்கமின்றிச் சுட்டுக்கொன்றனர்.
* 1994-99 வரை ரண்வீர் சேனா நடத்திய 35 தாக்குதல்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் 400 பேர் கொல்லப்பட்டனர்.
* கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 200 தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.



# நேபாளத்தின் புரட்சிகர மக்கள்யுத்தம் பழைய அதிகாரக் கட்டமைப்பைத் தகர்த்து மக்கள் அதிகாரத்தை நிறுவுகிறது!

**சமூக நலன் (கடந்த இதழ் தொடர்ச்சி)**

உயிர்த்தியாகிகள் குடும்பம், மக்கள்யுத்தத் தியாகக் குடும்பங்கள், மக்கள் ராணுவக் குடும்பம், ஊழியர் குடும்பம் என்பன போன்று இம் மக்களின் சிறப்புத்தேவைகட்குக் கவனஞ் செலுத்துவதற்கான பல புதிய ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன புதிய அரசில் செயலூக்கமுள்ள பங்களிப்போராகும் நோக்குடன் அவை அமைக்கப்பட்டுள்ளன. உயிர்தியாகிப் பெற்றோரினதும் முழுநேரத் தொழிலாளரதும் ஏழை வெகுசனங்களதும் குழந்தைகட்கான இல்லங்களாகக் குழந்தைப் பராமரிப்பு மையங்களும் விடுதிகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தளப்பிரதேசங்களில் மாதிரிக் கிராமங்கள் பல மக்கள் அதிகாரத்தைக் கெட்டிப்படுத்துமுகமாக அமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் சுரண்டப்படாத கிராமங்களில் பெற்றோரின் சொத்தில் பெண்கள் 50 சத வீதத்தைப் பெறுகின்றதுடன் அரசில் சம பிரதிநிதித்துவம் (50 சத வீதம்) பெறச் சிறப்பரிமை கொண்டுள்ளனர். தலித்துக்கு 20 சதவீதப் பிரதிநிதித்துவச் சிறப்புரிமை உண்டு.

மாதிரிக் கிராமங்களின் குடும்பங்களில் எல்லா உறுப்பினர்களும் ஏதாவது ஒரு வெகுசன முன்னணியில் ஸ்தாபனப்படுத்தப்பட்டு, மக்கள் யுத்தத்தின் இரும்புக் கோட்டையாக முன்நிற்கின்றனர். கட்சியால் நடத்தப்படும் நேபாள குடியரசுவாத எவ். எம். வானொலி செய்திக்கும் மேலாகப் புதிய பண்பாட்டு நடவடிக்கைகளையும் சமூக நலன் நடவடிக்கைகளையும் தெரிவிக்கவும் பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தங்கள் மகளிருக்குச் சமமான சொத்துரிமை வழங்குமாறு பெற்றோரையும், நீளமான ஏடா கூடமான ஆடைகளினிடத்தில் அணிய வசதியான ஆடைகளை அணியுமாறும் நீண்ட கூந்தலினிடத்தில் தலைமயிரைக் குட்டையாக வைத்திருக்குமாறு பெண்களையும் அறிவுறுத்தும் வழிகாட்டல்கள் தினமும் பிரசாரம் செய்யப்படுகின்றன. இவ்வாறே தலித்துக்கட்கெதிரான பாரபட்சத்துக்கு எதிரான எச்சரிக்கைகளும் எவ். எம். வானொலி மூலம் பரப்பப்படுகின்றன. நேபாளக்கிராம மக்களுக்கு எவ். எம். வானொலி கேட்பது வாழ்வின் பகுதியாகி விட்டது.

**சாதனைகளும் போதாமைகளும் சாத்தியப்பாடுகளும்**

அரசியல் உலகப்படத்தில் ஏறத்தாழ இல்லாததான, பிறவகைகளில் கண்ணுக்குப் புலனாகாத பத்தாம்பசலித்தனமான நேபாள முடியரசு, இன்று இப் பிரதேசத்தில்மட்டுமில்லாமல், பசுபிக் அத்திலாந்திக் மாகடல்கள் கடந்தும் கவனிப்பின் மையமாக உள்ளது எனப் பெருமையுடன் சொல்லலாம். இன்று ஐ.நா. அலுவலர்கள் நேபாளத்துக்கு வருகிறார்கள். கிளர்ச்சியின் வலுவால் மட்டுமேயல்லாமல் புதிய அரசுமுறை ஒன்றையும் மதத்தின் அடிப்படையிலன்றி விஞ்ஞான அடிப்படை மீதும் அடிமைத்தளையிலும் கடனிலுமன்றிப் பொறுப்புக்களின் மீதும் மங்கிப்போன கடந்த கால விழுமியங்களிலன்றி ஒரு உலகளாவிய புற நோக்கின் மீதும் பெண்களதும் தலித்துக்களதும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களதும் பிரதேசங்களதும் பலவீனங்களினதும் ஒடுக்குதலினதும் மீதன்றி அவர்களது விடுதலையின் மீதும் கட்டியெழுப்பட்ட வாழ்வின் புதிய பெறுமதியையும் அக்கிளர்ச்சி தோற்றுவித்திருப்பதாலுமே இவையாவும் இயலுமாகியுள்ளன. விருத்தி பெற்ற உலகமெனப்படுவது உட்பட உலகின் பிற பகுதிகளிலும் அல்லலுறும் உலகின் நலிந்தோராலேயே இவை யாவும் இயலுமாகியுள்ளன.

மக்கள் யுத்தம் அவர்களது படைப்பாற்லையும் சக்தியையும் கட்டவிழ்த்து, அவர்களை மேலும் அதிகப் பொறுப்புக்களுடன் புதிய ஆட்சியாளர்களாக்கியுள்ளது. ஏனெனில், அவர்கள் தனிமனிதச் சொத்துச் சேர்ப்புக்கன்றிப் பொதுவான நன்மைக்காகச் செல்வத்தை உண்டாக்குவதால் மனிதரைச் சமூகப்பிறவிகளாக்கும் மனித உற்பத்தி சக்தியின் பெரும்பான்மைக்குரியவர்கள். நேபாளத்தினுள் புதிதாக உருவாகிவரும் அரசு, காத்மண்டு- மையமான நிலையினின்று கிராம- மையமான நிலைக்கு அரசியலை மாற்றியுள்ளது.



இன்று பாராளுமன்றக் கட்சிகள் உட்படப் பழைய அரசின் அங்கங்களாயிருந்த மனிதரும் நலன்களும், நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட பிரச்சினைகட்குக் கவனஞ் செலுத்துமாறு கட்டாயப்பட்டுள்ளனர். மக்கள் யுத்தம் இன்னமும் சனநாயக நாடுகள் எனப்படுகிறவற்றில் இருக்கும் பழைய அரசின் நிலமானியத் தளத்தைப் பெயர்த்துள்ளது. எவ்வாறாயினும் இன்றைய சவால் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் சோஷலிஸ முனைப்புள்ள ஒரு தேசிய முதலாளிய பொருளாதாரத் தளத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

இறுதியாக, மக்கள் யுத்தம் இன்னொரு உலகம் இயலுமானது எனவும் மக்கள் போராடுகிற வரை ஆளும்வர்க்கப் பிரசாரங்கள் சிலரது ஆசைக்கனவின் படியான வரலாற்றில் முடிவு வரப்போவதில்லை எனவும் தொழி லாளி வர்க்கத்தினரிடையே நம்பிக் கையை விதைத்துள்ளது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# தமிழரின் உலகப் பார்வை புதிய திசையில் விரிவடைய வேண்டும்

**சமகால சர்வதேச அரசியல், கே.ரீ.கணேசலிங்கம், கல்வியியல் வெளியீட்டு நிலையம் , யாழ்ப்பாணம், 2005, ப. 211 விலை ரூ. 200.00**

நமது ஊடகங்களில் தமிழில் செய்திகளையும் ஆய்வுகளையும் கேட்கும் போதும் உலகம் பற்றிய தமிழரின் அறிவு எவ்வளவு சுருங்கிக் கிடக்கிறது என்ற உண்மை மனதில் உறைக்கத் தவறுவதில்லை. இன்றைய தகவல்யுகம் எவ்வளவு தூரத்திற்கு உலகம் பற்றிய மனித அறிவை விசாலமாக்கியுள்ளது என்று தெரியவில்லை. தமிழரின் உலகம் பயனற்ற முறையில் சுருங்கி வருகிறது. நமது இருப்பையும் வாழ்வையும் எதிர்காலத்தையும் உலக நிகழ்வுகள் முனெப்போதையும் விடக் கடுமையாகப் பாதிக்கிற ஒரு சூழலில் நாம் வாழுகிற போதும், நமது அரசியல் தலைமைகள் அது குறித்த அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பெருமளவுக்கும் இந்தியாவையும் அமெரிக்காவையும் பிரித்தானி யாவையும் அனுசரித்துப் போகிற ஒரு போக்கு இன்னமும் தொடர்கிறது.

இந்தப் பின்னணியில், கணேசலிங்கத்தின் நூல் மிகவும் வரவேற்கத்தக்க ஒரு முயற்சி என்பேன். அமெரிக்கா இன்றைய உலகின் மிகப்பெரிய வல்லரசாக, ஒரே அதி வல்லரசாக இருந்தாலும் அதன் பொருளாதாரம் பலவீனமானதும் வீழ்ச்சியடைந்து போவதுமாகும் என்பதையும் உலகின் மிகப்பெரிய வல்லரசாகியதன் மூலம் அமெரிக்கா புதிய நெருக்கடிகட்கு முகங்கொடுக்கிறது என்பதையும் நூலாசிரியர் தெளிவாக அடையாளங்காட்டிறார். சர்வதேச அரசியலில் அமெரிக்கா வகிக்கும் பங்கு பற்றிய அவருடைய அவதானங்களும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் மேலாதிக்க நலன்கள் ஏற்படுத்துகிற தடங்கல்களையும் அவர் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

முன்னாள் சோவியத் யூனியனுடைய அயல் உறவின் அரசியல் பற்றிய குறிப்புகள் போதாதிருப்பதும் சீனாவின் இன்றைய அயல் உறவுகள் பற்றிய குறிப்புக்களில் சீனா இந்து சமுத்திரத்தில் உள்ள துறைமுகங்களில் கப்பற்தள வசதிகளை விருத்தி செய்வதை 'விஸ்தரிப்பு' என்று அழைப்பதன் மூலம் அதை ஏகாதிபத்திய விஸ்தரிப்புடன் ஒப்பிட இயலுமாக்குவதும் முக்கியமான போதாமைகள். சீனா இது வரை எந்த அயல் மண்ணிலும் தனது ஆயுதப் படைகளை நிலை நிறுத்தவில்லை. இவ்விடயத்தில் முதலாளியப் பாதைக்கு மாறிய பின்னும் சீனா அதன் சோஷலிஸ ஆட்சிக்காலப் பாதையிலேயே இதுவரை தொடர்ந்து வந்துள்ளது. சீனாவின் முதலாளியத்தின் விஸ்தரிப்பின் தேவைகள் எதிர்காலத்தில் இதை மாற்றலாம். அதுவரை ,சீனாவை இந்திய, அமெரிக்க விஸ்தரிப்புவாதிகளுடன் ஒப்பிடுவது பொருத்தாது. ஐரோப்பிய ஒன்றியம்




பற்றிய மதிப்பீடுகளிலும் சில குறைபாடுகள் உள்ளன. ஐரோப்பாவின் பொருளாதார, அரசியல் வலிமை அமெரிக்காவை மறுத்து உறுதியாக நிற்குமளவுக்கு வளரவில்லை. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் என்பது ஐரோப்பாவின் பெருமுதலாளிய நலன் சார்ந்த அமைப்பு என்பதும் அதை ஒரு ஐரோப்பிய சமஷ்டி ஆக்குவதன் நோக்கங்களில் தொழிலாளர்களது உரிமைகளின் மறுப்பும் அரச இயந்திரத்தை வலுப்படுத்துவதும் முக்கியமான நோக்கங்களாகும்.

இவ்வாறான விடயங்களில் நூலின் அணு குமுறையிலுள்ள ஒரு குறைபாட்டுக்கு முக்கியமான பங்குண்டு. இன்றைய உலக அரசியலை ஏகாதிபத்தியம், நவகொலனியம் என்பவற்றின் மீது அழுத்தம் வைத்து ஆராயும் போது இலகுவாகவும் தெளிவாகவும் தெரிய வரக்கூடிய விடயங்கள் அவற்றைக் கணிப்பிலெடுக்காத போது முரண்பாடான சிக்கலான விளக்கங்களை வேண்டுகின்றன. நூலாசிரியருக்கு எட்டக்கூடிய சர்வதேச அரசியல் விமர்சன நூல்களின் வரையறுக்கப்பட்ட அளவும் இதற்குப் பங்களித்திருக்கலாம். எனினும் செய்திகளின் அடிப்படையிலும் குறைந்தளவான ஆய்வு நூல்களின் வழிகாட்டலுடனும் நூலாசிரியர் வந்தடைந்துள்ள பல முடிவுகள் அவரது ஆய்வுத்திறனின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன. நேர்மையான தெளிவான சிந்தனை மூலம் நூலாசிரியர் பெறுகிற உலகப் பார்வை நேர்மையான இடதுசாரிகளின் உலகப்பார்வைக்கு நெருக்கமாக வருகிறது என்பது முக்கியமானது.

எனவே தான், தமிழ் மக்கள் அவர்களைச் சூழவுள்ள உலகம் பற்றிய தகவல்களைத் தடையோ தணிக்கையோ இல்லாமற் பெற இயலுமானால் அமெரிக்கா பற்றியும் இந்தியா பற்றியும் மயக்கங்களை ஊட்டும் முயற்சிகள் நீண்டகாலத்துக்குத் தொடரா. நூலாசிரியரின் கவனம் உலகின் பிற பகுதிகள் நோக்கியும் திரும்ப வேண்டும் என்பது என் விருப்பம். அவரது தெளிவான எளிமையான எழுத்து நடை பரவலான வாசிப்பிற்குப் பொருத்தமானது என்பதால் நூலாசிரியர் தொடர்ந்தும் எழுதுவது இன்றைய தேவை.

நூலில் உள்ள அச்சுப்பிழைகள் சற்றே அதிகம். இது அயல் விவகாரங்களுடன் பயிற்சியற்ற வாசகர்கட்குச் சிரமங்களை ஏற்படுத்துகிறது. வாசகருக்குக் குழப்பத்தைத் தவிர்க்கும் நோக்கில் தகப்பன் ஜோஜ் புஷ்ஷையும் மகன் ஜோஜ் புஷ்ஷையும் வேறுபடுத்த மகனை அவரது இன்னொரு பேரான வில்லியம் என்பதால் குறிப்பிடுவது நல்ல யோசனையாகத் தெரியவில்லை. இவ்வாறான பிரச்சனைகட்குரிய தீர்வுகள் உலகவிவரங்கள் பற்றிய தகவல் வழங்கல் நடைமுறைக்கு முரண்பாடாக இல்லாதிருப்பின் சிறப்பாயிருக்கும். அண்மைக்காலங்களில் இலங்கையில் வெளியான அரசியல் ஆய்வுகளில் மிகவும் பயனுள்ள ஒரு பகுதி இந்த நூலில் அடங்கும் என்பதால் இது பரவலான வாசிப்புக்கு உட்படுவது மிகவும் தேவையானது.

-திருமுகன்-

## குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

### வீதி விபத்துக்களும் வி.ஐ.பீ~களும்

அண்மையில் வீதிப் போக்குவரத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. ஒப்பீட்டளவில் 2004 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2005 ல் வீதி விபத்துக்கள் வெகுவாகக் குறைந்திப்பதாகவும் இதனை தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளரும் தமது புள்ளி விபரங்களை ஆதாரம் காட்டி ஆமோதித்திருந்தார்.

இது சரியாக இருக்குமெனில் இலங்கையில் இரண்டு அதிசயங்கள் நடந்து இருக்க வேண்டும்.

1. வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்திருக்க வேண்டும்.
2. மக்கள் நல்லறிவு பெற்று விழிப்படைந்து இருக்க வேண்டும்.

இந்த இரண்டுமே கடந்த ஒரு வருடகாலத்தில் நடந்து விட்டதாக நம்பத் தோன்றவில்லை. காரணம் அன்றாடம் கடமைகளுக்காக வீதியால் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளும் விடயங்கள் தான் உண்மையானவை. அதாவது புற்றீசல் வேகத்தில் புதிய புதிய வாகனங்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

போட்டி போட்டு வாகனங்களை ஓட்டும் சாரதிகள், பொதுசனத்தை பலவந்தமாக இழுத்து ஏற்றி பின்பு பலம் கொண்டு தள்ளி இறக்கிவிடும் பஸ் நடத்துனர்கள், வீதிச் சட்ட ஒழுங்கை கண் மூடித்தனமாக மீறும் தனியார் வாகனங்களின் சாரதிகள், மிதி வண்டி போக முடியாத இடைவெளிக்குள் முச்சக்கர வண்டியை நுளைக்கும் வல்லுனர்கள் என்று அன்றாட அவலனமான தரிசனம் இருக்கையில் வீதி விபத்துகள் குறைந்து விட்டதாகக் கூறுவதை வியந்து கொள்ளத்தான் முடிகின்றது.

இன்னொன்றும் நடப்பதாக கூறிக் கொள்கிறார்கள். தனியார் பஸ்களில் சிவில் உடை தரித்த பொலிசார் பயணம் செய்கிறார்கள். இவர்கள் வீதி ஒழுங்கை மீறும் சாரதிகளை கையும் மெய்யுமாக பிடித்து அந்த இடத்திலேயே தண்டப்பணம் அறவீடு செய்கிறார்கள் அல்லது குற்றப்பத்திரம் வழங்குகிறார்களாம்.

அதே வேளை மறுபுறத்தில் இலஞ்ச ஊழல் அதிகாரிகள் கைதுசெய்த வீதிப்போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றிய செய்திகளும் வெளி வருகின்றன. அப்படியானால் இந்த மண்ணில் என்னதான் மாற்றம் நடந்து விட்டது?

முன்பும் இலங்கையில் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் இருந்தது. தனியார் காப்புறுதி நிறுவனங்கள் இருந்தன, விபத்துக்கள், அழிவுகள் இழப்புக்கள், சேதங்களும் நிகழ்ந்தன. அவற்றுக்கான இழப்பீடு பெறப்போகும் போதுதான் சில்லெடுப்பு விளங்கும்.

காப்புறுதி நிறுவனம் கடமை நேர்மையுள்ள அரச அலுவலகம் ஆகிவிடும். பிறப்புப்பதிவு, அடையாள அட்டை, பொலிஸ் அறிக்கை, நீதிமன்ற அறிக்கை என்று பலதை வினயமாகக் கேட்டும் கேட்டதைக் கொடுத்தால் அது பிழை, இதுபிழை பெயர் மாற்றம், முகவரி திருத்தம் என எல்லாம் இழுத்து திருமண அத்தாட்சி, சத்தியக் கடதாசி, மேலதிக சான்று என்று அலைக்கழித்து 'இழப்பீடு வேண்டாம்' என்று எண்ணும் அளவிற்கு உலைக்கும் (இது பலரது அனுபவம்). இதனால் காப்புறுதியில் நம்பிக்கை கொள்வர்களது எண்ணிக்கை குறையத்தொடங்கியது. காப்புறுதி தனியார் மயப்பட்டதன் மற்றொரு விளைவு என்பதையும் காணவேண்டும்.

மாறாக வியாபாரப் போட்டி வளரத் தொடங்கியது. எனவே ஒரு காப்புறுதி நிறுவனம் துணிந்து வி. ஐ. பியை அறிமுகம் செய்தது. அதாவது விபத்து நடந்த இடத்தில் இழப்பீட்டிற்கான அனுமதி கொடுக்கப்படும்.

இதற்கு பொலிஸ் அறிக்கை, வைத்திய அறிக்கை ஏதும் தேவையில்லை. விபத்து நடந்த இடத்துக்கு ஓடி வரும் அதிகாரி அந்த இடத்திலேயே செலவை மதிப்பீட்டு இழப்பீடு செலவுக்கான அனுமதியை வழங்கிச் செல்வார்.இதனைப் பார்த்து ஏனைய காப்புறுதி நிறுவனங்களும் “ஒப்சன்”-பிளஸ் என்று அந்த அதிரடி நடவடிக்கை வகைகளில் இறங்கின. இவையாவும் காப்புறுதியின் பக்கம் வாடிக்கையாளர்களை இழுத்து பணம் பண்ணிக் கொள்வதற்கேயாகும்.

முன்பு விபத்து நடந்தால் பொலிஸ் நிலையம் சென்று, நீதிமன்றம் சென்று வாகனமும், மனிதரும் பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டும். கால விரயமும் ஏற்படும்.

ஒப்பீட்டளவில் புள்ளி விபரங்கள் சரியானவற்றையே சொல்லியுள்ளன. அவற்றுடன் காப்புறுதி நிறுவனங்களின் கணக்கைக் கூட்டிப் பார்த்தால் தலை சுற்றவே செய்யும். இதனை உலகமயத்தின் கீழான தாராளமயம் தனியார்மயத்துடன் இணைத்துப் பார்த்தால்தான் காப்புறுதியின் உள்ளார்ந்த பணப்பறிப்பின் மூலங்கள் நமக்குப் புலப்படும். இதில் வியாபாரப் போட்டி மட்டுமன்றி மக்களின் பணத்தை இழுத்துப்பறிக்கும் செயலையும் காண்கின்றோம். அதனாலேயே பணப்புளக்கமும் அதிக லாபமும் ஈட்டக் கூடிய காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் மீது உலக வங்கி சீர்திருத்த மறுசீரமைப்பு, முகாமைத்துவம் என்ற முகமூடிகளின் கீழ் தனியார்மயப்படுத்த வற்புறுத்திய கபடத்தைக் கண்டுகொள்ளலாம்.

# வறுமைக்கு அதிகம் முகம் கொடுப்போர் பெண்களே!

உலக உணவு உற்பத்தித்துறையில் 75லிருந்து 90 வீதம் வரை உற்பத்தி செய்பவர்கள் பெண்களேயாவர். வீட்டு வேலைகளில் பெண்கள் செலவிடும் நேரத்திற்கு ஈடாக ஆண்கள் வீட்டுவேலைகளில் செலவிடுவது எந்த ஒரு நாட்டிலும் இல்லை என ஐ.நா. தகவல் தெரிவிக்கிறது.

பெண்ணிய இயக்கத்தினர் வேறு விடயங்கள் பற்றி வாய் கிழியக் கத்தினாலும் செல்வந்த மேற்கு நாடுகளில் பெண்களே வறுமையின் தாக்கத்தை அனுபவிக்கின்றனர். வறியவர்கள் மூன்று பேரில் இருவர் பெண்களாகவே இருக்கின்றனர்.

உலகின் வேலைகளில் மூன்றில் இரண்டை பெண்களே செய்கின்றனர். ஆனால் உலக வருமானத்தில் பத்து (10) வீதத்தை மட்டுமே பெறுகின்ற தோடு உற்பத்தி சாதனங்களில் ஒரு (1%) வீதத்தையே கொண்டிருக்கின்றனர். இலங்கையில் கல்வியறிவுடையோர் அதிகமாயுள்ளனர் எனவும் சிசு மரணம் குறைவு எனவும் வாழ்க்கையின் வாழ்வுக் காலம் குறிப்பிடத்தக்கதாயுள்ளதெனவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்ற போதும் அடிப்படை உண்மைகள் வேறு வகையில் உள்ளன.

**UNDP** அதன் 1998ம் ஆண்டிற்கான தேசிய மனிதவள முன்னேற்ற அறிக்கையில் பெண்களின் வளர்ச்சியானது வேறு ஆசிய நாடுகளையும் விட இலங்கையில் உயர்ந்த நிலையில் உள்ளதாக- அதாவது 69வீதம் எனக் கூறுகிறபோதும் பெண்களின் அதிகாரம் என்பது இருபது (20%) வீதத்திலேயேயுள்ளது எனக்குறிப்பிடுகிறது.

தேசிய புள்ளி விபரங்களில் பெண்களின் எழுத்தறிவு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டிருப்பதை காண முடியாது. நகர்ப்புறங்களில் பெண்களின் எழுத்தறிவு 91 விதமாகவும் கிராமப்புறத்தில் 78 வீதமாகமுள்ளது. பெண்களில் 65 வீதமானோர் சோகை நோய் (இரத்தக்குறைவு) உடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது உத்தியோக புள்ளிவிபரங்களில் காண முடியாது. இதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களான பெண்கள் இரத்தச்சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பான விடயமாகும். மத்திய வங்கியின் புள்ளி விபரத்தின் படி வேலையின்மை என்பது ஆண்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்கு எண்ணிக்கையில் பெண்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பனவற்றின் கடன் வழங்கும் முறையானது வளர்ச்சியடையும் நாடுகளில் பெண்களையே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சமூக நலத்திட்டக்களை சர்வதேச நாணய நிறுவனம் வெட்டிக்குறைக்க கட்டளையிட்டுள்ளமையால் பெண்களே அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்- முன்பு பெண்களே கல்வி சுகாதார சேவைத் திட்டங்களால் நன்மை பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இல்லங்களில் 22 வீதமானவற்றில் பெண்களே தலைமை தாங்குகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் ஏராளமானோர் இல்லங்களில் உணவுத் தேவையை கவனிக்க வேண்டிய பொறுப்புடைய வர்களாகவே உள்ளனர்.

ஆண்கள் வேலை தேடி வெளிநாடு செல்வதால் வீட்டின் நிர்வாகம் பெண்களின் தலையில் வருகிறது. இத்துடன் இலங்கையில் பெண்களின் வாழ்க்கையின் எதிர்பார்ப்புக் காலம் 74 வருடங்களாகவும் ஆண்களின் எதிர்பார்ப்புக்காலம் 70 வருடங்களாகவுமுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையான விதவைகளும், வயது முதிர்ந்த ஏழைப்பெண்களும் நிர்க்கதிக்குள்ளாகின்றனர். முதியோர் இல்லங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பெண்களாகவும் அவர்களிற் பெரும்பாலானோர் கவனிப்பதற்கு வீடுகளில் ஒருவருமில்லாத நிலை காணப்படுகின்றது.

தொடர்ச்சி 11ம் பக்கம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உலகப் பார்வை

# ஹமாஸின் வெற்றியால் அமெரிக்க சனநாயக முகமூடி கிழிகிறது!

ஹமாஸ் எனும் பலஸ்தீனப் போராளி அமைப்பு உருவாவதற்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற பலஸ்தீன விடுதலைக் கூட்டமைப்பு இஸ்ரேலால் திட்டமிட்டுப் பலவீனப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய காரணமாகும். அதேவேளை, 1970களில் ஐ.நா பொதுச் சபையில் அமெரிக்க மேலாதிக்கம் ஓரளவு பலவீனமாக இருந்த போது பலஸ்தீன விடுதலை இயக்கம் மிகப் பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் அங்கீகாரம் பெற்றது. அதன் பின்னர் அதன் நம்பகத்தன்மையைக் குலைக்கிற நட வடிக்கைகளில் இஸ்ரேலும் அமெரிக்காவும் மும்முரமாகின. இவற்றில் ஒரு பகுதியாக இஸ்ரேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீது மூர்க் கத்தனமான தாக்குதல்களைத் தொடுத்தது. 1982ம் ஆண்டு லெப னானில் இருந்த பலஸ்தீன விடு தலை இயக்க முகாம்கள் இஸ்ரே லால் தாக்கப்பட்டமை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் லெபனானின் ஆட்சியாளர்களது கட்டாயத்தின் விளைவாக றுனீ ஸியாவுக்கு இடம் பெயர்ந்தது. இதன் பின்னர் லெபனானில் ஸப்ரா, ஷட்டிலா எனும் இடங்களில் இருந்த பலஸ்தீன அகதி முகாம்களில் நூற் றுக்கணக் கானஅகதிகள் கொன்று குவிக்கப் பட்டனர்.

பலஸ்தீன மண்ணில் இஸ்ரேலின் ஆக்குமுறையும் கொடுமைகளும்



திட்டமிட்ட யூதக் குடியேற்றங்களும் வலுப்பெற்றன. இப் பின்னணியிலேயே 1988ல் இன்ற்றிஃபாடா எனப்படும் வெகுசன எதிர்ப்பியக்கம் உருவானது. பெண்களும் சிறுவரும் முதியோரும் பங்குபற்றி இந்தப் போராட்டத்தை இஸ்ரேலிய ராணுவ வன்முறையால் எதிர்த்து முறியடிக்க இயலவில்லை. உலக அபிப்பிராயம் இஸ்ரேலுக்கு எதிராகத் திரும்பிய பின்பே இஸ்ரேல் "சமாதானத்துக்காக நிலம் என்ற பேரில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கியது.

அதே வேளை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமைக்குள் இருந்த ஊழலும் அதிகாரத்துவமும் பற்றி மக்களிடையே அதிருப்தி தோன்றியிருந்தது. 1970 களின் பின்பு இஸ்ரேலிய ஆதிக்கத்திற்கு எதிராக எதையும் வெல்ல இயலவில்லை என்பது போக இஸ்ரேலிய நிலப்பறிப்பு மும்முரமாகத் தொடர்ந்தது. இந்த அதிருப்தியின் பின்னனியிலேயே ஹமாஸ் உருவானது. எனினும் ஹமாஸின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் இஸ்ரேலிய ஆதரவு இருந்தது. இஸ்ரேலின் நோக்கம் மதச்சார்பற்ற, உலக மக்களின் அங்கீகாரம் பெற்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இடத்தில் இஸ்லாமிய வாத அடையாளம் கொண்ட ஒரு "பயங்கரவாத" அமைப்பு மூலம் பலஸ்தீன மக்களை அடையாளப் படுத்துவது இஸ்ரேலுக்கு வசதியாக இருந்தது. ஈராக்- ஈரான் போர்ச் சூழலில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் சில தந்திரோபாயமான இணக்கப்பாடுகளும் ஏற்பட்டிருந்த அக்காலத்தில், முற்றிலும் வேறுபட்ட நோக்கங்கட்காக, பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு மாறாக மதவாத அமைப்பான ஹமாஸை ஆதரிக்கும் தேவை ஈரானின் மதவாத ஆட்சியினருக்கு ஏற்பட்டிருந்தது. 1990களின் நடுப்பகுதியிலிருந்து ஹமாஸ் இஸ்ரேலுக்கு ஒரு சவாலாக மாறியது.

அமெரிக்க வழிகாட்டலில் நடந்த ஒஸ்லோ உடன்பாட்டை அடுத்து, இஸ்ரேல் மிகவும் வஞ்சகமான முறையில் பலஸ்தீனத்தின் வளமான நிலப்பரப்பைத் தனதாக்கி நிரந்தரமாகத் தனது அதிகாரத்திற்குட்படுத்துகிறதோடு எஞ்சியுள்ள பலஸ்தீனத்தின் நிலப்பரப்பு துண்டாடப்பட்டு இஸ்ரேலிய பாதுகாப்புப்படையினரின் அனுமதியின்றி ஒரு பகுதியினின்று இன்னொரு பகுதிக்குப் போக இயலாத நிலை உருவாக்கப்பட்டிருந்தது. இஸ்ரேலின் நோக்கம் பலஸ்தீனத்தைத் தனது நிரந்தர கொலனியாக தனது ராணுவ பொருளாதார ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசமாக வைத்திருப்பதே. எனவே 'சுதந்திர பலஸ்தீன அரசு' ஒன்றை உருவாக்குவதற்கான முதற்படியாக பலஸ்தீன அதிகாரசபை நிறுவப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் இஸ்ரேலைப் பொறுத்தவரை அதன் நோக்கம் 'பயங்கரவாதத்தைக்' கட்டுப்படுத்தி இல்லாதொழிப்பது மட்டுமே.

இஸ்ரேலிய அடக்குமுறையும் தனது அரசியல் எதிரிகள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்களும் பலஸ்தீன மக்களின் அதிருப்தியை மேலும் வளர்த்தன. பலஸ்தீன அதிகாரசபையின் பொலிஸும் பாதுகாப்புப் பிரிவும் பலஸ்தீன ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்க இயலாது திணறின. இஸ்ரேல் அதையே காரணமாக்கி பலஸ்தீன அதிகாரசபையைச் செயலற்றதாக்கியது. அதே வேளை தனது பலஸ்தீன உளவாளிகளின் உதவியுடன் ஹமாஸ் தலைவர்களைக் கொன்றழித்து வந்துள்ளது. ஒரு ஆண்டுக்கு முன்பு யசீர் அரஃபாத்தின் சாவும் அவரின் இடத்தில் பலஸ்தீன அதிகார சபையின் தலைவராக அபுயாஸின் என அறியப்பட்ட மஹ்முட் அபாஸ் தெரிவானது இஸ்ரேலிய எதிர்பார்ப்புக்களை அதிகப்படுத்தின. அமெரிக்கவுக்கு ஏற்புடைய

—நரசிம்மா—

அபாஸ், மிதவாதி என்றும் இஸ்ரேலிடமும் இஸ்ரேலுக்கு இணக்கமான எகிப்திய, ஜோர்டானிய ஆட்சியாளர்களிடமும் பணிந்து போகக் கூடியவர் என்றும் சொல்லப்படுவர். அவராலும் இஸ்ரேலிய ஆதிக்கத்திற்கு எதிரான பலஸ்தீன மக்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

அரபாத் மீதான தனிப்பட்ட மதிப்பின் காரணமாகப் பலஸ்தீன அதிகார சபையினதும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையினதும் அதிகாரத் துஷ்பிரயோகத்தையும் ஊழலையும் கூடச் சகித்துக் கொண்ட பலஸ்தீன மக்கள் இம்முறை பலஸ்தீன அதிகாரசபையின் இரண்டாவது தேர்தலில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை நிராகரித்து ஹமாஸிக்குப் பெரும் ஆதரவு வழங்கியுள்ளனர். இவ்விடயம் பற்றிய தெளிவான ஒரு பார்வை நமக்குத் தேவை.


ஹமாஸின் உலக நோக்கு பல வழிகளிற் பிற்போக்கானது. ஹமாஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தும் சூழ்நிலையில் அதன் மத அடிப்படையிலான பழமைவாதக் கண்ணோட்டம் சமூக யதார்த்தங்கட்கு முகங் கொடுக்க வேண்டிவரும். இது வரை எந்த மதவாதத் தலைமையாலும் வரலாற்றைப் பின்னோக்கித் தள்ள முடிந்ததில்லை. எனினும் மதத்தின் பேரில் சமூக நீதியை மறுக்கவும் பால், வர்க்கம், தேசிய இனம், மதப் பிரிவு போன்ற அடிப்படைகளில் ஒடுக்குமுறையை நியாயப்படுத்தவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஹமாஸின் எழுச்சி இஸ்ரேலிய- அமரிக்க கூட்டு ஒடுக்குமுறையின் விளைவானது என்பதை நாம் கருத்திற் கொண்டால், பலவேறு தேசிய இனங்களின் விடுதலை இயக்கங்களிலும் இவ்வாறான பிரச்சனைகள் இருந்துள்ளதைக் காணலாம்.

எவ்வாறாயினும் உடனடியான பிரச்சனை பலஸ்தீன மக்களின் சுயாதீனமான சனநாயக முறையிலான ஒரு தெரிவை இஸ்ரேலும் அமெரிக்காவும் பிற உலக நாடுகளும் மதிக்க வேண்டிய தேவை பற்றியது. ஹமாஸ் வன்முறைப் போராட்டத்தைக் கைவிட வேண்டும், ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்பது பலஸ்தீனத்தில் யாருடைய வன்முறை ஆதிக்கம் செலுத்துகிறது என்ற கேள்வியைக் கணிப்பில் எடுக்காத ஒரு கருத்து. இஸ்ரேலிய வன்முறையும் ஒடுக்குமுறையும் முடிவுக்கு வரும் வரை எந்தப் பலஸ்தீனப் போராளியோ போராட்ட அமைப்போ ஆயுதங்களைக் கீழே வைக்க நியாயமில்லை.

ஹமாஸ் இஸ்ரேலை அங்கீகரிப்பது பற்றி வற்புறுத்துகிறவர்கள் முதலில் இஸ்ரேலிய ஆட்சியாளர்களாலும் 1948ல் இஸ்ரேலின் தோற்றத்திற்கு முன்பிருந்தே பலஸ்தீனத்திலிருந்து விரட்டப்பட்ட மக்கள் தமது மண்ணுக்குத் திரும்பிவந்து குடியேறும் உரிமையைக் கவனிக்க வேண்டும். இஸ்ரேலிய அரசு இன்னமும் பலஸ்தீன அரபு மக்களின் அடிப்படை உரிமைகளை அன்றாடம் மறுத்து வருகிறது. அராபியர்கள் தங்கள் வீடுகளிலிருந்து விரட்டப்படுகிறார்கள். எனவே பலஸ்தீன மக்களின் தேசிய உரிமை உட்பட்ட சகல அடிப்படை உரிமைகளையும் ஏற்க மறுக்கும் ஒரு மதவாத அரசை ஏன் தமது உரிமைக்காகப் போராடுகிற போராளிகளின் இயக்கம் ஏற்க வேண்டும்?

இஸ்ரேலுடன் பலஸ்தீன விடுதலை இயக்கம் செய்து கொண்ட உடன்பாடு இஸ்ரேலுக்குச் சாதகமானதும் பலஸ்தீன மக்களுக்குப் பாதகமானதுமாகும். அப்படியிருந்தும் இஸ்ரேல் தான் ஏற்றுக் கொண்ட விடயங்களைக் கூட நேர்மையாக நடைமுறைப்படுத்தவில்லை. பலஸ்தீன அதிகார சபையைக் கூடச் சுயாதீனமாக இயங்கவிடாமல் இஸ்ரேல் தடுத்து வந்துள்ளது.

இஸ்ரேலுடனான பலஸ்தீன விடு



தலை இயக்க உடன்படிக்கையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஆயுதப் போராட்டத்திற்கு முடிவுகட்டுவதை விட, பலஸ்தீன மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தரமாகவே இஸ்ரேலின் பொருளாதார ராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை விட, வேறெதையும் எதிர்பார்க்கவில்லை. எனவே ஹமாஸ் அரசாங்கம் ஏற்படுவதை அமெரிக்கா பல வழிகளில் தடுக்க முயலும். அதில் குறுகிய காலத்தில் வெற்றி பெறும் வாய்ப்பும் உண்டு. எனினும் பலஸ்தீன மக்கள் போராட்டத்தில் உறுதியாக உள்ள வரை, ஹமாஸ் பலஸ்தீன மக்கள் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் பாதையில் தனது போராட்டத்தை முன்னெடுக்குமாயின் ஹமாஸின் இந்தத் தேர்தல் வெற்றி பலஸ்தீன விடுதலைப் போரின் ஆக்கமான ஒரு திருப்புமுனையாக அமைவதை அமெரிக்காவோ இஸ்ரேலோ தடுக்க இயலாது.

# உலகில் வேலையின்மை உச்ச நிலையில்

உலகப பொருளாதார மன்றத்தின் வருடாந்த மகாநாட்டிற்கு அனுப்பி வைத்த செய்தியில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் (ILO) இயக்குனர் நாயகம் யுவான் சோமாவியா "உலகம் என்றுமில்லாதவாறு வேலையில்லாத் திண்டாட்டத்தை" எதிர் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். உலகப் பொருளாதார மன்றத்திற் கூடிய உலகின் முன்னணி தொழில் அதிபர்கள், அரச தலைவர்களும் 2006ம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரலில் எதிர் காலத்தில் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டிருப்பதை சர்வதேச தொழில் ஸ்தாபனத் தலைவர் வரவேற்றிருந்தார். ஆனால் திரு. சோமாவியா உலகம் பூராவும் வேலையின்மையின் நெருக்கடி நிலையானது சந்ததைகளிலும் வருமானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு "ஜனநாயகத்தின்" மீதான நம்பகத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் எச்சரித்துள்ளார்.

"இந்த நெருக்கடியானது செல்வந்த நாடுகளின் வீதிகளிலும் வறிய நாடுகளினது தெருக்களிலும் கவனிப்பற்றுவிடப் போவதில்லை. தொழில் கோரும் மக்களின் குரல்கள் அரசாங்கத் தலைவர்களுக்குப் பெருந் தலையிடியாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்."

உலகில் 140 கோடி தொழிலாளர்கள் தினமொன்றிற்கு இரண்டு டொலர்களுக்கும் குறைவான வருமானத்துடனேயே சீவியம் நடாத்துகின்றனர். அவர்கள் பண்ணைகளிலும், மீன்பிடித்தொழில் விவசாயம் போன்ற துறைகளில் சமூகப்பாதுகாப்பு சுகாதார வசதிகள் என்பன இல்லாமலேயே அல்லற்படுகின்றனர் எனவும் ஐ.எல்.ஓ. அறிக்கை கூறுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் வேலையின்மை பற்றிய உத்தியோகப் புள்ளிவிபரத்தின்படி 19 கோடி 20 இலட்சம் பேர் உலகில் வேலையற்றிருக்கின்றனர். இந்த தொகையில் 8கோடி 60இலட்சம் பேர் 15க்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என சர்வதேசதொழில் ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

மக்கள் உள்நாட்டில் வேலை கிடைக்காத பட்சத்தில் நாட்டிற்கு வெளியே வேலை தேடிச் செல்கின்றனர். இவ்வாறு மக்களின் வெளியேற்றம் நாடுகளில் பதற்றத்தையும், மனிதக் கடத்தல்களையும் ஏற்படுத்துகிறது. 2005ம் ஆண்டில் 4.3 வீத பொருளாதார வளர்ச்சியானது வருடந்தோறும் தொழில் தேடும் மக்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் உலகம் உள்ளது. அடுத்த பத்துவருடங்களுக்கு வருடந்தோறும் நான்கு கோடி தொழில்வாய்ப்புக்கள் ஏற்படுத்தினால் மட்டுமே வருடந்தோறும் அதிகரிக்கும் வேலை தேடும் மக்களுக்கு வேலை வழங்க முடியும். ஆனால் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலான உலகமயமாதலால் வளர்ந்து செல்லும்



வேலை இன்மையைப் போக்க முடியாது என்பதே உண்மையானதாகும்.

முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகமயமாதல் என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக் கூடியவாறான உற்பத்தியையும் அபிவிருத்தி நோக்காகக் கொண்டதல்ல. ஒரு குறிப்பிட்ட தனி நபர்களின் லாபத்தையும் சொத்து சுகங்களையும் பாதுகாத்து நிலை நிறுத்தும் நோக்கம் கொண்டதேயாகும். அதனையே அமெரிக்க மேற் குலக சக்திகள் தனிநபர் சுதந்திரம் ஜனநாயகம் மனித உரிமை எனச் செப்புகின்றனர்.

இதனால் வேலை இன்மை பெருகும். வறுமை வளரும் மக்களது வாழ்க்கை நிலை பழாக்கப்படும். அதனையே உலகத் தொழில் ஸ்தாபனத்தின் புள்ளி விபரங்கள் நமக்கு காட்டுகின்றன

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சுந்தர ராமசாமியை அம்பலப்படுத்தும் தமிழக நூல்

**நினைவுக்குட்டை, கனவு நதி. புதிய கலாச்சாரம் வெளியீடு, சென்னை 600083, ஜனவரி 2005, ப. 136, இந்திய ரூ.60/=**

**அண்மையிற்** காலஞ்சென்ற மாக்ஸிய விரோத எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் சாவையொட்டி அவர்பற்றி வெளியான சில மதிப்பீடுகளை முன்வைத்து எழுதப்பட்ட நீண்ட விமர்சனக் கட்டுரையொன்றும் கம்யூனிஸ எதிர்ப்பு இலக்கியவாதிகள் தொடர்பாகவும் ஸ்தாலின் மீதான திட்டமிட்ட எதிர்ப் பிரசாரம் தொடர்பாகவும் இலக்கியம் பற்றிய அணுகுமுறை தொடர்பாகவும் புதிய கலாச்சாரம் சஞ்சிகையில் வெளிவந்த எட்டுக்கட்டுரைகளும் சீனாவிற்கு 1960களிற் சென்ற முக்கிய இத்தாலிய எழுத்தாளரான அல்பேர்ட்டோ மொறாவியாவின் நேர்காணலின் தமிழாக்கமும் இந்த நூலில் உள்ளன.

சுந்தர ராமசாமி ஏன் எப்படி இலக்கிய விக்கிரகமாக்கப்பட்டார் என்பதும் இலக்கியம் பற்றிய அவரது பார்வை எவ்வாறு அவரது வர்க்கநிலைப்பாட்டிலிருந்தும் வாழ்க்கை முறையினிலிருந்தும் விருத்தி பெறுகிறது என்பதும் விவரமாக ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையிலும் பிற கட்டுரைகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்கள் அளவு மீறிய கடுமையானவை. அதனால் நூலிலுள்ள கட்டுரைகளில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகளை யாரும் தட்டிக் கழிக்க நியாயமில்லை. இந்த நூலின் மொழியின் மிகையான கடுமையை விமர்சிப்போர் முற்போக்குச் சிந்தனையுடனும் புரட்சிகர விடுதலைப் போராட்ட நோக்குச் சார்ந்தும் படைக்கப்படும் இலக்கியங்களையும் படைக்கிற இலக்கியவாதிகளையும் பற்றி சுந்தர ராமசாமி முதலாக ஜெயமோகன் வரையிலான கம்யூனிஸ விரோதிகள் எவ்வளவு அவதூறாகவும் சீண்டிவிடும் முறையிலும் எழுதி வந்துள்ளனர் என்பதையும் தவறாது விமர்சிக்க வேண்டும்.

பொதுவாகவே தமிழகத்திலும் கணிசமான அளவில் இங்கும் இலக்கியம் என்பது மனித இருப்பிற்கு அப்பாற்பட்ட உன்னதமான ஒரு விடயமாகவே காட்டப்பட்டு வந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து வந்த படைப்பாளிகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து வந்த படைப்பாளிகளும் தமது படைப்புகளில் வர்க்கம், சுரண்டல், ஒடுக்குமுறை, போராட்டம் போன்ற கருத்துக்களையே தவிர்க்கும்படி இலக்கியம் பற்றிய மேற்கூறிய அணுகுமுறை கட்டாயப்படுத்துகிறது. இடதுசாரி அரசியலை இலக்கியத்திற்குக் கேடானதாகக் காட்டுகிற அதே கூட்டம் வலதுசாரி அரசியலை மெச்சுகிறது. தமிழகத்தின் இலக்கிய மேட்டிமைத்தனத்தினுள் பதுங்கிக் கிடக்கிற கீழ்மைகளைப் பற்றி இந்த நூலில் உள்ள விமர்சனங்களை ஈழத்துப் படைப்பாளிகளும் வாசகர்களும் வாசிப்பது பயனுள்ளது.

ஸ்தாலின் பற்றிய கட்டுரைகள், ஸ்தாலின் பற்றி இரண்டாங்கை மூன்றாங்கையாக வெளிவருகிற அவதூறான குற்றச் சாட்டுக்கட்கு நல்ல விடைகளாகவும் ஸ்தாலின் எதிர்ப்புப் பிரசாரங்களது நோக்கங்கள் பற்றிய விளக்கங்களாகவும் உள்ளன.

மாஓவின் தலைமையின் கீழான சீனாவில் மனித வாழ்க்கை பற்றிய மேலை நாட்டுச் செய்தித் திணிப்புக்களின் காலத்தில் அங்கு சென்ற கம்யூனிஸ்ற் அல்லாத இலக்கியவாதியான அல்பேட்டோ மொறாவியாவின் பதிவுகள், நேர்மையுள்ள ஒரு மனிதரின் கருத்துக்களாகவும் சோஷலிஸ சீனா பற்றிய மேலை நாட்டு ஊடகங்களின் பகைமையான பிராசாரத்திற்கு ஒரு நல்ல பதிலாகவும் அமைந்துள்ளன. சிறப்பான முறையில் தமிழாக்கப்பட்டுள்ள இந்நேர்காணலில் நுகர்வுக் கலாச்சாரத்தின் சீரழிவுடன் சோஷலிஸ சமுதாய பொருளியல் விழுமியங்கள் நன்கு ஒப்பிடப்பட்டுள்ளன. இது போன்ற விடயங்கள் பரவலான வாசிப்புக்குட்படுவது நமக்கு இன்று மிகவும் தேவையானது. இந்த நேர்காணலின் மொழிநடை வாசகர்களைப் பரவலாக எட்டும் தன்மையுடையது என்பதை ஏனைய கட்டுரையாளர்கள் கருத்திற் கொள்வது பயனுள்ளது.

-சி.சி-




# நினைவுக் குட்டை கனவு நதி நூலின் முன்னுரை

சந்தை இலக்கியம், சினிமா ஆகியவற்றுக்கு மாற்றான உன்னதமான இலக்கிய சொர்க்கம் ஒன்று நிலவுவதாகவும், அந்த சொர்க்கத்தின் திறவுகோலைக் கையில் வைத்திருக்கும் தேவர்கள் தாங்கள் தான் என்றும் ஒரு கூட்டம் பீற்றித் திரிகிறது. இலக்கிய தரிசனத்தின் ஞானக்கண் தங்கள் முன் மண்டையிலிருந்து பின் மண்டை வரை பரவியிருப்பதாகவும், அதன் மூலம் 360 டிகிரியிலும் ஒரே சமயத்தில் தங்களால் வாழ்க்கையைப் பார்க்க முடியுமென்றும் சாதாரண வாசகர்களை இவர்கள் அச்சுறுத்துகிறார்கள். எவ்வித சித்தாந்தக் கறையும் படியாத காலி மூளைதான் இந்த அழகியல் ஞானக்கண்ணைப் பெறுவதற்கும் அவர்களுடைய இலக்கியத்தை ரசிப்பதற்கும் முன் நிபந்தனை என்றும் கூறுகிறார்கள். ஒரு மனிதனின் அழகியல் பார்வையையும் இலக்கிய ரசனையையும் அவனுடைய வாழ்க்கைச் சூழலும் மூகப் பின்புலமும் கல்வியும் அனைத்துக்கும் மேலாக அவனுடைய கருத்துச் சார்புகளும்தான் உருவாக்குகின்றன. அரசியல், இலக்கிய, பண்பாட்டு விசயங்களில் தான் கொண்டிருக்கும் பார்வையின் வர்க்கத் தன்மையை அறியாத மனிதர்கள் உண்டு பிறரது பார்வையின் வர்க்கத் தன்மையையும் அதன் பின்புலத்தில் இயங்கும் சமூக உளவியலையும் அடையாளம் காணத்தெரியாத ரசிகர்களும் உண்டு. ஆனால் அத்தகையதொரு பார்வையே இல்லாத மனிதன் இருக்கவே முடியாது. எனவே எவ்வித சித்தாந்த "கலர் கண்ணாடி" யும் இன்றி அழகியல் பார்வை மற்றும் படைப்பு அனுபவத்தின் வழியாக உண்மையை தரிசனம் செய்ய இயலும் என்ற இவர்களது கூற்று ஒரு மோசடி.

தங்கள் ஞானநிலைக்கு இவர்கள் அளிக்கும் விளக்கமோ நகைக்கத்தக்கது. 'நான் வேறு- படைப்பின் பரவச நிலையிலிருக்கும் நான் வேறு ஆகவே என் வாழ்க்கை வேறு- படைப்பு வேறு' என்பதே படைப்பாளிக்கும் படைப்புக்கும் இடையிலான உறவு குறித்து இவர்கள் தரும் விளக்கம். இந்த விளக்கம் இலக்கியத்தின் மீதும் உண்மையின் மீதும் அவர்கள் கொண்ட காதலிலிருந்து பிறக்கவில்லை. சுயநலமும் கோழைத்தனமும் காரியவாதமும் தளும்பி வழியும் தங்கள் இனிய வாழ்க்கையின் மீது இவர்கள் கொண்டிருக்கும் காதல் தான் இந்த தத்துவத்தைப் பிரசவித்திருக்கிறது.

தம் சொந்த வாழ்க்கை மீது மட்டுமே நாட்டம் கொண்ட மனிதர்கள் சமூகத்தில் ஏராளம். அவர்கள் பொதுநலனுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த மனிதர்களை எதிர்கொள்ள நேரும்போது கடுகளவேனும் குற்ற உணர்வு கொள்கிறார்கள். ஆனால் இந்த இலக்கிய அற்பர்களோ தங்களுடைய சுயநலத்தை இயல்பானதென்றும் பொது நலநாட்டம் என்பதே பொய் வேடமென்றும் பிரகடனம் செய்கிறார்கள். இது கடைந்தெடுத்த முதலாளித்துவ சித்தாந்தம். இதனை அம்பலப்படுத்த கம்யூனிசத்தால் மட்டுமே இயலும் என்பதாலும், மார்க்சியம் மட்டுமே இதன் மனித விரோதத் தன்மையை அம்மணமாக்குவதாலும் இந்த இலக்கியவாதிகள் தம் இயல்பிலேயே கம்யூனிச எதிர்ப்பாளர்களாக இருக்கிறார்கள். தமது கருத்தை அரசியல் பொருளாதாரத் துறைகளில் நியாயப்படுத்த முடியாதென்பதால் அழகியலுக்குள் ஒழிந்து கொள்கிறார்கள். "இலக்கியம் வேறெந்த (அரசியல்) நோக்கத்திற்குமானதல்ல, இலக்கியத்தின் நோக்கம் இலக்கியமே" என்று கொள்கை வகுக்கிறார்க்கள்.

இந்தக் கொள்கையாளர்களிடையே நடைபெற்று வருகின்ற கருத்துப் போராட்டங்களின் தன்மையைப் பார்த்தாலே இவர்களுடைய அற்பத்தனத்தைப் புரிந்துகொள்ள முடியும். பிரமிள்- சு. ரா., ஞானக்கூத்தன்- சு. ரா., ஜெயமோகன்- சு.ரா., என்ற இந்த குழாயடிச் சண்டை, நாச்சார்மட விவகாரத்தில் அதன் உச்சத்தை எட்டியது. திருவாவடுதுறை சின்ன ஆதீனத்தின் கொலை முயற்சிக்கு இணையான இந்த அற்பத்தனம் சுந்தர ராமசாமி செத்த உடனே சென்டிமென்ட்டுக்கு மாறிக் கொண்டது. "நினைவின் நதியில்" என்ற சின்ன ஆதீனத்தின் இந்த 'சுய விமர்சனத்திற்கு' வாசகர்கள் செலுத்திய காணிக்கை தலா ரூபாய் 100. இந்த அற்பவாதக் குட்டையில் குளிப்பதற்கு காசும் கொடுத்து கண்ணீரையும் கொடுத்த வாசகர்களின் ரசனைத்தரத்தை என்னவென்று சொல்ல? தமிழகமே வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்தபோது மியூசிக் அகாடமி பிடில் வாசித்துக் கொண்டிருந்தது. சு. ரா. அபிமானிகளோ அவருடைய சாவுக்கு அழுது கொண்டிருந்தார்கள். விசிலடிச்சான் குஞ்சுகள் என்று இவர்களால் இகழப்படும் ரசிகர் மன்ற இளைஞர்கள் கூட தங்களால் இயன்ற மட்டில் மக்களுக்கு உதவிக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாக இளைஞர்களின் இலக்கிய நாட்டம் என்பது அவர்களுடைய சமூக அக்கறையின் ஒரு வெளிப்பாடாகவே முகிழ்க்கிறது. அவர்களை இலக்கியத்தில் ஆழ அமிழ்த்தி முத்தெடுக்கக் கற்றுக் கொடுப்பதாகக் கூறும் சு.ரா.க்கள் தங்களது கழிவுகளால் நிரப்பியிருக்கும் அற்பவாதக் குட்டையில் இளைஞர்களை ஊறப்போடுகிறார்கள். சமூக உணர்வு மரத்த, தடித்த தோல்கொண்ட வாரிசுகளை உருவாக்குகிறார்கள். இலக்கியத்தின் உன்னதத்தையோ ரசனையின் நுண்திறனையோ இந்தக் குட்டையில் கிடப்பவர்கள் ஒருக்காலும் எட்ட முடியாது. சமூக அக்கறையும், மக்கள் நலன்மீது மாளாக் காதலும், இதயத்திலிருந்து பெருக்கெடுக்காத வரை தாங்கள் கிடக்கும் இடம் அற்பவாதக் குட்டை என்பதை யாரும் உணரக்கூட முடியாது. கம்யூனிசம் என்பது மனித குலத்தின் ஆகச் சிறந்த கனவு. அது சூக்குமமான அற உணர்வோ, சொல்லில் பிடிபடாத அழகோ அல்ல. திண்ணையும் உறக்கமும் இந்தக் கனவைத் தோற்றுவிப்பதில்லை. விழிப்பில், செயலில், வீதியில், இழப்பில், போராட்டம் எனும் உலைக்களத்தில் மட்டுமே உருகிப் பெருகும் கனவிது.

இந்நூலின் முதற்கட்டுரை அற்பவாதத்தின் நினைவுக்குட்டையை, அதன் முடைநாற்றத்தை உணரச் செய்கிறது. இது சு.ரா.வைப் பற்றியது மட்டுமல்ல, இந்தக் குட்டையில் தோன்றியிருக்கும் மற்றும் தோன்றவிருக்கும் சு. ரா.க்களுமானது என்பதை வாசகர் புரிந்து கொள்ள முடியும். மற்ற கட்டுரைகள் புதிய கலாச்சாரம் இதழில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளியானவை. கம்யூனிச எதிர்ப்பு அவதூறுகளால் நிரம்பிருக்கும் இலக்கிய மனங்களைத் தூர்வார இவை உதவும். உயிர்த்துடிப்புள்ள மனிதவாழ்வின் மணத்தையும் உங்களுக்கு அறிமுகம் செய்யும். அற்பவாதக் குட்டயில் கிடப்பவர்கள் கரையேறுங்கள். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் வைத்திருப்பவர்கள் சேற்றிலிருந்து காலை எடுங்கள்.

புதிய கலாச்சாரம் ஜனவரி, 2006 -ஆசிரியர் குழு

*நேபாளத்தில் புரட்சிகர மக்கள்..........*

8ம் பக்க தொடர்ச்சி

புற நிலையான யதார்த்தத்தில் உள்ளார்ந்த முரண்பாடுகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அறிக்கைப்படி உலகின் இரண்டாவது ஏழை நாடாக இந்த நாடு இருந்தாலும், இங்கேயே, உலகின் மிக அவலநிலையிலுள்ள வெகுசனங்கள் தமது படுபின்தங்கிய அரசியல் முறையை ஒழித்துக்கட்டுவதற்கு மிக முன்னேறிய விஞ்ஞான ரீதியான சித்தாந்தத்தைப் பிரயோகிக்கின்றனர். எனவே, இங்கு, கட்சிக்குள்ளும் வெளியிலும், அகச்சார்பான முயற்சிகட்கும் புற நிலையான யதார்த்தத்திற்கும் முரண்பாடுகள் சில இருக்கும். இன்னொரு முரண்பாடு ஏதெனில் ஒரு முனையில் மாஓவாதிகள் நாட்டின் பெரும்பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற போதும், மத்திய அரச அதிகாரம் தொடர்ந்தும் ப்ழைய அரசின் கீழ் காத்மண்டுவில் செறிந்துள்ளது. இதன் விளைவாகப் புதிய அரசு இன்னமும் முழுமையான வடிவு பெற இயலவில்லை.

கட்சி நடத்துகிற புதிய அரசினுள்ளும், அரசியல் செயல்நுட்ப வகையிலான பல குறைபாடுகள் உள்ளன. பல சமயங்களில் ராணுவ வெற்றிகள் தளப்பிரதேசங்களினதோ இருக்கும் மக்கள் அதிகாரத்தினதோ உறுதிப்படுத்தலாகவோ விரிவாக்கமாகவோ அமைவதில்லை. நீண்ட காலத்தில் இது ஒரு இராணுவப் போக்காகிக் கட்சியை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தக்கூடும். மக்கள் குழுக்கள் மிகுதியான உற்சாகத்துடன் செயற்படுவதிலான பிரச்னைகள் சில இன்னமும் உள்ளன. எதிர்பார்த்த விளைவுகளைப் பெற அரசியல் நம்பிக்கையை ஏற்படுத்துவதையோ தூண்டுதல் அளிப்பதையோ விட வலோற்காரத்தையே பயன்படுத்தும் போக்கு, குறிப்பாகப் பழைய வழக்கங்களினிடத்தில் புதியனவற்றைப் புகுத்தும் விடயத்தில் உள்ளது.

மக்கள் செயற்குழுக்கள் மேலும் அதிகாரத்துடன் சீராகச்செயற்படுமாறு கட்சிப் பணிகட்கும் மக்கள் செயற்குழுப் பணிகட்குமிடையிலான தெளிவான வேறுபாடு காணப்பட வேண்டும். பல இடங்களில், உள்ளூர் வேறுபாடுகள் போக, ஒரு சீரான ஒழுங்கு விதிகள் இனித்தான் செய்யப்படவேண்டும். மக்கள் யுத்தம் நீடித்தது என்பதைக் கருத்திற் கொண்டால், இருப்பிலுள்ள திறமைகளையும் வசதிகளையும் பல திசைகளில் சிதறடிக்காமல் மத்தியப்படுத்தி விளைபயனுள்ள பெறுபேறுகளைப் பெறுவது முக்கியமானது. எனவே மேலும் மாதிரிக் கிராமங்கள் தேவை. அரசை நடத்துவதில் மக்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கையில் அவர்களைக் கட்சி நிகழ்ச்சிகளிலும் கூட்டங்களிலும் மிகையாக ஈடுபடுத்துவதும் அவர்களை அந்நியப்படுத்தும். எனவே இயலுமான இடத்து மக்கள் செயற் குழுக்களுக்கான தேர்தல்கள் கால ஒழுங்கில் நடத்தப்பட வேண்டும். புதிய அரசு அதிகாரத்துவ மனப்பான்மைக்குப் பலியாகாமல் அதை மக்களின் கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் குறுக்கீட்டுக்கும் உட்படுத்த இது உதவும்.

இறுதியாக, புரட்சி எனும் பாட்டாளி வர்க்க விஞ்ஞானத்தைப் பாதுகாத்துப் பாவித்து விருத்தி செய்வதாலேயே நேபாளத்தில் புதிதாக உருவாகி வரும் அரசைப் பாதுகாத்து விருத்தி செய்ய இயலும். அந்த நோக்கில் "21ம் நூற்றாண்டில் சனநாயகத்தை விருத்தி செய்வது" நேபாளத்தில் நடைமுறைப்படுத்தவும் காணவும்படவேண்டும். உலகின் அதியுயர்ந்த மலையுச்சியான எவரெஸ்ற் சிகரம்மீது செங்கொடி விரியுமாறு புரட்சியெனும் பாட்டாளி வர்க்க விஞ்ஞானத்தைப் பாதுகாத்துப் பாவித்து விருத்தி செய்வது பிற புரட்சிகர கம்யூனிஸ்ற் சக்திகளதும் சர்வதேசக் கம்யூனிஸ்ற் இயக்கத்தினதும் கடமையுமாகும்.

முற்றும்

## வறுமைக்கு அதிகம் முகம்

9ம் பக்க தொடர்ச்சி

மேற்குறித்த புள்ளி விபரங்கள் பெண்களின் வாழ்க்கை நிலைகளையும் சமூக அமைப்புகளின் மூலமான ஒடுக்கு முறைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. உலகளாவிய ரீதியில் சனத் தொகையில் அரைப்பங்கினரான பெண்கள் பெண்கள் என்ற பால் நிலைக்காரணத்தினாலேயே ஒடுக்கப்படுகின்றனர். இல்லங்களில், விவசாய நிலங்களில், தொழிற்சாலைகளில், நிறுவனங்களில் காரியாலயங்களில் எல்லாம் பெண்கள் பல் வேறு நிலைகளிலே வர்க்க பால் ரீதியான சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டே வருகின்றனர். இதற்கு வெறும் பெண்ணிய நிலைப்பாடுகளும் அரசு சார்பற்ற பெண்ணிய முன்னெடுப்புகளும் வழிகாட்டமாட்டா. சமூக மாற்றத்திற்கான விடுதலைப் போராட்டத்தில் தமது பங்கையும் அவசியத்தையும் உணர்ந்து போராடுவதன் மூலமே பெண்களைப் பிணைத்திருக்கும் விலங்குகளை உடைத்து சமத்துவத்தை நோக்கி வழி நடக்க முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று13 பங்குனி 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 89

**தோழர் நா.சண்முகதாசனின் புரட்சிகர நினைவு**

இலங்கையின் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவர். நவீன திரிபுவாதத்தை எதிர்த்து புரட்சிகர நிலைப்பாட்டை வற்புறுத்தி முன்னெடுத்தவர். தொழிற்சங்க இயக்கத்தில் நேர்மையுடன் தொழிலாளி வர்க்கத்திற்கு பணியாற்றியவர். வர்க்க சமரசம் செய்யாது ஆளும் வர்க்கத்தை இறுதிவரை எதிர்த்து நின்றவர் தோழர் நா.சண்முகதாசன். அவரது 12வது நினைவு நாளில் (08-02-1994) புதிய பூமி தனது புரட்சிகர திடசங்கற்பத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

# ஆட்டம் கண்டு வரும் ஐ. தே. கட்சி
## அரசாங்கப் பக்கத்திற்குப் பாச்சல் பேச்சுவார்த்தையைக் குழப்ப முயற்சி!

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாகவே ஐக்கியதேசியக் கட்சிக்குள் பூசலும் போட்டியும் ஆரம்பித்து விட்டது. தேர்தல்தோல்வியுடன் அது மேலும் பூதாகரமாகிக் கொண்ட. ரணில் தலையைத் தாரைவார்த்து விடவேண்டும் என்ற வற்புறுத்தல்கள் அதிகரித்தன. இருந்தும் ரணிலின் பிடி தளர்வதாக இல்லை. ஒரே குத்து வெட்டுத்தான் நடைபெறுகிறது. குழுக்குழுவாகப் பிரிந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டம் நெல்லிக்காய் மூட்டை போல் காணப்படுகின்றது. கரு ஜயசூரியா, ராஜித சேனரட்ணா, ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் ரணில் தலைமைப் பதவியைத் துறக்க வேண்டும் எனவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வற்புறுத்துகின்றனர். அதேவேளை வேறு சில முக்கியமானவர்கள் ரணிலின் தலைமை தொடர வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இதனால் அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வலுவான எதிர்ப்பியக்கத்தை நடாத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

கொழும்பு மாநகரசபைத்தேர்தலில் ஏற்கனவே ஒதுங்கியிருந்த சிறிசேன குரேயை முதல் வேட்பாளராக நிறுத்தியமையும் ஐ.தே.கட்சிக்குள் மேலும் குத்துவெட்டைத் தீவிரமாக்கி விட்டுள்ளது. அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பதவி சுகம் பணம் பண்ணும் வழிவகைகள் இல்லாமையால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கப் பக்கத்திற்கு ஒருவர் பின் ஒருவராகப் பாய்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தகையோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கி அரவணைப்பதில் ஜனாதிபதி மகிந்த தாராளம் காட்டி வருகிறார். இந்நிலை தற்போதைய அமைச்சர்களின் எண்ணிக்கை நூறு அமைச்சர்களை வரை எட்டலாம் போல் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தோள்கொடுத்து நின்ற இ.தொ.கா, ம.ம.முன்னணி போன்ற மலையக "மன்னர்களும்" கடைசிநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு காலை வாரி விட்டு அரசாங்கப் பக்கத்தில் நிற்கின்றனர். ஐக்கியதேசியக்கட்சி யின் பாரம்பரிய எசமானான அமெரிக்காவும் அரசாங்கத்தை அணைத்து கொஞ்சி மகிழ்கிறது. இந்தியா ஐக்கிய தேசியக்கட்சியை அதிகம் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு பல முனைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்டம் கண்ட நிலையிலேயே காணப்படுகிறது. ஆனால் இது ஒரு தற்காலிக நிலையே தவிர ஐக்கிய தேசியக் கட்சி முடிந்தது விட்டது எனக் கொள்ள முடியாது. ஏனெனில் அது ஒரு ஆளும் வர்க்க மேட்டுக்குடிகளின் கட்சியாகும். அது உயர்வர்க்கத்தின் நலன்களுக்கான கட்சியும் ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய கட்சியுமாகும் என்ற அடிப்படை உண்மையை மறந்து விட முடியாது. ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் தன்னை சக்திப்படுத்திக் கொள்ள இரண்டு விடயங்களை முன்னெடுக்க முற்படலாம். ஒன்று வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பை முன்வைத்து வீதியில் இறங்குவது. இரண்டாவது பேச்சுவார்த்தையின் போக்கை விமர்சனம் செய்து கண்டித்து அதனை ஏதாவது வழியில் எதிர்ப்பியக்கமாக்கி செல்வாக்கைத் தேடிக் கொள்வதாகும். உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின் மேற் கூறிய வழிகளில் ஐ.தே.கட்சி பயணிக்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் புகட்டிய பாடத்திற்கு ஐ.தே.கட்சி பழிவாங்கும் உள்நோக்கில் இனவாத நெருப்பைக்கிளறி பேச்சுவார்த்தை முயற்சிகளை குழப்ப எத்தனிக்கும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

**குத்துக்கரணம் அடிக்கும்........**
1ம் பக்க தொடர்ச்சி........

என்பது தெரிந்ததே, எல்லா காரணங்களும் மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பறிப்பதற்காவே சொல்லப்படுகின்றன.

1977 முதல் மலையகத்தலைவர்கள் அரசாங்கத்டன் இணைந்து கொண்டு சாதித்தவைகள் எவை? 1977 இற்கு முன்பு வென்றெடுக்கப்பட்ட பல அடிப்படை உரிமைகள் 1977 இற்கு பிறகு இழக்கப்பட்டுள்ளன. அருள்சாமியும் சதாசிவமும் அரசாங்கத்தில் சேர்ந்து சலுகைகள் அனுபவிப்பதை பொறுக்காமல் இ.தொ.காவினரும் ம.ம.மு யினரும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு சலுகைகளை அனுபவிக்கப் பார்க்கின்றன. இதனால் அருள்சாமியும் சதாசிவமும் சலுகைகளை இழக்கநேரிடும் என்பது அவர்களின் பயம். இதனால் ஒரு தரப்பு இன்னொரு தரப்பின் மீது சேற்றை வாரி இறைத்துக் கொள்கிறது.

ஆனால் அடிப்படையில் எல்லாத்தரப்பினரும் மலையக மக்களின் தலையில் மிளகாய் அரைப்பவர்களே. அதனை மலையக மக்கள் விளங்கிக் கொண்டு சோரம் போகும் தலைமைகளை அவர்கள் தொடர்ந்து பதவிபெற்று சொகுசு வாழ்க்கையையும் வசதிகளையும் அனுபவிக்க மலையக மக்கள் துணைபோகக்கூடாது. இந்த அடிமை விசுவாசக் குத்துக் கரணத்தலைமைகளால் மலையக மக்களுக்கே அவமானம். ஏனெனில் இவர்களுக்கு ஊடாகவே முழு மலைய மக்களையும் எடைபோடசிலர் முற்படுகிறார்கள். எனவே மலையக மக்கள் தமது சுயமரியாதையையும் தன்மானத்தையும் வெளிக்காட்ட எதிர்வரும் தேர்தலில் இத்தலைமைகளுக்கு எதிராக நேர்மையான சக்திகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

## மலையகத்தில் மெழுகுவர்த்திச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்
## வடக்கு கிழக்கில் கட்சி தேர்தலில் பங்குபற்றவில்லை
# புதிய - ஜனநாயக கட்சி அறிக்கை

மலையகத்தின் நுவரேலியா, வலப்பனை ஆகிய பிரதேச சபைகளுக்கு புதிய- ஜனநாயக கட்சி சுயேட்சைக் குழு 1ல் போட்டிடுகின்றது. அதன் சின்னம் மெழுகுவர்த்தியாகும். கட்சியின் மலையகப் பிரதேசச் செயலாளர் ச. பன்னீர்ச்செல்வம் தலைமையில் வலப்பனை பிரதேச சபைக்கும் மலையக பிரதேசக் குழுவின் உறுப்பினர். டி. கே. சுதர்சன் தலைமையில் நுவரேலியா பிரதேச சபைக்கும் கட்சி போட்டியிடுகின்றது.

மலையகத் தோட்டப் பகுதிகளில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக முன்னுறுத்தி முடிந்தளவு தீர்வு காண்பதற்கும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான நிலம் வீடு வேலைவாய்ப்பு கல்வி சுகாதாரம் போன்றவற்றுக்கான கோரிக்கைகளுக்காக அரசியல் ரீதியில் மக்களை விழிப்படையச் செய்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவும் இத்தேர்தலை பயன்படுத்தும் அடிப்படையிலேயே கட்சி மேற்படி தேர்தல்களில் பங்கு கொள்கின்றது. அதேநேரம் வடக்கு கிழக்கில் ஜனநாயக சூழலோ மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க கூடிய நிலைமைகளோ இல்லை என்பதால் கட்சி அங்கு போட்டியிடவில்லை. அத்துடன் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்கு வாக்களிக்குமாறு கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**ஜேனிவா பேரச்சு**
1ம் பக்க தொடர்ச்சி

அத்துடன் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதனையும் பெரும்பிரச்சினையாக முன் வைத்தது. அவ்வாறே யுத்த நிறுத்த ஒப்பந்தம் அரசியல் அமைப்புக்கு விரோதமானதும் சட்டபூர்வமற்றதும் என்ற ஒரு சர்ச்சையை அரசாங்கத்தரப்பு கிளப்பியது நான்கு வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சுனாமிக் கட்டமைப்பை நீதிமன்றத்தில் வாதாடித் தடுத்தமை போன்று ஜெனீவாவிலும் யு.நி.ஒ (CFA) தடுக்கலாம் என்ற நப்பாசையிலேயே பேரினவாத ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா முயன்றார் போலும்.

உண்மையில் நடந்து முடிந்த பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தரப்பினருக்கு அதிக பொறுப்பும் நிதானமும் தூரநோக்கும் இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கு யுத்தமும் வரக்கூடாது தீர்வு மூலமான சமாதானமும் ஏற்படக்கூடாது என்பதே அடிப்படைக் கொள்கையாகும். இழுத்தடித்துச் செல்லும் போக்கே இன்று தேவையானதாகும். இப்பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாக அமையாது போனமைக்கு முதல் காரணம் அரசாங்கத்தூதுக்குழுவில் சென்ற கடைந்தெடுத்த பேரினவாதப் பிரதிநிதிகளேயாவர். அத்துடன் ஜெனிவாப் பேச்சுவார்த்தை பற்றி அலரி மாளிகையில் இருந்து உடனுக்குடன் ஜனாதிபதி தொடர்பு கொண்டிருந்த இரண்டு நாட்களிலும் ஜே.வி.பியின் விமல் வீரவன்சாவும் சோமவன்சாவும் உடன் இருந்து ஆலோசனை வழங்கியதாகச் செய்திகள் கூறின. அவ்வாறெனில் பேச்சுவார்தையில் அரசாங்கத்தரப்பு எவற்றை முன்வைத்து சர்ச்சைப் பட்டிருக்கும் என்பதை ஊகிக்க முடியும். இதன் மூலம் அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையும் அர்த்தமற்ற சர்ச்சைகளும் நன்கு வெளிப்பட்டன.

பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னைய பௌத்த சிங்கள மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தின் வரிசை வழியில் வந்த ஒருவரேயாவார். தனது 'மகிந்த சிந்தனை' மூலம் கௌரவமான சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்றே வாக்குறுதி அளித்திருந்தார். அது உண்மையானதும் நேர்மையானதுமாக இருந்திருந்தால் தற்போது கிடைத்திருந்த முதலாவது பேச்சு வார்த்தைச் சந்தர்ப்பத்தை உரியவாறு பயன்படுத்தி இருந்திருக்கலாம். ஆனால் அவ்வாறு எதுவும் பிரதிபலிக்கப்படவில்லை. பதிலாக பேரினவாத உள்நோக்கங்களே மேலோங்கி இருந்தன. அதன் காரணமாகவே ஜே.வி.பி ஹெல உறுமய ஆகியன பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தரப்பினர் முன்வைத்தவைகளுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர். அத்துடன் அடுத்த கட்டப்பேச்சுவார்தைக்கு முன்னெச்சரிக்கையும் செய்துள்ளனர். அவ்வாறே சிங்கள ஆங்கில ஊடகங்கள் பேரினவாத நிலைப்பாட்டைப் பாராட்டியும் உள்ளன.

எவ்வாறபயினும் அரசாங்கப்படைகளும் அவற்றுடன் இணைந்து நிற்கும் துணைப்படைகளும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் வடக்கு கிழக்கில் கொலைகள், ஆட்கடத்தல்கள், வன்முறைகள் போன்றவற்றில் சம்மந்தப்பட்டிருக்கின்றனர் என்பது எவ்வகையிலும் மறைக்கப்பட முடியாதவைகளாகும். இத்தகைய படுகொலைகள் ஆட்கடத்தல்கள் தாக்குதல்கள் ஏனைய வன்முறைகள் மேற் கூறிய தரப்புகளால் பட்டியல் தயாரிக்கப்பட்டு பரஸ்பரப் பழிவாங்கல்களாக முன்னெடுக்கப்பட்டும் வந்துள்ளன. இவற்றில் எவைற்றையும் புரிந்துணர்- யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் நியாயப்படுத்தல்களுக்கோ வக்காலத்து வாங்கப்படுவதற்கோ உரியவை அல்ல. மக்கள் இவை ஒவ்வொன்றைப்பற்றியும் அவற்றின் உண்மைத்தன்மைகள்- பொய் புனைவுகள் பற்றியும் நன்கு அறிந்தவர்களாகவே உள்ளனர்.

இந் நிலையில் ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் எதிர்பார்க்கப்பட்ட முக்கிய விடயம் என்னவெனில் கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் சுமார் 5000க்கு மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெற்று வந்துள்ளமையை அதிக கவனத்திற் கொண்டு அவற்றின் தொடர்ச்சியை உடன் தடுத்து நிறுத்தும் வழிவகைகளைக் காண்பதேயாகும். அரசாங்கம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு புலிகள் இயக்கம் ஆகியவற்றிடம் உள்ள மேற்படி யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விபரங்களில் பரஸ்பரப் படுகொலைகளின் பட்டியலே சுமார் எழுநூறுக்கு மேற்பட்டதாகக் காணப்படுகிறது. அவ்வாறே ஆட்கடத்தல்களும் ஐந்நூறுக்கு மேல் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் தாக்குதல்கள் படுகாயங்களுக்கு உள்ளானோர் பல நூறுபேராக இருக்கின்றனர் எனச் சுட்டப்படுகின்றது. இவற்றால் இடப் பெயர்வுகளும் இடப் பெற்றுள்ளன. அன்றாட வாழ்வில் அச்சம் பீதி, பதற்றம் நிலவுகின்றன.

இவை அனைத்துக்கும் முடிவு வேண்டும் என்பதையே வடக்கு கிழக்கு மக்கள் சம்மந்தப்பட்ட எல்லாத் தரப்பினரிடமும் எதிர்பார்க்கின்றனர். அதனையே கடந்த ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் மக்கள் மிகுந்த அக்கறையோடு அவதானித்துக் காத்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு கிடைத்தது ஏமாற்றமேயாகும்.

இருந்த போதிலும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு ஏப்பிரல் 19ம் 20ம் 21ம் ஆகிய திகதிகள் குறிக்கப்பட்டுள்ளமை மக்களுக்கு சிறு அளவு ஆறுதலைத் தருகின்றது. ஆனால் இக்கால இடை வெளிக்குள் மீண்டும் படுகொலை ஆட்கடத்தல் வன்முறை நடைமுறைகள் அடையாளம் காட்டாது முன்பு போல் தலைதூக்கிக் கொள்ளுமோ என்ற அச்சம் மக்களை விட்டுச் அகலாத சூழலே காணப்படுகிறது. மக்களின் இவ் அச்சத்தைப் போக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுடையதுமாகும். பேச்சுவார்த்தையின் இறுதியில் இணங்கப்பட்டவாறு எதிர்வரும் இரண்டு மாத இடைவெளியில் வன்முறைகள் எந்தவடிவத்தில் எழுவதையும் பொறுப்புடனும் மக்கள் சார்பு அக்கறையுடனும் அனுமதிக்காது தடுத்து நிறுத்துவதில் விழிப்பாக இருப்பது அவசியம் என்பதை வலியுத்துகின்றோம்.

அதே வேளை அடுத்த சுற்றுப் பேச்சின் போது அரசாங்கம் குறிப்பான விடயங்களைக் கையாளக் கூடிய பொறுப்பு மிக்க தூதுக் குழுவை அனுப்பவேண்டும். பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் நபர்களை அனுப்பி சர்ச்சைகளை உருவாக்கி பேச்சுவார்த்தையின் நோக்கத்தை திசை திருப்புவோரைத் தவிர்த்தல் அவசியம். அவ்வாறானால் மட்டுமே போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறையாக அமுல்படுத்தவும் அதனை தொடர்ந்து தீர்வுக்கான பேச்சுவார்த்தையைத் தொடரவும் வாய்ப்பு ஏற்பட முடியும்.

பேரினவாத யுத்தவெறி கொண்டசக்திகளினதும் அவர்களுக்குத் துணை நிற்கும் அந்நிய சக்திகளினதும் விருப்பு வெறுப்புகளைக் கடந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த பேச்சுவார்த்தையை அர்த்தமுள்ள தாக்குவாரா? என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இல்லையேல் மீண்டும் இரத்த ஆற்றுக் குளிப்பும் பன்முக நாசங்களுமே மேலோங்கும் என்பதை முன் உணர்ந்து செயல்படுவது அவசியம் என்பதையே வற்புறுத்துகின்றோம்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்